
கோகுலம்

GOKULAM ஜனவரி '96 ரூ. 5.00

14 பக்கப் படக்கதை!



செய்யவும் அருமை
அனுப்பவும் பெருமை!



கோகுலம்

ஜனவரி 1996
மலர் 13
இதழ் 12

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். டிசம்பர் கிறிஸ்துமஸ் இதழைப் பாராட்டி ஏராளமான வாசகர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கிறிஸ்துமஸ் வாழ்த்தும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கோகுலத்தின் வாயிலாகவே நன்றி கூறுகிறேன்.

'நான் தொடர்கதை எழுதப் போகிறேன், அனுப்பட்டுமா?' என்று திருச்சிராப்பள்ளியில் இருந்து ஒரு சிறுவன் கேட்டு எழுதியிருக்கிறான். எழுத விரும்புபவர்கள் எல்லோருக்குமே பொதுவாக இதைக் கூற விரும்புகிறேன். முதலில், சிறுகதைகளைத் திறமையாக எழுதக் கற்றுக் கொண்டு வெற்றி பெறுங்கள். அனுபவப்பட்ட பிறகு தொடர்கதை எழுத ஆரம்பியுங்கள். இதுதான் சரியான முறை.


"என்னுடைய கதையைத் திருப்பியனுப்பிவிட்டீர்களே. இதைப் போன்ற ஒரு கதை கோகுலத்தில் வந்திருக்கிறதே?" என்று திருமங்கலத்தில் இருந்து ஒரு சிறுமி கேட்டிருக்கிறாள். இதற்கு உரிய பதில், இந்தத் தங்கையின் கேள்வியிலேயே இருக்கிறது. தெப்பக்குளத்தைத் தூர் எடுப்பது போல் ஒரு நல்ல கதை வெளியாகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இதைவிட ஓர் அருமையான கதையை இதே தெப்பக்குளம் தூர் எடுப்பதை மையமாக வைத்து ஒரு தம்பி எழுதி அனுப்பி, நாங்களும் அதைக் கோகுலத்தில் வெளியிட்டால், யார் வரவேற்பீர்கள்? இப்படிப்பட்ட ஒரு கதையைச் சென்ற இதழிலேயே வெளியிட்டுவிட்டீர்களே என்றுதானே எல்லோரும் எழுதித் தள்ளுவீர்கள்? அதனால், ஒரு கதை திருப்பி அனுப்பப்பட்டால், அது நன்றாக இல்லை என்பதாகக் கருதாதீர்கள். அதைத் திருப்பி அனுப்ப இங்கே சொன்னபடி வேறு எத்தனையோ காரணங்கள் கூட இருக்கலாம். வேறு முயற்சி செய்யுங்கள்.

உங்கள் கோகுலத்திற்கு இந்த இதழுடன் 13 வயது பூர்த்தியாகிறது. எல்லோருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்!


அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)



1996 ஜனவரி இந்த இதழில்...



மலையமான் நாணயம் - பக். 81



புனுகுப்பூனை மியாவ் கத்துமா? - பக் 11



தொலைபேசி - பக்.21



ஆனந்தன் கற்ற மந்திரம் படக்கதை - பக். 41

புலியார் நடத்திய புத்தாண்டு விழா - பக். 65



"சாதா காப்பி, ஃபில்டர் காப்பி, ஸ்பெஷல் காப்பி இருக்கு, எதைப் போடச் சொல்ல?"

"புதுசா என்னமோ ஜெராக்ஸ் காப்பி வந்திருக்குதாமே, அதைப் போடச் சொல்லுங்க!"

- மு. தனகோபாலன்



"பால்காரரே, நேற்று ஏன் பால் ஊத்த வரலே?"

"எங்கள் வீட்டுப் பிள்ளையாரே எல்லா பாலையும் குடிச்சிட்டுதும்மா!"

- ஒ. சிவா



"தமிழ் படிக்க எதுக்குடா கால்கு லேட்டர் கேட்கிறே?"

"தமிழை எழுத்துக் கூட்டிப் படிக்க வேண்டியிருக்குதில்ல?"

- கே. ஸ்வரண்



ஏதாவது ஒரு வேலையைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வரும் போது, புத்தாண்டு பிறக்கட்டும், அதை முடிப்பதுதான் என் இலட்சியம் என்று முடிவு செய்வார்கள். சிறுவர் சிறுமியரும் கூட இதே போலத்தான். கோவில்பட்டிக்கு அருகே உள்ள வி. வேடப்பட்டியைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் புத்தாண்டுத் தீர்மானமாக என்ன நினைக்கிறார்கள்?

வே. பொன்கருப்பசாமி : நான் எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். எங்க வகுப்பில் மீனா, கிருஷ்ணவேணி, விமலா மூன்று பேரும் ரொம்ப நல்லாப் படிப்பாங்க. ஆனா, நான் கணக்குப் பாடத்திலே மட்டும் இந்த மூனுபேரையுமே முந்திடுவேன். தமிழ், சமூக அறிவியல், ஆங்கிலம், அறிவியல் படங்களிலும் கூட இவங்க மூணு பேரையும் முந்தனுமின்னும், ஆசைப்படுறேன். இனிமேல் எல்லாப் பாடங்களிலும் கவனமாப் படிச்சு... எல்லாப் பரீட்சையிலேயும் நான்தான் முதல் மார்க் வாங்க



• வே. பொன் கருப்பசாமி

வேண்டும் என்பதுதான் புத்தாண்டில் நான் எடுத்துக் கொள்ளும் உறுதி.



• ச. சோனா



• மு. வீராச்சாமி

வே. தேவி : எங்க அப்பா, பெரியப்பா, தாத்தா மூன்று பேருமே தினமும் நாட்டைப் பற்றியே பேசிக்கிட்டு இருப்பாங்க. தினமும் நாட்டில் இப்படி கொலை, கொள்ளை போன்ற வன்முறைகள் நடக்குதேன்னு கவலை படுவாங்க... நான் ஆறாம் வகுப்புதான் படிக்கிறேன். ஸ்கூல் விழாவில் பேச்சுப் போட்டிகளில் ஆர்வமா கலந்துக்குவேன். எங்க தாத்தா என்கிட்டே நாட்டுல்ல நடக்குற பிரச்னைகளையெல்லாம் சொல்லுவாங்க. இனிமேல் நீ பேச்சுப் போட்டியில் பேசும் போது சமுதாய பிரச்னைகள், குறிப்பாக வன்முறை அகல வேண்டியதன் அவசியம் பற்றிப் பேசணுமின்னு எழுதிக் கொடுத்திட்டாங்க. தலைவர்களைப் பற்றியே இதுவரை பேசிய நான், இனிமேல் இந்தப் புது ஆண்டில் எங்க தாத்தாவின் விருப்பப்படி சமுதாயப் பிரச்னைகளைப் பற்றியும், குறிப்பாக

புத்தாண்டில் என்ன உறுதி எடுக்கப்போகிறீர்கள்?



வன்முறை அகல வேண்டியதன் அவசியம் பற்றியும் பேசுவேன் என்று புத்தாண்டில் உறுதியெடுக்கிறேன்.

* மு. அனுராதா

மு. வீராச்சாமி : நான் ஆறாம் வகுப்புப் படிக்கிறேன். வகுப்பில் நான்தான் எப்பவுமே எல்லாப் பாடத்திலேயும் முதல் மார்க் வாங்குவேன். ஒன்னாம் வகுப்புலேயிருந்தே நான்தான் முதல் மார்க் என்றாலும், காலாண்டுப் பரீட்சையிலே ஒரு பாடத்தில் ஒரு மாணவி என்னை முந்திட்டா. எங்க அப்பா ஏண்டா சமூக அறிவியல்ல இன்னொருத்தரை முந்தவிட்டேன்னு அடிக்க வந்தாங்க. இனி எந்தப் பரீட்சையிலேயும் நீதான் பஸ்ட் வரணும். ரெண்டாவதாக வந்தால் ஓட்டல்ல டேபிள் துடைக்கும் வேலைக்குத்தான் அனுப்புவேன்னு சொல்லிட்டாங்க. அதனால, இனி எல்லாப் பாடங்களிலுமே கவனமா படிப்பேன். இதுதான் என் புத்தாண்டு உறுதி.

ச. ரேகா : எங்க பீமன் அண்ணன் என் மீது எப்பவுமே ரொம்பப் பிரியமா இருப்பாங்க. நான் என்ன கேட்டாலும் உடனே வாங்கி தந்திடுவாங்க. ஆனா நான் எங்க அண்ணனுக்கு இதுவரைக்கும் ஏதுமே வாங்கித் தந்ததே இல்லை. எங்க அண்ணனுக்குக் கல்யாணம் வருது. நான் சிறு சேமிப்பில் பணம் போட்டுக்கிட்டு வரேன். கல்யாணத்துக்கு எங்க அண்ணனுக்கு என் காசை வைத்தே நல்லதா ஒரு சட்டை எடுத்துக் கொடுக்கப் போறேன். இதுதான் என் புத்தாண்டு உறுதி.



மு. முனிசாமி

மு. முனிசாமி : நான் ஏழாம் வகுப்புப் படிக்கிறேன். எங்க அப்பா அம்மா ரொம்



* வே. தேவி



பொங்கல் வந்தது!

எங்களது அம்மா
இலையினிலே வைத்த
பொங்கலதை உண்டேன்
புதுமகிழ்வு கொண்டேன்

புதுச்சட்டை அணிந்தேன்
புன்னகையு மடைந்தேன்
புதுக்கரும்பை ஒடித்தேன்
பூப்போலக் கடித்தேன்

எங்களது அப்பா
எருதுகளின் கழுத்தில்
தொங்கவேட்டி கட்டி
துரத்தியதைக் கண்டேன்

பொங்கலும் வந்தது
பூரிப்புத் தந்தது
எங்களுக் கெல்லாம்
இன்பமும் தந்தது

– வேட்டை நல்லூர் தமிழன்பன்

பக் கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைக்கிறாங்க. எங்க ஊர்ல பள்ளில எட்டு வகுப்பு வரைக்கும்தான் இருக்கு. ஒன்பதாம் வகுப்புப் படிக்க விளாத்திகுளம்தான் போகணும் ரொம்ப செலவாகும். அதனால் எங்க அப்பாவும், அம்மாவும் எட்டு முடிச்சதும் பூக்கடைக்கு என்னை வேலைக்குப் போகச் சொல்வாங்க. அப்படித்தானே எல்லாரும் பண்றாங்க? வசதி இல்லையே? ஆசை என்பது, வசதி இருக்கா இல்லையான்னா பார்த்து ஏற்படறது? எனக்கு பெரிய படிப்பெல்லாம் படிக்கணுமின்னு ரொம்ப ஆசையா இருக்கு. கட்டாயம் எங்கப்பாவால படிக்கவைக்க முடியாது. அவருக்கு அதுக்கான வசதியில்லை. எட்டாம் வகுப்புலே ரொம்ப மார்க் எடுத்தா கவர்மெண்ட் செலவிலேயே பெரிய படிப்பைப் படிக்கலாமின்னு ரத்தினசாரும், மாரியப்ப சாரும் சொன்னாங்க. அதனால் வீண் பொழுது போக்காம இப்பவே கவனமாப் படிக்க ஆரம்பிச்சிட்டே[illegible]. எட்டாம் வகுப்புலே ரொம்ப அதிக மா[illegible] வாங்கி, விளாத்திகுளம் போய் ஒன்பதாம் வகுப்புல படிக்கணும். இதுதாங்க என் புத்தாண்டு உறுதி.

மூ. அனுராதா : நான் தமிழ்ல நல்லாப் பேசுவேன். ஆங்கிலத்தில் அத்தனை தைரியமாப் பேச வராது. எங்க ஸ்கூல்ல சுதந் திர தினவிழாவில் எட்டாம் வகுப்புப் படிக்கும் மீனா அக்கா, கிருஷ்ணவேணி அக்கா, விமலா அக்கா மூணுபேருமே பேச்சுப் போட்டியில் ஆங்கிலத்திலே பேசினாங்க. வழக்கப்படி நான் மட்டும் தமிழில் தான் பேசினேன். மீனா அக்கா, கிருஷ்ணவேணி அக்கா, விமலா அக்கா மூணு பேரும் எத்தனை அழகா; அருமையா; பட்டுக் கத்தரித்த மாதிரி ஆங்கிலத்தில் பேசினாங்க! அதை நீயும் தானே கேட்டே? அவங்க மாதிரி உன்னால் ஆங்கிலத்தில் பேச முடியு மான்னு சிநேகிதிங்க சவால் விட்டாங்க. நான் ஏத்துக்கிட்டேன். அடுத்த வருஷம் நான் எழாம் வகுப்புப் படிக்கும் போது சுதந்திர தினவிழா பேச்சுப் போட்டியில் காந்தி தாத்தாவைப் பற்றி ஆங்கிலத்திலேயே பேசி எல்லாரையும் அயர வைப்பேன்னு இந்தப் புத்தாண்டில் உறுதியெடுத்துக்கிறேன்.

பேட்டி & புகைப்படங்கள் :
வேடப்பட்டி கற்குவேல்

மந்திரப் பாத்திரம்

மாத்தளை சோமு

சீனாவில் ஒரு கிராமப்புறம். 'ஹக்டக்' என்ற சீன மனிதன் தன் வீட்டுத் தோட்டத்தில் மரங்களை நடுவதற்காக மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தான். கடப்பாறை எதன் மீதோ தட்டுப்படும் சத்தம் கேட்டது. மறுபடியும் தோண்டியபோது சத்தம் தெளிவாகக் கேட்டது. கடப்பாறை பட்ட இடத்தில் ஏதோ ஓர் உலோகப் பாத்திரம் நிலத்தில் இருக்க வேண்டும் என்பது உறுதியாகத் தெரிந்தது.

வீட்டிற்குப் போய் மனைவியை அழைத்தான்.

''நான் ஒரு பொருளைக் கண்டுபிடித்திருக்கிறேன். அதை வெளியே எடுக்க உன் உதவி வேண்டும்.''

''என்ன பொருள்?'' மனைவி கேட்டாள்.

''தெரியவில்லை. ஆனால் விலைமதிப்பு மிக்கது என்று நம்புகிறேன். உன் உதவி இருந்தால் வெளியே எடுக்கலாம்.''

மனைவி சம்மதித்து உதவ முன்வந்தாள். இருவரும் சேர்ந்து மண்ணைத் தோண்டி ஒரு பெரிய பாத்திரத்தை வெளியே எடுத்தார்கள். அதன் வாய் அகலமாக இருந்தது. மிகப் பழைமையா... உலோக பாத்திரம். ... னுள்ளே தங்கக் கா... இருக்கலாம் என்று நி...த்தான் ஹக்டக். மனை... அப்படித்தான் எதிர்ப ... தாள். ஆனால் அதனுள் ... குப்பைகளே மண் ... கிடந்தன. குப்பைகளை ... கொட்டிவிட்டு அந்... பாத்திரத்தை இரு ... ளாலும் பிடித்துத் ... இக் கொண்ட... ஹக்டக்.

ஹக்டக்கின் மனைவி சொன்னாள். "இது எதற்கு? குளிப்பதற்குப் போதாது. சமைக்கவும் பெரியது. நமக்கு வேண்டவே வேண்டாம்."

ஹக்டக் சொன்னான். "நீ கவலைப்படாதே! இதை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். விலை கொடுத்தா வாங்கினோம்? சும்மா கிடைத்ததுதானே...?"

ஹக்டக் அந்தப் பாத்திரத்தை வீட்டின் ஒரு மூலையில் வைத்தான்.

ஒருநாள் ஹக்டக்கின் மனைவி அந்தப் பழைய பாத்திரத்தைச் சுத்தம் செய்தாள். அப்போது அவளுடைய கொண்டை ஊசி அந்தப் பாத்திரத்தில் விழுந்தது. என்ன அதிசயம்! உடனே பாத்திரத்தில் இன்னொரு கொண்டை ஊசி தோன்றியது! தன்னை மறந்து அவள்



வியப்பில் கத்தினாள்.

"இங்கே ஓடி வாருங்கள்! ஓர் அதிசயம்!"

"என்ன?" - ஹக்டக் ஓடிவந்து கேட்டான்.

"என் கொண்டை ஊசி இந்தப் பாத்திரத்தில் விழுந்ததும் அது உடனே இரண்டாகி விட்டது!" என்றாள்.

ஹக்டக் ஒரு விநாடி யோசித்து, துள்ளிக் குதித்தான். பிறகு சொன்னான் : "அந்தப் பாத்திரத்தில் உன் பணப்பையைப் போடு..."

அவள் பணப்பையைப் பாத்திரத்தினுள் போட்டாள். அதிசயம்... உடனே அது இரண்டாகியது! அப்புறம் என்ன? வீட்டில் இருந்த கடலை மூட்டையைப் பாத்திரத்தின் மேலே வைத்தான் ஹக்டக்... உடனே உள்ளே இன்னொரு கடலை மூட்டை...! சந்தேகமேயில்லை. இது மந்திரப் பாத்திரம்தான் என்பது உறுதியானது. அப்புறம் அவர்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைப் போட்டு இரட்டிப்பாக்கிக் கொண்டார்கள். ஹக்டக்கும் அவன் மனைவியும் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

ஒருநாள் அந்தப் பாத்திரத்தைச் சுத்தமாக்கிக் கொண்டிருந்தாள் 'ஹக்டக்'கின் மனைவி. அப்போது ஹக்டக் கடலை மூட்டையை இரட்டிப்பாக்க வேண்டி, தோளில் சுமந்து வந்தான். அவன் வேகமாய் வந்ததில் திறந்த கதவு ஹக்டக்கின் மனைவி மீது மோதி அவளைப் பாத்திரத்தின் உள்ளே தள்ளியது. ஹக்டக் கடலை மூட்டையைக் கீழே வைத்துவிட்டு மனைவியைப் பாத்திரத்தினுள்ளிருந்து வெளியே இழுத்தான். என்ன அதிசயம்! இன்னொரு மனைவி அதனுள்ளிருந்து எழுந்து வந்தாள். இருவரும் ஒரே மாதிரியாக இருந்தார்கள்! இருவரும் ஒருவரை ஒருவர் அதிசயமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

ஹக்டக்குக்கு ஒரே அதிர்ச்சி. அவனுக்கு இன்னொரு மனைவியா? ஐயோ! வேண்டவே வேண்டாம்... உண்மையான மனைவி மாத்திரம் இருந்தால் போதும். புது மனைவி தேவையில்லை. ஆனால் இருவருள் யார் பழைய மனைவி! குழம்பினான்.

"அவளைப் பாத்திரத்தினுள்ளே தள்ளுங்கள்..." - ஒரு மனைவி கத்தினாள்.

"அவளையே தள்ளுங்கள்" - இப்பொழுது மற்றவள் கத்தினாள்.


"இருவருள் யார் என் மனைவி?" - ஹக்டக் பீதியுடன் கேட்டான்.

இரு பெண்களும் "நான்தான் - நான்தான்" என்று பெரிதாகச் சத்தம் போட்டார்கள்.

"அவளை அந்தப் பாத்திரத்தினுள்ளேயே தள்ளுங்கள். போய்த் தொலையட்டும்..." ஹக்டக்கின் நிஜ மனைவி சொன்னாள்.

"எதுக்கு? அவளையே தள்ளுங்கள்... நான் இருக்கிறேன்" என்றாள் அடுத்தவள்.

"நிறுத்துங்கள்... உங்களில் யாரை இந்தப் பாத்திரத்தில் போட்டாலும் மறுபடி இன்னொரு பெண் வருவாள் உங்களைப் போல. ஐயோ! எனக்கு மூன்று மனைவிகளா? வேண்டாம்...!" என்று அலறினான் ஹக்டக்.



எல்லோரும் குழம்பினர். பைத்தியம் பிடிக்காத குறை. அப்போது ஒருத்தி சொன்னாள்.

"அப்படியானால் இன்னொரு கணவனை வரவழையுங்கள். தன்னால் இந்தப் பிரச்னைக்கு வழிபிறக்கும்."

"எப்படி....?" - ஹக்டக்கின் கேள்வி.

"கணவன்மார்கள் மரத்தில் காய்ப்பதில்லை. ஆனால் இந்தப் பாத்திரம் தரும்."



அவன் மறுத்தான். ஆனால் அந்தப் பெண் விடவில்லை. அவனைப் பிடித்து இழுத்துப் பாத்திரத்தினுள்ளே தள்ளினாள். சில நிமிடங்களில் நிஜமான ஹக்டக் பாத்திரத்தில் இருந்து வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து இன்னொரு ஹக்டக்கும் வெளியே வந்தான். இருவருக்கும் வித்தியாசம் தெரியவில்லை. அந்த இருவரும் ஒருவரை ஒருவர் அதிசயமாகப் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு பெண்களும் மகிழ்ந்தார்கள்.

அவர்கள் ஜோடிகளாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள். அந்தப் பாத்திரம் அதன் இரகசியம் எதையும் எவருக்கும் தெரியாமல் காத்தார்கள். மேலும், தேவையில்லாமல் அவர்கள் அதைத் தொடுவதே இல்லை. அந்தப் பாத்திரம் அந்த வீட்டின் ஒரு மூலையில் சீந்துவாரின்றிக் கிடந்தது.



உங்கள் நூலகம்

மழலைத் தேன், குழ. கதிரேசன், பக். 44 ரூ. 15/- ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

எந்த ஒரு கடினமான கருத்தையும், சின்னச் சின்னக் கதைகள் வாயிலாகக் கூறி விளங்க வைப்பது இராமகிருஷ்ணர், ராஜாஜி போன்ற அறிஞர் பெருமக்களுக்குக் கை வந்த கலை. இவர்களைப் போலவே எந்த ஒரு கடினமான கருத்தையும் சந்தம் மிக்க பாடல்களால் குழந்தைகளுக்குப் புரிய வைப்பதில் ஆசிரியர் கைதேர்ந்தவராக இருக்கிறார். பாடலின் அணுகுமுறையும் கூட குழந்தைகளின் கண்ணோட்டத்திலேயே இருப்பது வியப்பாக உள்ளது. இந்தத் தொகுப்பில் இருபது பாடல்கள் இருக்கின்றன. எல்லாமே ஒன்றை ஒன்று மிஞ்சுகின்றன சந்தத்தில்.

மின்சாரத்தில் தொடர் வண்டி
மின்னல் போல ஓடுதே!
கண்ணை இமைக்கும் நேரத்தில்
காற்றாய்ப் பறந்து போகுதே!
இரவும் பகலும் மனிதரை
ஏற்றிக் கொண்டு ஓடுதே!
ஆளு ஏறும் பெட்டியின்
வாலு ரொம்ப நீளமோ!

மின்சார ரயிலின் வேகத்தை மின்னலுக்கு ஒப்பிட்டுக் காட்டும் கவிஞர், கடைசி அடிகளில் திகைப்பான நகைச்சுவையையும் இழைய விட்டிருக்கிறார். பெரிய எழுத்துப் பாடல்கள், கண்கவர் வண்ணப் படங்கள்! அச்சும் அமைப்பும் உயர் ரகம். அயல்நாட்டுப் புத்தகளுக்கு இணையான தயாரிப்பு. பரிசுக்கேற்றது.

பொன் மீன், பாணன், பக். 100, ரூ. 16/-. கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, சென்னை - 17.

இந்தத் தொகுப்பில் அருமையான தேவதைக் கதைகள் எட்டு இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். கடைசிக்கதை சிரிப்புக்கதை. கதைகளை நேரில் கூறுவது போல் அமைந்துள்ள நடை சிறப்பு அம்சம். படங்களும் உள்ளன. குழந்தைகளுக்கு என்ன கதை கூறுவது என்று தவிப்பவர்களுக்கு இது புதையல்.

உலகின் பழங்குடி மக்கள், வாண்டுமாமா, பக். 116. ரூ. 25/-. கங்கை புத்தக நிலையம், தீனதயாளன் தெரு, தி.நகர், சென்னை - 17.

எது செய்தாலும் புதுமையாகச் செய்யும் ஆற்றல் படைத்த ஆசிரியரின் சமூக இயல் (Sociology) தொகுப்பு நூல் இது. இதில் உலகின் புகழ் பெற்ற பழங்குடி மக்கள் பலரது விநோதமான வாழ்க்கை முறைகளைச் சுருக்கமாகத் தந்திருக்கிறார் ஆசிரியர். தகவல்கள் சுவையாக உள்ளன. திகைக்கவும் வைக்கின்றன. இப்படியும் இருக்குமோ என்று வியக்க வைக்கின்றன. நம் நாட்டுப் பழங்குடி மக்களான சாந்தலர்கள், தொடர்களின் குறிப்பும் உள்ளது. நல்ல பயனுள்ள நூல். புகைப் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

சின்னச் சின்ன விழுதுகளே! அரிமதி தென்னகன், பக். 108, ரூ. 20/- வெற்றி பதிப்பகம், 91, டாக்டர் பெசன்ட் சாலை, இராயப் பேட்டை, சென்னை - 14.

சிறுவர் இலக்கியம் வளர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல ஆர்வலர்கள் சிறந்த சிறுவர் இலக்கியம் படைப்போருக்குப் பரிசளிக்கிறார்கள். அத்தகைய சிறப்பான பரிசுகளில் ஒன்று, ஆண்டு தோறும் கவிஞர் செல்வ கணபதி வழங்கி வரும், "செல்லப்பன் நினைவுப் பரிசு". இதை ஏற்று நடத்தும் பொறுப்பைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஏற்றுள்ளது. அண்மையில் செல்லப்பன் நினைவுப் பரிசைப் பெற்ற தரமான குழந்தைப் பாடல் தொகுப்புதான் இந்நூல். இதைக் குறிப்பிட்டாலே போதும், இதன் தரம் விளங்கும். சிறுவர் விரும்பும் பல பொருள்களில் அழகான சந்தம் கொஞ்சும் பாடல்கள் உள்ளன. பழைய பொருள்கள், புதிய கோணங்களிலும், புதிய பொருள்களில் பாடல்களும் பல உள்ளன. கடற்கரையைப் பற்றிய பாடல்.

கடற்கரைக்குப் போகலாம்
காற்று வாங்கி மகிழலாம்.
சுண்டல் வாங்கித் தின்னலாம்
சுறு சுறுப்பாய் ஆடலாம்!
ஓடும் நண்டைப் பார்க்கலாம்
ஓடி ஓடிப் பிடிக்கலாம்
காலை நீரில் நனைக்கலாம்
கரையில் எழும்பித் துள்ளலாம்!
வீட்டைக் கட்டிக் குதிக்கலாம்
விழுந்த போதும் சிரிக்கலாம்
கடலில் கப்பல் பார்க்கலாம்
கையால் காட்டி நிற்கலாம்

ஒவ்வொரு பள்ளியிலும் இருக்க வேண்டிய நூல்.



மணி பிற்பகல் இரண்டு. ஏரியில் ஆசை தீர நீந்திக் குளித்து விட்டுத் திரும்பும் போது இலேசாகக் குளிர ஆரம்பித்து விட்டது. பாபுவைப் பார்த்ததும், குணசேகரன் வீட்டுத் தோட்டக்காரர், கொக்கியைத் தூக்கி கேட்டைத் திறந்து விட்டுச் சிரித்தார்.

"எங்க ஊர் ஏரித் தண்ணி எப்படி இருக்கு?"

புனுகுப் பூனை போல் கத்துமா?

"பிரமாதமா இருக்கு. இந்த மாதிரிக் குளியல் இனிமே மறுபடி எப்போ கிடைக்கப் போகிறதோ? ஏற்காட்டிலும் மக்கள் நெருக்கம் கூடிக்கிட்டே போகுது. ஊட்டி ஏரிக்கும், கோடைக்கானல் ஏரிக்கும் ஆகியிருக்கும் அதே அகத்த நிலை, உங்க ஊர் ஏரிக்கும் ஆகும் காலம் அதிக தூரத்தில் இல்லை. அதற்குள், இந்த ஏற்காடு நகராட்சி ஏதாவது தடுப்பு நடவடிக்கையை எடுத்தால்தான் இதன் அழகையும், தூய்மையையும் காப்பாத்த முடியும்."

"நல்லாச் சொன்னீங்க தம்பி."

வயதான தோட்டக்காரர் பாராட்டிக் கொண்டிருக்கும் போதே, அருகே புதரில் ஏதோ சலசலப்புக் கேட்டது. புதர் இலைகளுக்கு நடுவில் 'விசுக்'கென்று ஒரு சின்னத் தலை தெரிந்தது. முகத்தைத் தவிர உடலின் மீதிப் பாகம் எல்லாம் புதருக்குள் மறைந்து கிடந்தது. முகத்தைப் பார்த்தால் பூனை மாதிரியும் இருந்தது. பூனை இல்லை மாதிரியும் "டேஸ்சென்ட்" நாய் மாதிரியும் தோன்றியது!

பாபு தோளில் இருந்து காமிராவை எடுத்தான். இடக்கையால் இடுப்புத் துண்டைப் பிடித்துக் கொண்டு, வலக்கையால் காமிராவைத் தூக்கிப் பார்த்தான். காமிராவின் மிக மெல்லிய 'ஜூம்' சத்தத்தைக் கேட்டதுமே புதர் முகத்துக்கு உரிய அந்த விலங்கு, வெளியே வந்து ஓடத் தொடங்கியது.

நீண்ட முகம். குட்டைக்கால்கள். மிக நீண்ட வால். கண்டிப்பாகப் பூனை இல்லை. வேறு என்னவாக இருக்கும்?

"தம்பி, அதைப் போய் போட்டோ எடுக்கறீங்களே! அது புனுகுப் பூனை."

"அப்படியா! அப்படியானால் கண்டிப்பா போட்டோ எடுக்கணும்."

பாபு காமிராவும் கையுமாகப் பின்னாலேயே ஓடினான். "தம்பி, வேண்டாம்" என்று தோட்டக்காரர் போட்ட கூச்சலைப் பொருட்படுத்தாது பாபு அந்தப் புனுகுப் பூனையைத் துரத்தினான். அது அவனுக்குப் போக்குக் காட்டி விட்டு ஒரு வளைவில் திரும்பியது பாபுவும் விடவில்லை. ஆச்சு இதோ, மிக அருகில் வந்து விட்டான்.

அந்த நேரத்தில் திடீரென்று ஏதோ கடுமையான அருவருக்கத்தக்க நாற்றம்! அவன் முகத்தில் என்னவோ மழைத்துளி தெளித்த மாதிரி இருந்தது! உடனே ஒரே அரிப்போ அரிப்பு!

பாபு அருவருப்புடன் திரும்பி விட்டான்.

"என்ன தோட்டக்காரரே.. என்னவோ புனுகுப் பூனைன்னு சொன்னீங்க. இப்படி நாற்ற நெடி வீசுகிறதே! கைல வேற என்னமோ தண்ணீர் பட்டது. எரியுது!

ரேவதி

இதையெல்லாம் பார்க்கும் போது இது புனுகுப் பூனை தானான்னு சந்தேக மாகவே இருக்கு!''

தோட்டக்காரர் சிரித்தார்.

''தம்பி. நீங்க அதைத் துரத்திக் கிட்டுப் போனப்பவே வேண்டாம்னு எச் சரித்துத் தடுத்தேன் நான். ஆனா, நீங்க கேட் கலே. அது புனுகுப் பூனையேதான். தன் உடல் உறுப்பில் நறுமணப் பொருளான புனுகைச் சுரக்கும் இதுவேதான், தன்னைப் பகைவர் களிடம் இருந்து காத்துக் கொள்ள நாற்ற வாயுவைப் பீச்சியடித்து ஒரு நச்சுத் தன்மை கொண்ட திரவத்தையும் தெளிக்கிறது.''

''அதிசயமா இருக்கே!''

''நான் இங்கே வரதுக்கு முன்னால, ஏல மலையில் ஒரு ஜமீன்தாரிடம் வேலை பார்த்தேன். அவரிடம் ஐம்பதுக்கு மேல் புனுகுப் பூனை இருந்தது.

''அப்படியா!'' என்று வியந்த பாபு, ''நீங்க சொல்றதைப் பார்த்தா, புனுகுப் பூனையை நான் போட்டோ எடுக்கவே முடியாது போல இருக்கே?''

''அப்படித் தப்பாப் புரிந்து கொண் டால் எப்படி? எங்க பெரிய ஐயாவே ஒரு புனுகுப் பூனையை வளர்க்கிறார்.''

''யாரைச் சொல்றே? குணவீரனுடைய அப்பாவையா?''

''ஆமாம் தம்பி. அவரே ஒரு புனுகுப் பூனையை வளர்க் கிறார். பின் பக்கம் தோட்டத்துல, கொய்யா மரத்துக்குக் கீழேயே கூண்டு இருக்கு. அதை எத்தனை போட்டோ வேணும்னாலும் எடுத்துக்க.''

காமிராவுடன் பாபு வீட்டின் பின் பக்கம் விரைந்த போது, குணவீரனின் அப் பாவே எதிர்ப்பட்டார்.

''என்ன தம்பி? உன் நண்பன் கூடவே இல்லைங்கற குறை இல்லாம நல்லா கவனிக்கிறாங்களா?''

''என்ன அங்கிள் இப்படிக் கேட்கறீங்க? குணவீரன் கூடவே இல்லைன்னா என்ன? எனக்கு நீங்களோ, ஆண்ட்டியோ, இல்லே இங்கே இருக்கும் மற்றவர்களோ புதியவர் கள் இல்லையே? ரொம்ப நல்லா கவனிக்கி றாங்க'' என்று சிரித்த பாபு, ''அங்கிள், இங்கே நம்ம வீட்டுலேயே புனுகுப் பூனை இருக்காமே? நான் பார்க்கலாமா?'' என்று கேட்டான்.

''வாவா. நானும் அதைப் பார்க்கத்தான் போயிட்டிருக்கேன்,'' என்று தோட்டத்துப் பக்கம் நடந்தார் குணவீரனின் தந்தை. பாபுவும் பின் தொடர்ந்தான்.

தோட்டத்தின் பின் பக்கத்தில் கொய்யா மரத்துக்குக் கீழே, உயரமான பெரிய மேடை அமைத்து, அதில் கூண்டை வைத்திருந் தார்கள. கூண்டுக்குள், ஒரு புனுகுப் பூனை.

குணவீரனின் அப்பா புனுகுப் பூனையை உற்று நோக்கினார். ''பரசுராம்'' என்று அவர் குரல் கொடுக்கவும், தோட்டக்காரர் ஓடோடி வந்து வணங்கினார்.



''புனுகு சேர்ந்திருக்கு, நாளைக்கு மறக்காமல் கரண்டி எடுத்துடுங்க.''

''இன்னிக்கே எடுக்கலாம்னு இருந்தேன்.

''வேண்டாம். எடுத்து நாலுநாள் கூட ஆகலை. பாவம் வலிக்கும். நாளைக்கே எடுங்க.''

''சரிங்க'' என்று பதிலளித்த தோட்டக் காரர், கையில் கொண்டு வந்த கூடையில் இருந்து இலந்தைப் பழங்களை எடுத்துக் கூண்டுக்குள் போட்டார். புனுகுப் பூனை ஆவலுடன் தின்றது.

''அங்கிள், புனுகு சேர்ந்திடுச்சு, கரண்டி எடுக்கணும்னு எப்படித் தெரியுது? எதை வைச்சுக் கண்டு பிடிச்சீங்க?'' என்று கேட்டான் பாபு.

''இதன் பிறப்பு உறுப்புகளுக்கு மேல், சாம்பல் பூசின மாதிரி தெரியுது இல்லே? அனுபவப்பட்டவங்களுக்கு இது நல்லாத் தெரியும். அந்த சாம்பல் பூச்சுதான் புனுகு. கரண்டி எடுத்துடு வோம். சாதாரணமா வாரத்திற்கு ஒருமுறை கிடைக்கும். மிகவும் ஆரோக்கியமான பூனைகளா இருந்தா, வாரத்திற்கு இரண்டுமுறை கிடைக்கும்.''

''அங்கிள், இதை அசைப்பில் பார்த்தால் பூனை மாதிரியே இருக்கே!''

''பூனைக்கும் இதற்கும் நிறைய வேறு பாடு. வால், கால்கள், முகம் எல்லாமே வித்தியாமானது. பூனையின் சாயல் இருப் பதற்குக் காரணம் இதுவும் பூனைக் குடும் பத்தைச் சேர்ந்தது என்பதுதான்.''

''அப்ப இது மியாவ் கத்துமா?''

''புலி, சிங்கம் கூட பூனைக் குடும்பம் தான். அதெல்லாம் மியாவ் கத்துதா? அந்த மாதிரித்தான். இரண்டு வருஷமாச்சு. இது வரை இது மியாவ் கத்தி நான் கேட்டது இல்லை. ஆனால் மலேஷியாவில் புனுகுப் பண்ணைகளில் உள்ள சில பூனைகள் ''மியாவ்'' சத்தம் போட்டதுன்னு கேள்விப்பட்டேன். ஆனால் இதற்கு அறிவியல் அடிப்படை யில் ஆதாரம் இல்லை.''

''இது பாலைக் குடிக்குமா? எலி பிடிக் குமா?''

''இது வீட்டுப் பூனை மாதிரி மாஞ்சு மாஞ்சு எலியைப் பிடிக்காது. ஆனால் கிடைத்தால் எலி, அணில், குருவி, கோழி, பல்லி, ஓணான், தவளை, புழு பூச்சி என்று எல்லாவற்றையும் பிடித்து



அறிவியல் உண்மைகள்!

★ புனுகுப்பூனை, பாலூட்டிகள் பிரிவில், ஊன் உண்ணி வரிசையில், பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆங்கிலத்தில் (Civet Cat)

★ வீட்டுப் பூனைக்கும் இதற்கும் உருவத்தில் நிறைய வேறுபாடுகள். முகத் தோற்றம், கால்கள், வால், குரல் எல்லாமே வேறுபட்டது. ''டேஸ்சென்ட்' நாய் இனம் மாதிரி உருவம்.

★ புனுகுப் பூனைகளில் பல வகைகள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமான பண்புகள் உண்டு.

★ புனுகுச் சுரப்பி இதன் பிறப்பு உறுப்புகளுக்கு மேல் அமைந்துள்ளது. கோபம், மகிழ்ச்சி கொள்ளும் போது இது சுரந்து, சாம்பல் பூச்சைப் போல் படியும். சுரண்டி எடுப்பார்கள. ஆண் பூனையைவிட பெண் பூனைகளே அதிகமாகப் புனுகைச் சுரக்கும்.

★ எதிரிகளிடம் இருந்து தப்பிக்க இது நாற்றமுள்ள திரவத்தைப் பீய்ச்சி அடிக்கும். இது பட்டால் கண் எரியும், தோல் அரிப்பு ஏற்படும்.

★ பேராசை காரணமாக இதைக் கொன்று, இதன் புனுகுச் சுரப்பிகளை எடுத்து நல்ல விலைக்கு விற்கிறார்கள். இதன் காரணமாக இந்த இனம் குறைந்து வருகிறது.

★ வீட்டில் வளர்க்க ஏற்றது இல்லை. அன்பு காட்டவோ, அன்பை ஏற்கவோ இதற்குத் தெரியாது.

★ இந்தப் பூனையின் புனுகில் சிவெட்டோன் என்ற ரசாயனப் பொருள் உள்ளது. இதுவே நறுமணம் தருகிறது.

ஒரு கை பார்க்கும். கிடைத்தால் பாலையும் குடிக்கும். காப்பிச் செடியில் காய் பழுக்கும் போது இது ஏராளமாகத் தின்னும். மிகவும் பிடித்தது இலந்தைப் பழம்.''

''வீட்டுப் பூனை மாதிரியே இதுக்கும் பஞ்சுப் பாதம் இருக்குமா?''

''வீட்டுப் பூனையின் பாதங்கள் எதனால் பஞ்சு மாதிரி இருக்கு? தன் நகங்களைத் தேவையான போது முழுக்க வெளியே இழுத்து விடவும் உள்ளே இழுத்துக் கொள்ளவும் வசதி இருப்பதால். ஆனா, புனுகுப் பூனையால் அந்த மாதிரி முழுக்க இழுத்துக் கொள்ளவோ, வெளியே தள்ளவோ முடியாது. அதனால், அந்த அளவுக்கு மிருதுவாக இருக்காது. இதன் எல்லாக் கால்களிலும் ஐந்து விரல் இருக்கும். ஆனால், பூனைக்கு பின் கால்களில் நான்கு விரல்கள், முன் கால்களில் ஐந்து விரல்கள் இருக்கும்.''

''இந்தப் புனுகுப் பூனையால் ஏதாவது பயன் உண்டா அங்கிள்?''


''கண்டிப்பா. தோப்புகளில் வளரும் புனுகுப் பூனைகள், பழமரங்களுக்கும் இளநீர்களுக்கும் சேதம் விளைவிக்கும் அணில்களை வேட்டையாடி அழிக்கின்றன. மருந்துகள் செய்யவும், நறுமணப் பொருள்களைச் செய்யவும் இதன் புனுகு பயன்படுகிறது. புகையிலையைப் பக்குவப்படுத்திய பின், இதைக் கொண்டு மணமூட்டுகிறார்கள்.''

''பூனையைப் போல் இதை வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கலாமா அங்கிள்?''

''அதுதான் முடியாது. ஏன்னா, இது மனிதர்களுடன் ஒட்டிப் பழகும் குணமுடையது அல்ல. அன்பு காட்டவும், அன்புக்கு ஏங்கவும் இதற்குத் தெரியாது. ஓடிவிடும்.''

''அங்கிள், நீங்களும் நில்லுங்கள். உங்கள் புனுகுப் பூனையுடன் உங்களையும் சேர்த்து ஒரு போட்டோ எடுக்கிறேன்'' என்று தயாரானான் பாபு.

அழுக்குத் துணி!



மீனுக்கம்பட்டி என்று ஒரு கிராமம். அங்கே படுகருமியான கணவன் - மனைவி. இருவரும் கை கழுவி விட்டுத்தான் காக்கா விரட்டுவார்கள்! அவர்கள் வீட்டில் ஒரு வேலைக்காரி. அழகில்லாத முகம். ஆனால் அன்பும், இரக்கமும், பணிவும் நிறைந்தவள். ஒருநாள் கணவன் - மனைவி இருவரும் அவசர வேலையாக வெளியூர் போனார்கள். வீட்டை வேலைக்காரியின் பொறுப்பில் விட்டு விட்டுப் போனார்கள். அவர்கள் போன பிறகு ஒரு பிச்சைக்காரக் கிழவன் வந்தான். வேலைக்காரிக்குப் பாவமாக இருந்தது. எதை எடுத்துப் பிச்சையிட்டாலும் வீட்டுக்காரன் கோபிப்பான்.

பிச்சைக்காரனைப் பார்த்தாலோ பாவமாக இருந்தது. மனசு பொறுக்காமல் வேலைக்காரி தன் பங்கு சாதத்தில் இருந்து கொஞ்சம் கொடுத்தாள். நன்றியுடன் சாப்பிட்ட பிச்சைக்காரக் கிழவன், போகும் போது ஒரு கிழிந்த கைக்குட்டையைத் தந்து தினமும் அதில் முகம் துடைத்துக் கொள்ளச் சொன்னான்.

அந்தப் பழந்துணியைப் பார்த்ததும் வேலைக்காரிக்கு எரிச்சலாயிருந்தது. என்றாலும், அவன் சொன்னானே என்பதற்காக விளையாட்டாக தினமும் அதில் முகம் துடைத்து வந்தாள். என்ன ஆச்சரியம்! சில நாட்களில் அவள் முகம் பொலிவாகி அழகு பெற்றது!

சில நாட்களில் வீடு திரும்பிய கணவன் மனைவிக்கு வேலைக்காரியைப் பார்த்ததும் பிரமிப்பாயிருந்தது. அடித்து உதைத்த போது வேலைக்காரி உண்மையைக் கூறினாள்.

பேராசை பிடித்த கணவன், அந்த மாயத் துணியை விற்றால் அழகில்லாதவர்கள் அதிகப் பணத்திற்கு வாங்குவார்கள் என்று கணக்குப் பண்ணினான். மனைவியோ, முதலில் நமது அழகைப் பெருக்கிக் கொள்வோமென அந்த அழுக்குத் துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். கணவனும் துடைத்துக் கொண்டான். இருவர் முகமும் படுகோரமானது! மீண்டும்... மீண்டும் துடைத்துக் கொண்ட போது இன்னும் பயங்கரமாகி விட்டது. ஊரார் அவர்களைக் காட்டுக்கு விரட்டி விட்டனர்.

அழகுத் திருமுகம் பெற்ற வேலைக்காரி, கோயில் திருவிழாவுக்குப் போனாள். அங்கே மாறுவேடத்தில் வந்திருந்த அந்நாட்டு இளவரசன் அவளைத் திருமணம் செய்து கொண்டு பட்டத்து ராணியாக்கிக் கொண்டான்.

- அண்ணா அன்பழகன்

நாங்க மட்டும்

ராம்ஜி கடைத் தெரு வழியே வந்து கொண்டிருந்த போது மாமா கதிர்வேலு வந்தார். "ராம்ஜி? அம்மா, தம்பி பாலாஜி, தங்கை அபிராமி எல்லோரும் எப்படி இருக்காங்க? வீட்டுக்கு வர முடியவில்லை. ஒரு வேலை காரணமாக அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார்.

பிறகு, தம் மணிபர்ஸைத் திறந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, ராம்ஜி எவ்வளவோ மறுத்தும் அவன் கையில் திணித்து விட்டுச் சென்றார்.

அம்மாவுக்கு இது தெரிந்தால் கோபித்துக் கொள்ளுவாள். அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது.

அப்பா இறந்த பிறகு அம்மா மிகவும் கஷ்டப்பட்டு தன் மூன்று குழந்தை களையும் படிக்க வைத்து, குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறாள். ராம்ஜி மூன்றாம் வகுப்பிலும் அவன்தம்பி பாலாஜி முதல் வகுப்பிலும் படிக்கிறார்கள். தங்கை அபிராமி பாலர் பள்ளி செல்லும் துறுதுறுப்பான சிறுமி.

இத்தனை குழந்தைகளையும் வைத்துக் கொண்டு கட்டுப்பாட்டுடன் குழந்தைகளை வளர்த்து குடும்பத்தைச் சமாளிப்பது பெரிய காரியம்தான். வீட்டில் ஏதாவது பலகாரங்கள் செய்தால் ஒவ்வொருவருக்கும் கொஞ்சம் கொஞ்சம் தான் கிடைக்கும். இன்னும் கொஞ்சம் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் கிடைக்காது. வசதி அவ்வளவுதான்.

ராம்ஜிக்கு ரொம்ப நாட்களாக ஓர் ஆசை. ஹோட்டலுக்குப் போய்ப் பிடித்தமானதை வயிறாரச் சாப்பிட வேண்டும் என்பதுதான் அது. ஆனால் அது நடக்கிற காரியமாக இல்லை. இப்பொழுது மாமா பலவந்தமாகத் தந்து விட்டுச் சென்ற பத்து ரூபாய் நோட்டு அவன் மனதில் ஆசையை வளர்த்தது. கால்கள் தாமாக ஒரு ஹோட்டலுக்குள் சென்றன. ஒரு மசால்தோசையும், வடை, காபியும் சாப்பிட்டுத் தன் நெடுநாள் ஆசையை நிறைவேற்றிக் கொண்டு வீடு திரும்பினான்.

அவன் தலையைக் கண்ட உடனே "இதோ ராம்ஜி அண்ணா வந்துட்டான்" என்று கூவிக் கொண்டே பாலாஜியும் அம்மாவும், அபிராமியும் சுற்றி வந்து கூடிக் கொண்டார்கள். எதற்கு இதெல்லாம் என்று புரிய வில்லை ராம்ஜிக்கு.

"அண்ணா, மதுரையிலிருந்து நம்ம ரவி சித்தப்பா வந்திருக்கார். எல் லோருக்கும் எக்லர்ஸ் சாக்லேட் வாங்கிட்டு வந்தார். அம்மா எங்க ரெண்டு பேருக்கும் கொடுத்தாங்க. நீதான் எங்கேயோ போய்விட்டாயே! ஆனால் உன்னை விட்டுட்டு நாங்க மட்டும் தின்ன மனசே இல்லை. அதனால் நீ வந்த பிறகு தின்னலாம் என்று அப்படியே வைத்திருக் கிறோம்" என்றாள் அபிராமி.

ராம்ஜி திணறிப் போனான். அவன் மேல் அவர்கள் எவ்வளவு அன்பு வைத்திருக் கிறார்கள்! ஆனால் அவன் மட்டும் அவர்களுக்குத் தெரி யாமல் ஹோட்டலுக்குப் போய் வயிறு முட்டத் தின்று விட்டு வந்திருக்கிறானே! ராம்ஜிக்குக் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

'இனிமேல் இந்தமாதிரி அற்பத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது' என்று தனக்குள் முடிவு செய்து கொண்டான் ராம்ஜி.

— பி. சுந்தரி



எனக்கா அநீதி?

பூதலூர் முத்து

இந்த விந்தை எப்படி நடந்தது?

வகுப்புத் தலைவன் அறிவழகனுக்குக் குழப்பமாக இருந்தது. அதற்குக் காரணம் வகுப்பில் இருபதாவது இடத்தில் வரும் வேந்தன் இந்தத் தேர்வில் முதலிடத்துக்கு வந்து விட்டான்!

பின் தங்கிய இடத்தில் இருந்த ஒரு மாணவன் முதலிடம் பெறுவது அவனுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், ஒரு தேர்விலிருந்து அடுத்த தேர்வுக்குள் அந்தப் பெரியமாற்றம் எப்படி நடக்கும்?



அதனால்தான், பாலைவனத்தில் நெல் சாகுபடி என்றால் ஒரு மனிதன் எப்படி வியப்படைவானோ அதைப் போல வியப்புக்குள்ளானான்.

வகுப்பில் எப்போதும் முதலிடத்தில் வரும் நன்மாறன் இந்தத் தேர்வில் இரண்டாவது இடத்துக்குப் போய் விட்டான். சொல்லி வைத்தாற்போல நான்கு பாடங்களில் எப்படி அவனுக்கு வீழ்ச்சி நேர்ந்தது?

அறிவழகனும் அவனுடைய நண்பர்கள் சிலரும் நேராக நன்மாறனிடம் சென்றார்கள்.

அவன் அமைதியாக காந்தியடிகளின் 'சத்திய சோதனை' நூலைப் படித்துக் கொண்டிருந்தான்.

"நன்மாறா... உனக்கு எவ்வளவு பெரிய அநீதி நடந்திருக்கிறது! நீ அதைப் பற்றிக் கவலைப்படாமல் 'சத்திய சோதனை' படிக்கிறாயே...?"

"இன்று காந்தியடிகளின் நினைவு நாள். காந்தி நினைவு நாளையொட்டி மாலையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியில் நம் பள்ளி சார்பாகக் கலந்து கொள்கிறேன். அதனால்தான் இதைப் படிக்கிறேன்."

கதிர்வேல் குமுறினான்.

"உனக்கு நடந்த அநீதியைப் பற்றி நம் வகுப்பாசிரியர்... பிறகு தலைமையாசிரியர் எல்லோரிடமும் முறையிடப் போகிறோம்... அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்... எடுக்காவிட்டால் நீ இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாதே..."

"எனக்கா அநீதி! என்ன அநீதி நடந்தது? ஏன் எல்லோரும் இவ்வளவு பதற்றமாக இருக்கிறீர்கள்?"

"நன்மாறா, ஒன்றும் தெரியாதவன் மாதிரிப் பேசக்கூடாது. இந்தத் தேர்வில் நீ இரண்டாவது இடத்துக்குப் போய் விட்டாயே! அதைப் பற்றி உன்வீட்டில் யாரும் கேட்கவில்லையா?"

"கேட்டார்கள்... சொன்னேன்..."

"என்ன சொன்னாய்?"

"வேந்தன் என்ற மாணவன் இந்த முறை என்னைவிட நன்றாகப்படித்து முதலிடத்துக்கு வந்து விட்டான். இந்த முறை கொஞ்சம் கவனக் குறைவாக இருந்து விட்டேன்... இனி, இன்னும் நன்றாக முயன்று படிப்பேன்..."

"நீ கவனக் குறைவாக இல்லை. தேர்வு அறையில் இருந்த ஆசிரியர்தான் கவனமாக இல்லை. அதனால், தவளைகள் தத்துவம் பேச வந்து விட்டன. ராகம் பாடும் வண்டுகள் மௌனமாகிவிட்டன."

"கதிர்வேல்... இந்த உவமைகள் எல்லாம் வேண்டாம். நானும் மாணவன். அவனும் மாணவன்... அவ்வளவுதான். நான் ஓரளவு நன்றாகப் படிக்கிறேன் என்பதற்காக என்மீது ஒரேயடியாக நம்பிக்கையை வளர்த்திருக்கிறீர்கள். முயன்றால் எவரும் முன்னேறலாம். இந்தத் தேர்வை அவன் எப்படி எழுதினான் என்று எனக்குத் தெரியாது. அதனால் அதுபற்றி எந்தக் கருத்தும் கூற இயலாது."

"சத்திய சோதனையைப் படிக்கிறாய் அல்லவா? அதனால்தான் இப்படிப் பதில் சொல்கிறாய்..."

"அப்படியல்ல... தேர்வு நேரத்தில் வேந்தன் என்ன செய்தான் என்று எனக்குத் தெரியாது. தெரிந்தால்தானே அதைப் பற்றிச் சொல்ல முடியும்?"

அறிவழகன் சொன்னான்: 'நீ தேவையில்லாமல் அடுத்தவர் விஷயத்தில் தலையிடமாட்டாய். அதனால் உன்னை நம்புகிறேன். ஆனால், வகுப்புத் தலைவன் என்ற முறையில் எனக்குக் கடமை இருக்கிறது. வேந்தன் துண்டுத்தாளை வைத்துக் கொண்டு எழுதியிருக்கிறான். இதைக் கதிர்வேல் கவனித்திருக்கிறான். வேந்தன் செய்தது நம் பள்ளி நெறிமுறைகளுக்கு மாறானது... கண்டிக்கத் தக்கது... தண்டிக்கத் தக்கது..."

நன்மாறன் ஒரு நிமிடம் சிந்தித்தான்.

"சரி... காந்தி நினைவு நாள் நல்லவிதமா முடியட்டும்... தலைமையாசிரியர் அதிலேயே கவனமாக இருப்பார். அதற்குப் பிறகு அவரிடம் இந்தச் செய்தியைச் சொல்லலாம்..."

அறிவழகனும் மற்றவர்களும் அமைதியாகச் சென்றனர்.

வேந்தனைச் சுற்றி ஒரு கூட்டம்.

"இந்தத் தேர்வில் எப்படி உன்னால் முதலிடத்தைப் பிடிக்க முடிந்தது?"

"முதலிடம் என்ன நன்மாறனுக்கா பட்டா போட்டு வைத்திருக்கிறார்கள்? அவனை முறியடிக்க வேண்டும் என்று படித்தேன்... முதலிடத்தைப் பிடித்தேன். இனி வரும் தேர்விலும் நன்மாறனின் மூக்கை உடைப்பேன்..."



"எப்போதும் தொலைக்காட்சி, திரைப்படம், கடற்கரை, பூங்கா, கடைத்தெரு என்று நண்பர்களோடு சுற்றிக் கொண்டே இருக்கும் உன்னால் எப்படி இந்த அளவு படிக்க முடிந்தது?"

"படிப்பு... படிப்பு என்று சதா புத்தகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால் படிப்பு வராது... கொஞ்ச நேரம் படித்தாலும் மனதில் பதிய வேண்டும் என்றால் என்னைப் போல கற்ற வேண்டும்."

"ஆகா...! நல்ல கருத்து.. ஆனால் நீ சன்னல் வழியாக விட்டெறிந்த எல்லா துண்டுத்தாள்களையும் கதிர்வேல் பொறுக்கி வகுப்பாசிரியரிடம் கொடுத்து விட்டான்... இனி உடைய...

போவது யாருடைய மூக்கோ?''

வில்லவன் அப்படிச் சொன்னதும் வேந்தனின் உள்ளம் சோர்ந்து விட்டது. முகம் களை இழந்து விட்டது.

அதை மறைக்க, "இன்று முதல் மல்லி காவில் புதுப்படம். போகலாமா?" என்றான்.

அவனைத் துதிபாடும் குழு அதற்குச் சம்மதித்தது.

தலைமையாசிரியரின் அறை. அவருக்கு முன்னால் வேந்தன் நின்றான்.

அவனை அழைப்பதற்கு முன்பே அவனுடைய புத்தகங்கள்...வழிகாட்டிகள் அனைத்தும் அவருடைய மேசைக்கு வந்து விட்டன.

''நீ உன் வகுப்பில் முதலிடம் பெற்றதாக அறிகிறேன்.''

"..........''

"இந்தப் புத்தகங்கள்... வழிகாட்டிகளில் பல விடைகள் இல்லை... பல பக்கங்கள் இல்லை. எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்த இழிசெயலைச் செய்தது யார்? ஒரு நல்ல மாணவனான உன்னை அடுத்த தேர்வுக்குப் படிக்க முடியாமல் இப்படிச் செய்து விட்டார்களே? அதனால் உனக்குப் பள்ளி சார்பாக புதிய புத்தகங்களும் வழிகாட்டிகளும் தரப்போகிறேன்... மகிழ்ச்சிதானே?''


வேந்தனுடைய கண்கள் கலங்கின. அவன் எதிர்பார்த்து வந்தது வேறு. நடப்பது வேறு!

"வேந்தன், இருபதாவது இடத்தில் இருந்த நீ முதலாவது இடத்துக்கு வந்தது பெரிய சாதனை. அதைப் பாராட்டி அதற்குத் தனியாக ஒரு பரிசு அளிக்கப் போகிறேன்."

"......"

"என்னப்பா, எல்லாவற்றுக்கும் மௌனமாக இருக்கிறாய்? நான் அளிக்கப் போகும் பரிசு மிகவும் மதிப்பு மிக்கது. அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து, வாழ்நாளெல்லாம் அவனைப் போலவே சத்தியத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அப்படியே வாழ்ந்தாரே காந்திமகான். அவருடைய சுய சரிதையான 'சத்திய சோதனை'யையே உனக்கு நான் பரிசாக அளிக்கிறேன்,





"முழுப் பரீட்சையைவிட கால் பரீட்சை, அரைப் பரீட்சைன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும்."

"ஏன்... பாடம் குறைவா இருக்கும்னா?"

"ஊஹூம்; முழுப் பரீட்சைக்குப் பிறகு ரிஸல்ட் வர்ற மாதிரி மற்ற பரீட்சைகள்ல வராதே!"

— சீர்காழி வி. ரேவதி

※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※ ※

இந்தா"

சத்திய சோதனை புத்தகத்தை அவனுடைய கையில் கொடுத்தார். அந்தப் பரிசு அவனுடைய இதயத்தை அழுத்தியது. விம்மி விம்மி அழுதான் வேந்தன்.

"ஏனப்பா அழுகிறாய்?"

"ஐயா... என்மீது யாராவது புகார் சொன்னார்களா?"

"இல்லையே... உன்மீது எந்தப் புகாரும் எனக்கு வரவில்லையே..."

அதை நம்புவது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் உண்மை அதுதான்.

அறிவழகனும் கதிர்வேலுவும் வந்து சொன்ன செய்திகளைக் கேட்டார் வகுப்பாசிரியர். கிடைத்த துண்டுத் தாள்களையும் பார்த்தார்.

"இவற்றை முன்பே கொடுத்திருக்கலாமே?"

"நம் வகுப்பு மாணவர்கள் மீது நீங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அது மாறக் கூடாது என்று நினைத்தோம். வேந்தன் காப்பியடித்து இத்தனை மதிப்பெண் வாங்குவான் என்று நாங்கள் நினைக்கவில்லை. அதுமட்டுமல்ல, அவனுடைய ஆணவமும் அதிகமாகிவிட்டது. அதனால்தான் வந்தோம்..."

"எங்கள் மீதுதான் பிழை... கண்காணிப்பு நன்றாக இருந்திருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது. சரி, நான் ஆக வேண்டியதைப் பார்க்கிறேன்" என்று அவர்களை அனுப்பி வைத்தார்.

அதன்பின் நன்மாறன் ஆசிரியரைச் சந்தித்தான். "வேந்தனைத் தண்டிக்க வேண்டாம். இந்த முறை மன்னித்து விடுங்கள்" என்றான்.

அந்த வேண்டுகோளில் இருந்த பெருந்தன்மை அவரை நெகிழ வைத்தது. அவர் ஒரு திட்டத்துடன் தலைமையாசிரியரிடம் வந்தார். 'பொய்மையும் வாய்மையிடத்து' என்ற முறையில் 'வேந்தனின் புத்தகங்களை வேறு யாரோ வீணாக்கி விட்டார்கள். அதனால் அவனுக்கு உதவ வேண்டும் என்றார். வகுப்பில் முதலாவதாக வந்திருக்கும் அவனுக்கு ஒரு பரிசு தர வேண்டும் என்றும் அவரே பரிந்துரை செய்தார்.

தீமையை நன்மையால் வெல்ல முடிவு செய்த அவருடைய திட்டத்துக்கு நல்ல பலன் இருந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட வேந்தன் தலைமை ஆசிரியரைப் பார்த்து, "ஐயா, இந்த சத்திய சோதனை புத்தகத்தை நன்மாறனுக்கே பரிசாகக் கொடுத்து விடுங்கள். இதற்கு உரியவன் அவன்தான்..." என்றான்.

"அவனுக்கு ஏன் பரிசு தர வேண்டும்? அவன் இரண்டாவது இடம்தானே?..."

கண்ணீர் மல்க, நடந்ததைத் தானே விவரித்தான் வேந்தன்.

"நன்றாகப் படிப்பவன்... நல்ல பண்புள்ளவன்... அவனுடைய இடத்தைக் குறுக்குவழியில் பிடிக்க நினைத்த என்னை மன்னித்து விடுங்கள்... தவறான வழியில் நான் பெற்ற மதிப்பெண்களை நீக்கி விடுங்கள்..."

"உன் உள்ளத்தில் ஏற்பட்ட இந்த மாறுதலைக் கண்டு நான் மகிழ்கிறேன். இந்தப் பரிசுக்கு இப்பொழுது நீ முற்றிலும் உரியவன்... பெற்றுக் கொள்..."

வேந்தன் சத்திய சோதனையைப் பெற்றுக் கொண்டான். இனிமேல் படிப்பில் வென்றாலும் தோற்றாலும் நல்லவன் என்ற நினைப்பிலிருந்து நிலைமாற மாட்டான். அந்த உறுதியோடு அறையைவிட்டு வெளியே வந்தான்.


தொலைபேசி

சில தகவல்கள்


ஆழி




தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1875, ஜீன், 2. காது கேளாதோருக்கு ஆசிரியராகப் பணி யாற்றிக்கொண்டிருந்த அலெக்ஸாண்டர் கிரகாம் பெல்,- தொலைபேசியைக் கண்டுபிடித்தார். 1876-இல்தான் அது முழுமையான வடிவம் பெற்றது.



1876, மார்ச் 10-இல், தொலைபேசி நன்கு வேலை செய்தது. தொலைபேசியில் முதன்முதல் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் பேசியது இதுதான்: "மிஸ்டர் வாட்ஸன், இங்கு சற்று வந்து போங்கள். உங்கள் உதவி தேவை."
'வாட்ஸன்' அவருடைய உதவியாளர்.'



கிரகாம்பெல் கண்டுபிடித்த முதல் தொலைபேசி இது.




1882




பயன் செய்யக் கூடிய முதல் தொலைபேசி 1919

சுவரில் மாட்டக் கூடிய முதல் நவீன தொலைபேசி:1956




தொலைபேசியில் பேசுகிறவர்கள் 'ஹலோ' என்று தொடங்குகிறார்கள், அல்லவா? இந்தச் சொல்லை மாலுமிகள்தாம் ஒருவரையொருவர் மகிழ்ச்சியாக வரவேற்றுக்கொள்ளுவதற்குப் பயன்படுத்தி வந்தார்கள். தொலைபேசியில் முதன் முதலில் 'ஹலோ' என்று ஆரம்பித்துப் பேசியவர், பேசும் படம், மின்விளக்கு முதலியவற்றைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான 'தாமஸ் ஆல்வா எடிஸன்'தான். அதற்கு முன்பு பேசியவர்கள், 'நீங்கள் அங்கே இருக்கிறீர்களா? பேசுவதற்குத் தயாரா?' என்றுதான் ஆரம்பித்தார்கள்!





'டெலிபோன்' என்னும் கிரேக்கச் சொல்லுக்குத் 'தொலைதூரம் பேசுதல்' என்பது பொருள். தொலைபேசி முழுவதுமாகச் சுமார் 540 பாகங்கள் இருக்கின்றன.

தொலைபேசி எப்படி இயங்குகிறது? பேசும் குழாயின் வாய்ப் புறத்தில் மெல்லிய உலோகத் தகடு இருக்கிறது. அதற்குப் பின்னால் கரிக்கட்டையும் கரித்தூளும் இருக்கின்றன. கரித்தூளுக்குப் பின்னால் மற்றொரு கரிக் கட்டை இருக்கிறது. வாய்ப்புறத் தகட்டின் இரு பக்கங்களிலும் காந்தங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியின் வழியாக மின் ஓட்டம் நிகழும். குழாயில் பேசும்போது குரலுக்கு ஏற்ப வாய்ப்புறத் தகடு அதிர்ந்து, அதற்குப் பின்னால் உள்ள கரித்தூள்களின் அமைப்பு மாறும். அதன் பின்னே உள்ள மின் தூண்டுச் சுருளில் நடைபெறும் மின்சார ஓட்டம் கம்பி வழியாகச் சென்று கேட்போரிடம் உள்ள தொலைபேசியை அடையும்.





கேட்கும் குழாயின் நடுவில் நீட்டுப்போக்காக ஒரு காந்தம் இருக்கும். அதன் முனையில் கம்பிச் சுருள் சுற்றியிருக்கும். அந்த முனைக்கு அப்பால் மெல்லிய உலோகத் தகடு இருக்கும். பேசும் குழாயிலிருந்து ஏற்றத் தாழ்வுடன் மின்சாரம், கேட்கும் குழாயின் பின்புறத்தை அடையும். அங்கே கம்பிச் சுருளில் மின்சாரம் பாய்ந்து, காந்தசக்தி அதிகப்பட்டு, முன்னால் உள்ள உலோகத் தகட்டை அதிரச் செய்யும். இந்த அதிர்வே குரலுக்கு ஏற்ப ஒலியை உண்டாக்குகிறது; பேச்சு கேட்கிறது.




இப்படியும் ஒரு டெலிபோன் உண்டு.
பேசும் பகுதிக்குக் கீழேயே டயலும் சேர்ந்திருக்கும்.

தொலைபேசியின் பலவித வடிவங்கள்:













இப்போது பொம்மை வடிவில்கூட புதுமையான தொலைபேசிகள் வந்திருக்கின்றன!


புலி




பியானோ




ரேஸர்






கார்



லிப்ஸ்டிக்




புழு


தொலைபேசியில் பேசும்போது, மறு முனையில் பேசுகிறவர்களின் உருவத்தைத் திரையில் பார்க்கக் கூடிய தொலைபேசியை ஜப்பானில் தயாரித்திருக்கிறார்கள்! இருவரும் பார்த்துக்கொண்டே பேசலாம். அது 12 செ.மீ. திரையுள்ள டெலிவிஷனில் தெரியும்! இடையில் யாராவது ஒட்டுக்கேட்டால் அவர் முகம் 'கிராஸ்' ஆகும். ஒட்டுக்கேட்பவரைக் கண்டு பிடித்துவிடலாம்!




'வாக்கி டாக்கி' அமைப்பில், ஒயர் இல்லாத, கையடக்க தொலைபேசிகள் வந்துவிட்டன. சிக்னலை ஏற்றுக் கொள்ளக்கூடிய தொலைபேசி ஒன்று 600 மீட்டர் தொலைவுக்குள் இருந்தால் போதும்; உலகத்தின் எந்த மூலைக்கும் இந்தத் தொலைபேசியில் டயல் செய்து பேசிவிடலாம்!



சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளக்கூடிய சின்னஞ்சிறு தொலைபேசியை பிரிட்டன் டெலி கம்யூனிகேஷன் நிறுவனம் தயாரிக்கிறது. எங்கே சென்றாலும் கூடவே கொண்டு செல்லலாம்!







செயற்கைக் கோள்கள் மூலம் இயங்கும் தொலைபேசியில் உலகம் முழுவதும் பேசி விடலாம். இதற்காகச் சுமார் 130 செயற்கைக் கோள்கள் இயங்குகின்றன. இவை 36,000 கி.மீ. உயரத்திற்கு மேலே சுற்றிக் கொண்டிருக்கின்றன. பூமியில் நிறுவப்பட்டுள்ள டிஷ் ஏரியலிலிருந்து செய்தியை 'மைக்ரோ' அலைகள் பெற்றுக் கொண்டு, செயற்கைக் கோள்கள் மூலம் மற்றோர் இடத்திற்கு அனுப்புகின்றன.



மின்னணு சாதனத்துடன் மொழி மாற்றம் செய்யக்கூடிய தொலைபேசியும் வந்துவிட்டது. அமெரிக்காவில், கர்னீஜி மெல்லோன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உதாரணமாக, அமெரிக்காவில் ஒருவர், ஆங்கிலத்தில் ஜப்பானில் உள்ளவருடன் பேசினால், இந்தத் தொலைபேசி, அந்தப் பேச்சை, ஆங்கிலத்திலிருந்து ஜப்பானில் மொழி பெயர்த்துச் சொல்லும். ஜப்பானிய மொழியில் கூறும் பதிலை அமெரிக்காவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லும்!



இங்கிலாந்தில் புதிதாக ஒரு தொலைபேசியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தொலைபேசியை எடுப்பதற்கு யாரும் இல்லாவிட்டால்கூட, பேசியவர் யார்? எது பற்றி எந்த நேரத்தில் பேசினார் முதலியவற்றைப் பற்றி இதில் பதிவு செய்துவிடலாம்.



கடிகாரம் மாதிரி கையில் கட்டிக்கொண்டு ஒயர்லெஸ் மூலம் இயங்கக்கூடிய தொலைபேசியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் மூலம் உலகத்தின் எல்லா பகுதிகளுடனும் தொடர்பு கொள்ளலாம். ஆனால், இன்னும் விற்பனைக்கு வரவில்லை.

வெடிக்காத குண்டு!

அரிசி ஆலை அதிபர் வீட்டுச் செல்லப்பிள்ளை கார்த்திக், தெரு அதிரப் பட்டாசுகளை வெடித்துக் கொண்டிருந்தான். விதவிதமான பட்டாசுகள், மத்தாப்புகள், தரைச் சக்கரங்கள், பூவாணங்கள்... கண்ணைப் பறித்தன.


அத்தனையும் தீபாவளிக்கு வெடித்துத் தீர்ந்தது போக கார்த்திகைக்கு மிச்சப்படுத்தியவை!



ஏழை வீட்டுச் சிறுவன் குப்பன், ஏக்கத்தோடு அருகில் சென்று அவன் வெடிப்பதைப் பார்க்க ஆரம்பித்தான். கார்த்திக்குக் குப்பன் நிற்பது பிடிக்க வில்லை. அவனது அழுக்கு முகமும் கந்தல் ஆடையும் பார்க்கச் சகிக்கவில்லை அவனுக்கு. குப்பனை விரட்டி விட்டு அவன் வெடிகுண்டு திரிக்கு நெருப்பு வைத்தான்.

வெடிக்கத்தான் பட்டாசு வாங்கப் பணமில்லை; பார்த்து மகிழக்கூடத் தனக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று மனம் நொந்து குப்பன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

சில அடி தூரம் நடந்த பின் திரும்பிப் பார்த்தபோது, கார்த்திக் வைத்த வெடிகுண்டுத் திரி நமநமத்து அணைந்தும் அணையாமல் மின்னுவதைக் கவனித்தான்.



சில நொடிகள் கழிந்ததும் வெடிகுண்டு வெடிக்காததால், அதைக் காலால் தள்ளிவிட கார்த்திக் விரைந்தான். அதைக் கண்ட குப்பன், வேகமாய் ஓடி கார்த்திக்கைத் தள்ளிவிட்டு நகரவும் வெடிகுண்டு பெருஞ்சத்தத்துடன் வெடிக்கவும் சரியாக இருந்தது.


தான் விரட்டியும், தன்னைக் காப்பாற்ற ஓடிவந்து உதவிய குப்பனைக் கண்டு கார்த்திக் மனம் மாறினான். நல்ல குணமே அழகு; ஆடையில் எதுவுமில்லை என்பதை உணர்ந்து குப்பனிடம் நட்புக் கொண்டான்.

- ஸ்ரீபிரியா

காய் விட்டா வராது!

சுட்டிப் பையன் மணிகண்டனின் பேச்சு சமயத்தில் குபீர்ச் சிரிப்பை வர வழைக்கும்.

அன்று எங்கள் தெரு காய்கறி





காரம்மா வழக்கம்போல காலை 6 மணியளவில், "அம்மா... காயி..." என்ற குரல் கொடுத்தாள். அதைக் கேட்டு எழுந்த மணிகண்டன், "காய்விட்டா எங்கம்மா வராது. பழம்விடு..." என்றதும் அவன் குறும்பை ரசித்து காய்கறிக்காரம்மா உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம்.

- நாமக்கல் சச்சிதானந்தம்.

மணி என்ன ஆச்சு?

நாங்கள் ஆசையாக ஒரு நாயை வளர்த்தோம். அதன் பெயர் மணி. அது நோய் கண்டு இறந்துவிட்டது. அதனால் நாங்கள் அடைந்த துயரம் சொல்ல முடியாது. மணி இறந்து இரண்டு வாரம் கழித்து, எங்கள் மாமா ஊரிலிருந்து வந்தார். வந்தவுடன், தான் சென்னையில் ஒருவரைப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டு, என் தம்பியைப் பார்த்து, "மணி என்ன ஆச்சு?" (மாமா கேட்டது கடிகாரத்தில் நேரம் என்ன என்பதை) என்று கேட்டார். உடனே என் தம்பி, "மணி, செத்துப் போச்சு!" என்றான். மாமா புரியாமல் விழிக்க, நாங்கள் நாய் இறந்த துயரையும் மறந்து சிரித்தோம்.

- ப. கணேஷ்ராகவன், சென்னை-19.



வாயில்லா மாடு!

எங்கள் ஓவிய ஆசிரியர் ஆளுக்கொரு படம் வரைந்து வரச்சொல்லியிருந்தார். நாங்களும் ஆளுக்கொரு படம் வரைந்து கொண்டு வந்தோம். இதில் ஒரு குறும்புக்கார மாணவன் மாட்டின் படம் வரைந்து அவசரத்தில் வாயைப் போடாமல் கொண்டு போய்க் காட்டினான். இதைக் கவனித்த ஆசிரியர் காரணம் கேட்டார்.





அதற்கு அவன், "நீங்கள்தானே சார் சொன்னீர்கள், மாடு ஒரு வாயில்லா ஜீவன் என்று!" என்றதும் வகுப்பே சிரிப்பில் மூழ்கியது.

- இராம. முத்துகிருஷ்ணன்,
அனந்தபுரம்.

பெண்டுலம்

கிராமத்திலிருந்து எனது உறவினர் மகன் வந்திருந்தான். கலை வேலைப்பாடு மிக்க எங்கள் வீட்டுச் சுவர்க் கடிகாரத்தை ஆர்வத்துடன் பார்த்தான். "பெண்டுலம் எப்படி ஆடுகிறது?" எனக் கேட்டான்.

இயற்பியல் புத்தகத்தை எடுத்து படம் போட்டு அவனுக்கு விளக்கினேன். நன்றாகப் புரிந்தது எனத் தலையை ஆட்டினான்.

கடைசியாக "உங்களுக்கு இருக்கிற வசதிக்கும் காசுக்கும் தனியா வேலையாள் போட்டுக் கூட பெண்டுலத்தை ஆட்ட வைப்பீங்க!" என்றானே பார்க்கலாம். சிரிப்பதா, அழுவதா எனப் புரியவில்லை!


- சு. காந்திராசு,
திருவல்லிக்கேணி.

போனால் மழை பெய்யும்!

சமீபத்தில் எங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள ஒரு நண்பனின் குடும்பத்தினர் முக்கொம்புக்கு பிக்னிக் சென்றனர். கடைசிப் பையனுக்குத் தேர்வு வர இருந்ததால் அவனை மட்டும் விட்டுவிட்டுக் கிளம்ப நினைத்தனர். ஆனால் கடைசி நிமிடத்தில் மனத்தை மாற்றிக் கொண்டு 'சரி போனால் போகுது, வந்து படி. நீயும் வா' என அழைத்தனர். அதற்கு அவன் 'உறுதி'யாக மறுத்தான்.

"ஏன்?" என்று அதிசயத்துடன் அவனுடைய அப்பா கேட்டார்.

"நீங்க போகும்போது முக்கொம்பில் பலத்த மழை பெய்யணும்னு ஆண்டவன்கிட்டே ஏற்கெனவே வேண்டிட்



டேன்... அதான்...'' என்றதும் நண்பன் உட்பட எல்லோரும் சிரித்துவிட்டனர்.

- இரா. திலீப், திருச்சி - 14.


பணப்பையுமா பத்து ரூபாய்!

அன்று என் தம்பியின் பிறந்த நாள். குடும்பத்துடன் கடைவீதிக்குச் சென்றோம். எல்லாம் வாங்கி விட்டுத் திரும்பி வரும் வழியில் சாலையின் ஓரமாக ஒருவர் சிறிய பிளாஸ்டிக் கடை வைத்து இருந்



தார். ''அவர் எந்தப் பொருளை எடுத்தாலும் பத்து ரூபாய்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். வீட்டிற்குத் தேவையான சில பொருட்கள் இருக்கவே, நாங்கள் அக்கடையின் அருகில் சென்றோம். எங்கள் அம்மா, ''எந்தப் பொருள் எடுத்தாலும் பத்து ரூபாயா?'' என்று கேட்டதற்கு அவர், 'ஆமாம்' என்று சொன்னார். அதற்கு என் குறும்புக் காரத் தம்பி, ''நீங்க அந்த ஓரத்துல வச்சிருக்கிங்களே உங்களுடைய பர்ஸ், அதுவும் பத்து ரூபாய் தானா?'' என்று கேட்டான். அவனுடைய குறும்புத்தனமான பேச்சை அனைவரும் ரசித்தோம்.

- ச. மகேஷ்,
ஈரோடு - 2.




வாத்தியாருடைய வாத்து!

நான் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டு இருக்கும்பொழுது ஒருநாள் எங்களுடைய தமிழ் ஆசிரியர் 'சேர்த்து எழுதுக' எனும் பயிற்சியை நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியர், வாத்து + யாருடையது என்று கரும்பலகையில் எழுதி என் நண்பன் இராமச்சந்திரனை ''சேர்த்துப் படி'' என்றார். அவன் அவசரத்தில் வாத்தியாருடைய வாத்து என்று படித்துவிட்டான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

- இரா. விஜயகுமார்,
சோழன் மாளிகை.

கட்டுரையில் வரையவில்லை!

எனது தம்பி ஆறாம் வகுப்பு நுழைவுத் தேர்வு எழுத, பள்ளிக்குச்



சென்றான். கொடுக்கப்பட்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும் விடையெழுதினான். வீட்டிற்கு வந்த அவன், தான் தேர்வு நன்றாக எழுதவில்லை என்றான். ஏனென்று கேட்டால், "உழவனைப் பற்றிக் கட்டுரை எழுதிவிட்டேன். ஆனால் படம் வரையவில்லை" என்றான். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. விவரமாகக் கேட்டேன். கேள்வித் தாளில், 'கட்டுரை வரைக' என்று கொடுத்திருந்ததை அவன் படம் வரைய வேண்டும் என்று நினைத்துவிட்டானாம். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் சிரித்துச் சிரித்து வயிற்றுவலியால் அவதிப்பட்டோம்.

- நா. ப. ஷோபனா

இந்த சிங் யார் தெரியவில்லை!

ஒருநாள் இரவு நாங்கள் படுத்துக் கொண்டு இருந்தோம். என் தம்பி அப்பாவிடம் "அப்பா, வல்கனைசிங்



என்பவர் யார்?" என்றான். என் அப்பா, "தெரியவில்லை" என்றார். உடனே தம்பி, "ஆட்டோமொபைல் கடைகளிலெல்லாம் அவர் பெயர் இருக்கிறது, அவரைத் தெரியவில்லை என்கிறீர்களே?" என்று மறுபடி கேட்டான் அப்பாவிடம். என் அப்பா, "வல்கனைசிங் என்றால் ஒட்டுப் போடுதல் என்று பொருள்" என்று விளக்கினார். சிங் என்றதும் ஏதோ பஞ்சாபியின் பெயர் போலிருக்கிறது என்று நினைத்துவிட்ட தம்பியைப் பார்த்து அனைவரும் சிரித்தோம்.

- கே.வி. பிரசன்னா, மேலூர்.

ஆடு வந்தால் விரட்டு!

நானும் எனது சகோதரனும்




எங்கள் வீட்டு வாசல் வராந்தாவில் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தோம். எனது தந்தையார் உள் ஹாலில் படுத்துக் கொண்டிருந்தார். என் தரப்பில் நான் விளையாடி முடிந்தவுடன், எனது சகோதரர் அவர் தரப்பில் ஆடாமல் ஜன்னல் வழியாக வெளிப்பக்கமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். நான் அவரை, 'ஆடு, ஆடு' என வற்புறுத்தினேன். உடனே உள்ளே படுத்திருந்த தந்தையார் 'ஏய், ஆடு வந்தால் விரட்டாமல் ஏண்டா வேடிக்கை பார்க்கிறே?' எனக் கடிந்து கொண்டார். நடந்த வேடிக்கையைத் தெரிந்து அனைவரும் நகைத்தோம்.

- ஏ. ராகவேந்திரா,
திருக்கண்ணங்குடி

வாபஸ் சுற்று!

அன்று வெள்ளிக்கிழமை. நாங்கள் குடும்பத்தோடு கோயிலுக்குச் சென்றிருந்தோம். ஒரு பையன் பிள்ளையாரைத் தவறாக அதாவது இடம் வலமாகச் சுற்றிக் கொண்டிருந் தான். எங்களுக்கு வியப்பு. அவனை நெருங்கிக் காரணம் கேட்டோம். அவன்



சொன்னான் : "எங்கம்மா என்னை 25 சுற்றுதான் சுற்றச் சொன்னாங்க. நான் தெரியாம 35 சுற்று சுற்றிவிட்டேன். அதனால அந்த 10 சுற்றைக் குறைக்கவே இப்படிச் சுற்றுகிறேன், என்றதைக் கேட்டு அருகில் இருந்தவர்களும் சிரித்தார்கள்.

- கே. சி. கோகுலன்,
சித்தம் - 3.

ரசம் வழியாதா?


ஒருநாள் பள்ளியில் அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திவிட்டு, அடுத்த நாள் படித்துக் கொண்டு வரச் சொன்னார். மாலையில் அந்தப் பாடத்தைப் படிக்கும்பொழுது கேள்வியில், "ஆடியில் ஒருபுறம் (பாத)ரசம் பூசப்பட்டிருக்கும்" என்று படித்துக் கொண்டிருந்தேன். ஏழு வயதுத் தங்கை என்னிடம் வந்து "அண்ணா, ஆடியில் ரசம் பூசினால் வழிந்து, கீழே ஊத்திப் போயிடும்" என்றாள் அப்பாவித்தனமாக. அங்கிருந்த நான், அம்மா, அப்பா எல்லோரும் சிரித்தோம். பிறகு தங்கையிடம் அது பாதரசம் என்பதை விளக்கினேன்.



- ச. செல்வராஜ்,
குருசாமிபாளையம்.

தயிர் மாவு!

அன்று விட்டில் என் மூன்று வயதுத் தங்கை மட்டும் இருந்தாள்.



ஒரு விருந்தாளி வந்திருந்தார். தங்கை சாப்பிடச் சொல்லி இருக்கிறாள். கூடவே, "தயிர் ஊற்றவா?" என்றும் கேட்டு இட்லி சுட்டு மீதமிருந்த மாவைத் தயிர் என நினைத்து அவர் இலையில் ஊற்றிவிட்டாள். பாவம், அவர் தவித்துப் போய்விட்டார். ஆனாலும் தங்கையின் உபசரிக்கும் தன்மையை வியந்து பேசாமல் இருந்துவிட்டார். நாங்கள் இரவு வந்ததும்தான் கூறினார். ஒரே சிரிப்புதான்!

- கே. சி. கோ.,
சித்தம்பூண்டி.

எருமை முட்டை

என் சித்தி பையனுக்கு வயது 5. அவன் கோயம்புத்தூரில் இருந்து என் வீட்டிற்கு வந்திருந்தான். எங்கள் வீட்டில் இரண்டு எருமை மாடுகள்



உள்ளன. அவன் வெளியில் சிறுவர்களுடன் விளையாடிவிட்டு எங்கள் அருகில் வந்து, "அண்ணா! எருமை 'முட்டை' போட்டிருக்கிறது" என்றான். சித்தி அவனிடம், "எருமை முட்டை போடாதுடா; குட்டிதான் போடும்!" என்றார்கள். "இல்லை சித்தி, எருமை முட்டை போட்டு இருக்கிறது. எடுத்து வருகிறேன் பார்" என்று சொல்லிவிட்டு வெளியே போய் ஒரு பொருளைக் கொண்டு வந்து காண்பித்தான். அதைப் பார்த்ததும் அனைவரும் சிரித்துவிட்டோம். ஏனெனில் அவன் கொண்டுவந்தது வறட்டி. எங்கள் ஊரில் அதை எரு முட்டை என்று கூறுவார்கள். வறட்டியைப் பார்க்கும்போதெல்லாம் இன்னமும் சிரிக்கிறோம்!

- இராம. துரைகிருஷ்ணராஜா,
செஞ்சி.


என் மேலே தப்பில்ல!

அன்று எங்களுக்கு விலங்கியல் பாடம் நடந்து கொண்டிருந்தது. விலங்கியல் ஆசிரியை அமீபா பாடம் நடத்தினார். அவர், "அமீபா ஒரு செல் உயிரி. அடிக்கடி உருவத்தை மாற்றிக் கொள்ளும்" என்றார். அனைவரும் கவனமாகக் கேட்டோம். மறுநாள், விலங்கியல்



வகுப்புத் தேர்வில் அமீபா படம் வரைந்து விவரிக்கக் கேள்வி. தயாளன் என்னும் மாணவன் மட்டும் அமீபா படத்தை நன்றாக வரைய வில்லை. ஆசிரியர், "ஏன் இப்படி வரைஞ்சே?" என்று கேட்க, "என் மேலே தப்பில்லே டீச்சர். நான் ஒழுங்காத்தான் வரைஞ்சேன். உங்களிடம் கொண்டுவந்து காட்டுவதற்குள் அதுவே உருவத்தை மாற்றிக் கொண்டது" என்று சொன்னதுதான் தாமதம், ஆசிரியர் உள்பட வகுப்பே சிரித்தது.

- வெ. சரவணன்,
காவேரிப்பட்டினம்.



காந்தி தின்ற முறுக்கு!

மகாத்மா காந்தியடிகள் 1946ஆம் ஆண்டில் பழனிக்கு வந்து இருந்தார். அதற்குப் பிறகு அவர் தமிழ் நாட்டிற்கு வரவில்லை.

பழனியில் பொதுக் கூட்டத்தில் பேசினார். பொதுக் கூட்டத்திற்குப் பிறகு மலைக்குச் சென்று சுவாமியைத் தொழுதார். அவர் பெயருக்கு அர்ச்சனையும் செய்தார்கள்.

மலையில் இருந்து திரும்பிய பிறகு அடிவாரத்தில் இருந்த ஓர் ஊரில் ஒரு வீட்டில் ஓய்வாக இருப்பதற்காகத் தங்கினார். ஓய்வு என்று சொன்னாலும் மகாத்மா காந்தி சும்மா இருக்க மாட்டார். ஏதாவது எழுதுவார்; படிப்பார்; வந்த தபால்களைப் படித்துத் தெரிந்து கொள்வார்; பதிலும் எழுதுவார்.

அன்றும் அவர் ஹரிஜன் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதத்தான் உட்கார்ந்து இருந்தார். வீட்டிற்கு வந்தவருக்கு தின்னக் கொடுத்து உபசரிப்பதுதானே நமது வழக்கம்?

அந்த வீட்டில் ஒரு வயதான பெரியம்மா இருந்தார். அவருக்கு நம் வீட்டிற்கு உலகம் போற்றும் காந்தி தான் வந்து இருக்கிறார் என்று தெரியாது! வந்திருப்பவருக்கு தின்பதற்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு தட்டில் முறுக்குகளை எடுத்து வைத்து காந்தியுடன் வந்த ஒருவருடைய கையில் (அவருடைய பெயர் டாக்டர் இராமசுப்பிரமணியம்) கொடுத்து காந்திக்குக் கொடுக்கும்படி சொன்னார்.

தட்டில் வந்த முறுக்கைக் கண்ட காந்திக்கு ஒரே மகிழ்ச்சி! எப்போதோ முறுக்கைப் பார்த்து இருக்கிறார்! எப்போதோ என்றால் அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்பு! எங்கே என்று தெரியுமா? தமிழ் நாட்டில் அல்ல? ஆப்பிரிக்க நாட்டில்!

வக்கீலுக்குச் சட்டம் படித்த பிறகு காந்தி, தொழில் செய்ய ஆப்பிரிக்காவிற்குத் தான் சென்றார். சென்ற இடத்தில் வக்கீல் தொழிலைச் செய்ததுடன் இந்தியர்கள் படும் கொடுமைகளைக் கண்டு அவர்களுக்கு உதவிகளும் செய்தார். அப்போது அவருக்குத் துணையாக நின்று பேருதவி செய்தவர்கள் தமிழர்கள். அவர் நடத்திய தொடக்ககால அறப்போர்களில் அடிபட்டும் உதைபட்டும் உயிர் இழந்தும் பெரிய தியாகம் செய்தவர்கள் முதலில் தமிழர்கள் தான்!

தமிழர்களுடன் ஏற்பட்ட பழக்கத்தில் தென் ஆப்பிரிக்காவில் மகாத்மா காந்தி முறுக்கைத் தின்று சுவைத்து இருக்கிறார்!

"ஓ! இது முறுக்கு அல்லவா!" என்று காந்தி கேட்டார்!

முறுக்கைக் கொண்டு சென்றவருக்கு ஒரே ஆச்சரியம்! மகாத்மாவிற்கு முறுக்கைப் பற்றி முன்பே தெரியுமா என்று.

"உங்களுக்கு இதன் பெயர் எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"தென் ஆப்பிரிக்காவில் நான் தமிழர்களுடன் இருந்திருக்கிறேன் அல்லவா? அப்போதுதான் முறுக்கைத் தெரிந்து கொண்டேன்!" என்றார். அத்துடன் நில்லாமல் "உங்கள் சிற்றுண்டிகளிலேயே இட்லிதான் மிகவும் சிறந்தது" என்று இட்லிக்கு ஒரு பாராட்டுரையும் வழங்கினார் காந்தி.

—அழகனார்



புவனா தேடிய புதையல்

மதிஒளி

6

புவனாவைக் காணோம்!

அப்பா அம்மா வராவிட்டாலும், தனது உயிர்த் தோழியான தீபா, அவளுடைய பெற்றோர், தனது மாமா ரவி ஆகியோருடன் பயணம் செய்தது புவனாவுக்குப் பெரிதும் உற்சாகத்தை அளித்தது. செஸ் ஆட்டத்திலும், மினி கேரம் போர்டிலும், சொல் விளையாட்டிலும், பாட்டிலும், புதிர் ஆட்டத்திலும் எல்லோரும் பங்குகொண்டு, பயணத்தின் சோர்வே அறியாமல் உற்சாகமாக இருந்தனர். இவர்களைப் போலவே இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் ஓவியப் போட்டியில் பரிசு பெற்றவர்கள் வந்திருந்தனர். எல்லோருக்கும் அருமையான வரவேற்புக் கொடுத்து எல்லா வசதிகளும் நிறைந்த ஓட்டலில் தங்கவைத்து அன்போடு உபசரித்தனர்.

சித்திரமேளாவின் துவக்க விழாவுக்கு ராஜஸ்தான் மாநில ஆளுநரே தலைமை வகித்தார். அவரே ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கிப் பெருமைப்படுத்தினார். பரிசு பெற்றவர்களின் சிறு குறிப்போடு, அவர்களுடைய புகைப்படம் அடங்கிய வண்ணமடல் ஒன்றையும் வெளியிட்டார்கள். எல்லாவற்றையும் விட, பரிசு பெற்ற ஓவியங்களை அழகான கலை நுணுக்கம் நிறைந்த வண்ண பிரேம்களில் காட்சிக்காக வைத்திருந்தார்கள். மாமா ரவியின் விடியோ கேமெராவுக்கு சரியான வேலை இருந்தது.

சென்னையை விட்டுக் கிளம்பும் போது ஜெய்ப்பூருக்கு சித்திரமேளாவுக்கு மட்டுமே செல்கிறோம் என்பது வரை தான் புவனா, தீபா, தீபாவின் அம்மாவுக்குத் தெரியும். அங்கிருந்து ராம்தம்பூருக்குப் போகப் போகிறோம் என்பது டாக்டருக்

கும், ரவிக்கும் மட்டுமே தெரியும். அத்தனை இரகசியமாக அவர்கள் அதை வைத்துக் கொண்டிருந்தனர்.

விழா முடிந்த அன்றும், அதற்கு மறு நாளும் ஜெய்ப்பூரில் காண வேண்டிய கலைச் செல்வங்களை எல்லாம் ஐவரும் கண்டு வியந்தனர். ஜெய்ப்பூர் மாளிகையும், சலவைக் கல் ஆலயங்களும் பிரமிப்பைத் தந்தன.

"இவ்வளவு தூரம் சென்னையில் இருந்து வந்திருக்கிறோம். இங்கே அருகில் ராம்தம்பூர் கலைச் செல்வம் நிறைந்த நகரமாம். அங்கேயும் போய் விட்டுப் போகலாமே?" என்று தற்செயலாகப் பேச்சை எடுப்பது போல் ரவி கேட்டார் டாக்



''வள்ளுவரை விட 'ஔவை' பாட்டியே நல்லவங்கடா.''

''எப்படிச் சொல்றே?''

''ஆத்திசூடியை நமக்கு ஒரே ஒரு வரியிலேயே எழுதியிருக்காங்களே!''

— சு. கண்ணகி

டரிடம்.

"மாமா, ராம்தம்பூர் அழகு மாளிகைகளைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். போய் விட்டு வரலாமே?" என்று ஆவலுடன் கேட்டாள் புவனா.

"ராம்தம்பூர் ராஜஸ்தான் கட்டடக் கலையின் சிறப்புகள் மிளிரும் நகர்தான். சந்தேகமே இல்லை. ஆனால், ஜெய்ப்பூரைப் பார்த்த பிறகு அவை அவசியமே இல்லை என்று எனக்குப்படுகிறது" என்று வேண்டுமென்றே அவர்களுடைய உற்சாகத்தைக் குறைத்தார் டாக்டர்.

"இத்தனை தூரம் வந்து விட்டோம். புவனாவுக்கும் தீபாவுக்கும் இதெல்லாம் பிடிக்கும். அருகில்தான் இருக்கிறது என்றால் போய் விட்டு வந்து விடலாமே?" என்று புவனாவுக்குப் பரிந்து பேசினாள் டாக்டரின் மனைவி.

டாக்டரும், ரவியும் ஏற்கெனவே கார் ஏற்பாடு செய்து வைத்திருந்த உண்மை, பாவம் அவளுக்கு எப்படித் தெரியும்!

காரில் அவர்கள் ராம்தம்பூரை அடைந்த போது இருட்டி விட்டது. உள்ளூர்க்காரர்களை விட வெளியூர்க்காரர்களே அதிகமாகக் காணப்பட்டனர். பெரும்பாலும் உல்லாசப் பயணிகள். எல்லாத் தரப்பு மக்களையும் காண முடிந்தது. பெரிய ஓட்டல் ஒன்றில் அறை எடுத்துக் கொண்டு தங்கினர்.

டாக்டரின் மனைவியும், தீபாவும், புவனாவும் பயணக் களைப்புத் தீரக் குளித்துச் சாப்பிட்டனர். தூக்கம் அசத்தியது.

"நானும் ரவியும் இப்படியே காலாற வெளியே நடந்து போய் விட்டு வரலாமா என்று பார்க்கிறோம். நீங்கள் யாராவது வருகிறீர்களா?" என்று கேட்டார் டாக்டர்.

"நாங்கள் வரவில்லை. நீங்களும் ரவியும் மட்டும் போங்கள். மொழி தெரியாத புதிய ஊர், புதிய இடம். சீக்கிரம் திரும்பி விடுங்கள்" என்று அவர்களை அனுப்பி வைத்தாள் டாக்டரின் மனைவி.

ஒரு சைக்கிள் ரிக்ஷாவைப் பேசிக் கொண்டு டாக்டரும் ரவியும் கிளம்பினர். கண்கவர் வண்ணங்களில் ராஜஸ்தான் மக்களுக்கு இருந்த அளவில்லாத ஈடுபாடு திகைப்பூட்டுவதாக இருந்தது. பூங்காக்களில் உள்ள மரங்களுக்குக் கூட வண்ணம் பூசி இருந்தார்கள். வேலைப்பாடு செய்யாத ஆடைகளை அணிந்தவர்கள் ஒருவர் கூடக் கண்ணில் படவில்லை. மிளகு போட்ட பப்படத்தை நிறுத்து வாங்கி ஆங்காங்கே மக்கள் தின்று கொண்டிருந்தார்கள். இதே போல இனிப்பு பூந்தியையும், பால்கோவாவையும் விதம்விதமான அளவுகளில் தட்டுத் தட்டாக அடுக்கி விற்றுக் கொண்டிருந்தார்கள். பாரவண்டிகளை ஒட்டகங்கள் இழுத்துச் சென்ற காட்சியை இருவரும் வியப்புடன் பார்த்தனர்.

இருட்டி விட்டது என்றாலும் கடை வீதிகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

"சார், ராம்தம்பூர் அரண்மனைகளின் அற்புதக் காட்சிகள் நிறைந்த புகைப்பட ஆல்பம் வேண்டுமா சார்? ஐம்பது கலர்



போட்டோக்கள் எழுபது ரூபாய்'' என்று அரைகுறை ஆங்கிலத்தில் விற்பனை செய்ய முயன்றார் ஒரு தலைப்பாக்காரர்.

ஒரு திறந்த பெட்டியைக் கயிற்றால் கட்டி கழுத்தில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருந்தார் அவர். பெட்டியில் விதம்விதமான அளவுகளில் போட்டோ ஆல்பங்கள்.

“இங்கே பார்க்க வேண்டிய அரண்மனைகள் எத்தனை இருக்கு?'' என்று கேட்டார் டாக்டர்.

“நிறைய இருக்கு. பெரியது ராணி மாளிகை. சுற்றிப் பார்க்க இரண்டு நாள் கூடப் போதாது. இருந்தாலும் இதில் பார்க்க வேண்டிய முக்கியமானவை என்று சிலவற்றைப் போட்டோ எடுத்திருக்கிறார்கள். குறிப்பும் இருக்கு. எப்படிப் போக வேண்டும் என்ற வழிகாட்டும் தகவல்களும் இருக்கு'' என்றார் தலைப்பாக்காரர்.

“நாம் பார்க்க வேண்டும் என்று தேடி வந்த அரண்மனை எது என்பதைக் கண்டு பிடிப்பது பெரிய காரியமாக இருக்கும் போல இருக்கே!" என்று குழம்பினார் ரவி.


“இவரிடம் உள்ள எல்லா ஆல்பங்களையும் புரட்டிப் பார்த்து விடுவோம். வீடியோ காட்சி நினைவிருக்கிறது அல்லவா? அவை எங்கேயாவது இருக்கிறதா என்பதைப் பார்ப்போம்'' என்றார் டாக்டர்.

“இருவரும் ஆளுக்கு ஓர் ஆல்பத்தை எடுத்துப் புரட்டினார்கள். அரைமணி ஓடி விட்டது சலித்துப் போன நிலையில் ரவியின் கையில் அந்த ஆல்பம் சிக்கியது.

“டாக்டர், இதேதான். கலை கொஞ்சும் கூடம், வெள்ளி மணிச்சரம் கட்டிய சோபா ஊஞ்சல், குழப்பம் நிறைந்த மாடிப்படி எல்லாம் இதில் இருக்கு. வீடியோவில் கண்ட மாளிகை இதுவேதான். இவைகளில் அன்னத்தின் சின்னம் எத்தனை அழகாக இருக்கிறது பாருங்கள்!" என்று டாக்டரிடம் காட்டினார் ரவி.

“இந்த மாளிகை எங்கே இருக்கு?''

“இது வந்து மகா ராணியின் கோட்டை மாளிகை. மர்மம் நிறைந்தது என்று வர்




ணிக்கப்படுவது. இரகசியச் சுரங்கங்கள், பாதாளச் சிறை, முதலைக் கிணறு எல்லாம் இதில்தான் இருக்கின்றன. அதோடு புதையல்கள் வேறு இருக்கிறதாம். அதற்காக சட்டவிரோதமாகப் புகுந்து தோண்டிப் பார்க்கும் கூட்டம் இதில் மறைந்து வாழ்கிறது. ஆனால், இதுவரை யாருக்கும் புதையல் கிடைத்ததாகத் தகவல் இல்லை. இருந்தாலும் இன்னும் தேடும் முயற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.''

இரண்டு ஆல்பங்களை வாங்கிக் கொண்டு தலைப்பாக்காரரின் உற்சாகத்தை ஊக்குவித்த ரவி, வாயைக் கிளறி அதிகத் தகவல்களைப் பெற முயன்றார்.

''மாளிகையை முழுக்க சுற்றிப் பார்க்க அனுமதிப்பார்களா?''

''முன்பெல்லாம் அனுமதிக்க மாட்டார்கள். பொது மக்கள் காண்பதற்கு என்று சித்ரகூடம், கலைக்கூடம், அரசசபை, கோவில்களுக்கு மட்டுமே அனுமதி இருந்தது. அதற்குக் கட்டணமும் உண்டு. மூன்று ஆண்டுகளுக்கு முன் பம்பாயில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம், இந்த மாளிகையையும் பாதித்திருக்கிறது. கட்டட வல்லுனர்கள் இவற்றின் அஸ்திவாரத்தை சோதித்துப் பார்த்ததில், இது எப்பொழுது வேண்டுமானாலும் தகர்ந்து விழலாம் என்று கூறி விட்டார்கள். மன்னரின் வாரிசுகள் இதை எதிர்த்து அஸ்திவாரத்தை பலப்படுத்த ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பரிசோதித்தார்கள். அயல்நாடுகளில் இருந்து கூட நிபுணர்கள் வந்தார்கள். ஒன்றும் இயலாது என்று அவர்களும் கைவிரித்து விட்டார்கள். இதை வாழும் மாளிகையாக வைத்துக் கொள்ளாமல், கலை ஆர்வம் உள்ளோர் வந்து கண்டுகளிக்கும் காட்சி மாளிகையாக வைத்துக் கொள்ளலாம் என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டது. இதன்படி மன்னரின் வாரிசுகளைச் சேர்ந்த குடும்பங்கள் மாளிகையைக் காலி செய்து விட்டனர். மேல்மட்டத்தில், தாங்கிகளைக் கட்டி கட்டணம் வாங்கிக் கொண்டு இப்பொழுது பொது மக்களை மாளிகை



யின் எல்லாப் பகுதிகளுக்குமே அனுமதிக்கிறார்கள். இரண்டு பங்கு கட்டணம். போட்டோ எடுக்க தனிக் கட்டணம்."

நிறுத்தி மூச்சு விட்ட தலைப்பாகை, "இந்த ஏற்பாடு கூட இன்னும் நான்கு ஆண்டுகளுக்குத்தான். அதற்குப் பிறகு இதை இடித்தே ஆக வேண்டும் என்று அரசு உறுதியாக உத்தரவிட்டு விட்டது" என்று முடித்தார்.

"இடித்து விட்டு என்ன பண்ணப் போகிறார்கள் இங்கே?"

"இதில் உள்ள கலைப் பொருள்களைத் தனியே எடுத்து கலைக்கூடம் கட்டி வைக்கப் போகிறார்கள். அதோடு இங்கே அரசவாரிசுகள் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலையும் கட்ட இருக்கிறார்கள்."

தலைப்பாகை தெரிவித்த கூடுதல் தகவல்களுக்காக இன்னும் ஒரு பத்து ரூபாயைக் கொடுத்து விட்டு இருவரும் கிளம்பினர்.

"நாம் அறிந்த தகவல்களைப் பற்றி புவனாவிடம் எதுவும் கூற வேண்டாம். இந்தப் புகைப்பட ஆல்பங்களை அவள் காணும்படி வைப்போம். அதைப் பார்த்த பிறகு அவளுக்கு ஏற்படும் பாதிப்பைக் கவனிக்கலாம்" என்றார் டாக்டர். ரவி தலையாட்டினார்.

காலையில் எழுந்து பல் விளக்கியதும் புவனா திபா கண்ணில் பட்டவை ஆல்பங்கள்தான். ஆர்வத்துடன் இருவரும் புரட்டினார்கள். டாக்டரும், ரவியும் புவனாவின் முகத்தையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

முதலில் வியப்புக் குறி. பிறகு முகம் தீவிரமாகியது. பிறகு திகைப்பு.

"மாமா, அந்தப் பழைய வீடியோவில் இருந்த மாளிகை, சந்தேகமே இல்லாமல்

இதுவேதான். என்னை இங்கு கூட்டிக் கொண்டு போகிறீர்களா?'' நிறுத்தி நிதானமாகக் கேட்டாள் புவனா. முகத்தில் தீவிரம் குறையவில்லை.

"கண்டிப்பாக அம்மா. எல்லோருமே போகலாம்" என்றார் ரவி.

குளித்து டிபன் சாப்பிட்டதும் எல்லோரும் தயாராயினர். டாக்டர் முன்னெச்சரிக்கையாக மாத்திரை மருந்துகளைக் கைப்பையில் வைத்துக் கொண்டார்.

டாக்ஸி எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். டாக்ஸி டிரைவரிடம் இடத்தைச் சொன்னதுமே அவன் புரிந்து கொண்டு, கலகலப்பாக ஹிந்தியில் பேச ஆரம்பித்து விட்டான். அரைகுறை ஹிந்தி அறிவை வைத்துக் கொண்டு ஓரளவு அவன் பேசுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. கோட்டை அரண்மனையை சுற்றிப் பார்க்க நிறையக் கும்பல் வருவதாகவும், அரண்மனையைப் பார்க்கத்தான் கூட்டம் வருகிறதா இல்லை புதையல் தேடத்தான் கூட்டம் வருகிறதா என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை எனவும் சொன்னான்.

''தாத்தா! பரீட்சை சமயத்துல அப்பாவுக்கு ஜுரம் வருமா தாத்தா?''

''ஆமாடா கண்ணு... யார் சொன்னது உனக்கு?''

''இல்ல... எனக்கும் கூட ஜுரம் வருதேன்னு கேட்டேன்!''

– சீர்காழி. வி. ரேவதி



டிரைவர் கூறியதை புவனாவுக்கு மொழிபெயர்த்துக் கூறிய ரவி, "புவனா.. பாரேன் இந்த் டிரைவர் சொல்வதை... புதையல் இருக்குன்னு சொல்றதெல்லாம் சும்மா பொய்யாகத்தான் இருக்குமாம்...! மக்கள் நிறைய வர்றதால கிடைக்கிற வருமானத்தை மனதில் வைத்து, அரசவாரிசுகளே இப்படிப் பொய்யான செய்தியைப் பரப்பி விட்டிருப்பாங்க போல இருக்குன்னு உள்ளூர்வாசியான இவனே கருத்துச் சொல்றான்" என்று சொல்லிச் சிரித்தார்.

பேசிக் கொண்டிருக்கும்போதே கோட்டை மதில்கள் தெரிந்தன. அதற்குப் பின்னால் மிகக் கம்பீரமான அரண்மனை! அரண்மனையின் அருகே அலுவலகத்தின் முன் டாக்ஸி நின்றது. டாக்ஸியைக் காத்திருக்கும்படி கூறி விட்டு எல்லோரும் இறங்கிக் கொண்டார்கள்...

கேஸட்டில் பார்த்த அதே இடம்... அதே அரண்மனைத் தோற்றம். அதே முன்வாயில்... ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொருவிதமான உணர்வு மெல்ல எழும்பியது.

நான்கு பேருக்கும் உரிய கட்டணத்தைக் கொடுத்து விட்டு, டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டார்கள்... ஒன்றாக உள்ளே நுழைந்து வரிசையில் நின்று கொண்டார்கள்.

கூட்டம் உண்மையில் அதிகமாகத்தான் இருந்தது. ரவிக்கு அந்த டாக்ஸி டிரைவர் கூறியதுதான் நினைவுக்கு வந்தது. சிரித்துக் கொண்டார். கேஸட்டில் பார்த்ததை விட, இப்போது நேரில் பார்க்கும் போது இன்னும் பேரழகோடு காட்சியளித்தது அந்த அரண்மனை.

அழகழகான ஸாண்ட்லியர்களும், பெயிண்ட் செய்யப்பட்ட பீங்கான் ஜாடிகளும், லேஸ் பின்னியது போல செதுக்கப்பட்ட சலவைக் கல் தூண்களும், முகம் தெரியும் அளவு பளபளப்பாகக் காணப்பட்ட மரக்கதவுகளும், அதன் சிற்ப வேலைப்பாடுகளும், பஞ்சலோகச் சிலைகளும், ரத்ன கம்பளங்களும், தரை விரிப்புகளும், அலங்காரக் கண்ணாடிகளும், சிம்மாசனமும்.. அப்பப்பா... காணக் கண்கள் இரண்டும் போதவேயில்லை. ரவி ஒவ்வொன்றையும் நிதானமாக, நேரம் எடுத்துக் கொண்டு பார்த்தார்.

அந்தச் சூழ்நிலையில் டாக்டருக்குக் கூட புவனாவின் உடல்நிலை காரணமாகத்தான் அந்த இடத்துக்கு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் மறைந்து விட்டது. அந்த அளவுக்கு அரண்மனையில் அழகு கொஞ்சியது. ஆர்வத்துடன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

டாக்டர் மட்டும் அவ்வப்போது புவனாவின் முகமாற்றங்களைக் கவனித்தபடியே வந்தார். மிகவும் பழகிய இடம், தெரிந்த இடத்துக்கு வந்துள்ளதைப் போன்ற உணர்வேதான் புவனாவின் முகத்தில் தோன்றியது. அதிலும் ஒரு தீவிரம் நிறைந்திருந்தது.

க்யூவில் பலரும் சென்று ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே நகர்ந்து செல்ல, புவனா மட்டும் அடுத்தடுத்து வேகமாக நகர்ந்து கொண்டிருந்தாள்.

ராஜஸ்தான்தான் வெள்ளி ஃபிலிக்ரி நகைகளுக்குப் பெயர் போனதாயிற்றே... ராணியார் உபயோகித்த வெள்ளி நகைகள், ஜாதிக்கல் மாலைகள் இவைகள் ஒரு புறமும், கண்ணாடி, ஜம்க்கி, ஜரிகை வேலைப்பாடு செய்த ஆடைகள் ஒரு புறமும், அழகு சாதனங்கள் ஒருபுறமுமாக அழகாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அதைப் போலவே அரண்மனையில் உபயோகப்படுத்தப்பட்ட பூஜையறை சாமான்கள், சமையலறை சாமான்கள், விதவிதமான பழத்தட்டுகள்... இப்படி ஒரு புறம்... அப்பப்பா... விளக்குகளில்தான் எத்தனை வகை...! எவ்வளவு எண்ணிக்கை... எத்தனை வடிவம்... வியப்பால் விழிகள் மலர ரசித்தார் ரவி... தன்னையே மறந்தார். டாக்டருக்கும் அப்படித்தான்.

சோபா ஊஞ்சல் இருந்த கூடத்தைக் கடந்து, மர்மம் நிறைந்த மாடிப்படி வரிசை வந்தது. அப்பொழுதுதான் டாக்டரும், ரவியும் சுயநினைவு வந்தது போல உணர்ந்தார்கள். புவனா இப்போது என்ன செய்யப் போகிறாள் என்ற கலக்கத்துடன் புவனாவைப் பார்த்தார்கள். அவள் வந்து கொண்டிருந்த இடம் காலி! அங்கே... புவனாவைக் காணவில்லை...! அங்கும் இங்கும் பரபரப்போடு அனைவருமே அலைந்தது பயனளிக்கவில்லை. கூட்ட நெரிசலில் அவள் யாருடைய கண்களுக்குமே தென்படவில்லை...!

எல்லோருடைய முகத்திலும் பீதி நிறைந்தது... படர்ந்தது...

(தொடரும்)

ஈற்று வாக்கியக் கதைப் போட்டி

பயந்து விடாதீர்கள். கதையின் முடிவில் வரும் வாக்கியம்தான் ஈற்று வாக்கியம் என்பது. அதாவது, கதை அந்த வாக்கியத்துடன் முடிந்துவிடும்.

'கதையை முடியுங்கள்', 'மீதிக்கதை என்ன' என்று பலவிதமான போட்டிகளை கோகுலம் உங்களுக்கு வைத்திருக்கிறது. இதுவும்கூட அவைகளைப் போன்றதுதான். ஆனால் சற்று வித்தியாசமான போட்டி. இதற்கு எழுதப்படும் கதை உங்கள் சொந்தக் கற்பனையாக சிறுவர்களுக்கான கதையாக இருக்க வேண்டும். ''நம்பி திகைத்துப் போய் நின்றான்'' அல்லது ''பூமா, திகைத்துப்போய் நின்றாள்'' என்று கதை முடிய வேண்டும். கதைகளைத் தெளிவான எழுத்தில், ஒரு இன்லாண்ட் உறையில் மட்டுமே எழுதி அனுப்பலாம். கதை அதில் முடிந்துவிட வேண்டும். தனிக் காகிதங்களில் அனுப்பப்படுபவை கவனிக்கப்படமாட்டா. பரிசு பெறாத, வெளியிட ஏற்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்ப வேண்டும். உள்ளே மறவாமல் உங்கள் தெளிவான முகவரியை எழுதி அனுப்புங்கள். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் அலுவலகம் பொறுப்பேற்காது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

முடிவு தேதி : 31.1.1996


ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

சிரிப்...

"ஏங்க, பையனை அடிக்கிறீங்க?"
"முட்டை வாங்கிட்டு வந்திருக்கான்."
"ஓகோ நீங்க சைவம்னு அடிக்கிறீங்களா, நான் சாப்பிடறேன்."
"பையன் வாங்கியிருக்கிற முட்டை பரிட்சையில."

— சுருப்பம்புலம் ஜேவி.





"மெட்ராஸ்ல பறக்கும் ரயில் விட்டிருக்காங்கடா."
"அப்போ, வானத்துல ரொம்பக் கஷ்டப்பட்டு தண்டவாளம் போட்டிருப்பாங்கன்னு சொல்லு.

— சுகுமார்




"கல்கத்தாவிலிருந்து என் மாமா பொங்கல் வாழ்த்து அனுப்பி இருக்கார்!"
"அப்போ அதை 'பெங்கால் வாழ்த்து'ன்னு சொல்லு!"

— தென்காசி கு. அருணாசலம்




"சீனியர்க்கு எதிர்ப்பதம் என்ன?"
"ஜூனியர்தான்!"
"இல்லே. கசப்னியர்!

— நெற்குப்பை கி.மனோகரன்


காசி கங்கையில் குளித்துப் படி யேறினார் ஆனந்தன். அவருக்கு அங்கே ஏக செல்வாக்கு —
ஆனந்தன் கற்ற மந்திரம்
சிறந்த பண்டிதர்தான்.. ஆனால் அகந்தை அதிகம்!
அட வழி விடப்பா! ஆனந்தன் வர்றார்!
அமைப்பு: ரே
ஓவியம்: ஜெ
வீட்டில், ஆனந்தனின் மகன் —
அப்பா! எனக்கு மாம்பழம் வேணும்!
காலமில்லாத காலத்தில் மாம்பழத்துக்கு எங்கே போறது?
கோடைகாலம் வரட்டும், வேண்டிய மாம் பழம் தரேன்!


இப்பவே மாம்பழம் வேணும்! தராம போக விடமாட்டேன்!
பிடிவாதம் பிடிக்காதே கோடைகாலம் வரட்டும் கூடை கூடையாத் தருகிறேன்... சரியா?
ஊஹூஹும் இப்பவே தா! தள்ளிப் போகக் கூடாது!


ஆனந்தன் பல்லக்கில் ஏற வாசலுக்கு வந்து –
கிடைக்காததைக் கேட்டு அடம் பிடிக்காதே!
மாம் பழம் மாம் பழம்!
மனைவியிடம்
அழுகையை நிறுத்த வில்லை என்றால்...
கட்டி வைத்து அடி போடு!
வாசலில் – தெருக்கூட்டும் 'கிண்டா' எதிரே வந்தான் – அவன் குழந்தைகளை நேசிப் பவன்.
என்ன கிண்டா!
குழந்தையும் தெய்வமும் ஒண்ணுங்க! இப்படி அழ விடலாமா!


மகா பண்டிதன் நான். நீ தெருக் கூட்டி! நீ எனக்கு உபதேசம் பண்றியா?
மாம்பழம் கேட்கிறான். இது காலம் இல்லாத காலம்.... உன்னால் தாங்குடியுமா?.. ஹூம்!
நந்தாய் பிள்ளையைத் தின்னா. அது மதிப்பீங்களா?
குண்டிப்பா
?
கொஞ்சம் பொறுங்க இதோ வாரேன்


அடப் பாவி.
...மாம்பழத்துடன் வருகிறானே!
இதோ பழம்! பிள்ளைக்கு நறுக்கிக் கொடுங்கள்!
குழந்தைக்கு நறுக்கிக் கொடுக்கிறார்—
ஆகா என்ன மணம்
கல்கண்டாய் இனிக்கிறது அப்பா! என்ன ருசி!
சாதாரண தெருக்கூட்டி! ....என் குழந்தை முன்னாலேயே என்னைத் தலை குனிய வைத்து விட்டானே!



அது சரி, கிண்டா பழம் எப் படிக் கிடைத் தது?
அது தேவ ரக சியம்!
நான் பண்டிதனுக் கெல்லாம் பண்டிதன், எனக்குத் தெரியாத தேவ ரகசியமா?
இருக்கக் கூடாதா?
நான் பொய் பேசாதவன். என் நாக்கில் சத்திய தேவதை குடியிருக்கிறாள். அவள் கருணை யால்தான் இது நடக்கிறது.
சத்திய தேவதை நீ எது சொன்னாலும் கேட்பாளா?
நான் பொய் பேசாதவனா!
நான் மகா பண்டிதன்! என் நாவில் குடியி ருக்க சத்திய தேவதை வருவாளா?


பண்டிதன், முட்டாள் என்று வேறுயாரு கிடையாது. சத்தியம் காத்தால் கண்டிப் பாக வருவாள்!
அவரச் சொல் லேன் பார்ப் போம்.
கிண்டன் வேண்டு கிறான்—
சத்திய தேவதையே! ஆனந்தன் அழைக் கிறார். தோன்றுங் களேன் தாயே!
சத்திய தேவதை தோன்றி—
கிண்டா நீ சத்தியம் காப்பவன். ஆனந்தனோ மகா பண்டிதன். ஆனால் கர்வி. சத்தியம் காத் தாதவன்
மிகவும் ஆசைப் படுகிறாரோ? ஒரு பாரமோ அது அவர் நாக்கில் இடியிருக்க லாகாதா?
உ?



உனக்காக ஒரு வாரம் குடியிருக் கிறேன். நடுவிலே பொய் பேசினால் உடனே விலகிக் கொள்வேன்!
நன்றி தாயே!
இங்கே யாரும் இல்லையே! யாரிடம் பேசுகிறாய் திண்டா?
எனக்கு மட்டுமே தெரியும் சத்திய தேவதை யுடன் தான்!
உங்கள் நாக்கில் ஒரே ஒரு வாரம் குடியிருப் பாள். பொய் பேசினால் மறைவாள்.
இனி நீங்கள் எந்த மரத் தைத் தொட்டாலும் அது காய்த்துக் கனி தரும்.




பட்ட மரத்தைத் தொட்டால் கூடவா?!
ஆமாம்! ஆனால் நிபந்தனை நினைவிருக்கட்டும்!
தெருக்கூட்டி நமக்கு நிபந்தனை போடுகிறான்!.. ஹூம்.. காலம்!
அப்பா இன்னொரு மாம்பழம் வேணும்!
அப்படியா, வா...வா!
இந்தப் பட்டுப் போன மாமரத்தைத் தொட்டுப் பார்க்கிறேன்!


மாமரம் கனிந்து குலுங்குகிறது -
அற்புதம்!... எத்தனை வேண்டுமானாலும் சாப்பிடு!
செய்தியறிந்த அரசன் ஆனந்தனை அழைத்து -
உங்க மாமரம் இப்போது பழம் தருதாமே! உண்மையா?
உண்மை மன்னா!
காலமில்லாத காலத்தில் இது எப்படி சாத்தியம்?
இப்போது என் கைக்கு அந்த சக்தி இருக்கிறது.
நான் எந்த மரத்தைத் தொட்டாலும் அது உடனே கனி கொடுக்கும்!


தோட்டத்துக்குச் சென்று—
...காட்டுங்கள் உங்கள் சக்தியை!
இது பட்டுப் போன பலா மரம்...
ஆனந்தன் தொட்ட உடன் மரம் கனிந்து குலுங்கியது!
ஆகா! அற்புதம்..
அரசவைப் பண்டிதர் இனி நீங்களே!
நன்றி மன்னா!
இந்த சக்தி தங்களுக்கு எப்படி வந்தது பண்டிதரே!
அது.. வந்து.. சொல்கிறேன்..
உண்மையைக் கூறுவதா வேண்டாமா?
ஆனந்தன்... சற்றுத் தயங்கினார்—




தெருக்கூட்டியின் தயவால் கிடைத்ததைப் போய் மன்னனிடம் சொன்னால் நமக்குத் தான் கேவலம்..
அகந்தை தலைதூக்க -
என், உயர்ந்த அறிவைப் பாராட்டி தேவி அருளிய சக்தி இது!
மறு நொடியில் பலாமரம் மீண்டும் பட்டுப் போனது -
பதறிப்போய் உண்மையைக் கூறுகிறார் ஆனந்தன்.
ஆனந்தா என்ன இது?
தெருக்கூட்டி கிண்டனின் தய வால் கிடைத்த அறிவுதான்.. பொய் பேசிய தற்கு மன்னியுங் கள்!
பண்டிதரே! என்னிடமே பொய் பேசிய தற்காக உம்மை நாடு கடத்து கிறேன்!


உன்னுடைய அகந்தை அழியட்டும்.
யார் அங்கே? கிண்டனை வரச் சொல்லுங்கள்!
இப்போதே அழிந்தது மன்னா!
கிண்டன் வந்ததும்
உனக்கு என்ன தெரியும்?
தெருக் கூட்டவும் குழந்தைகளை ரக்ஷிக்கவும், உண்மை பேசவும் தெரியும்.
சத்திய தேவதையை தெரியுமா உனக்கு?
என் நாவில் தான் அன்னை குடியிருக்கிறாள்
மன்னா, நான் இது வரை ஒரு பொய் கூடப் பேசியது இல்லை.
என்ன காரணம்?


என்னைவிட நீ பெருமைக்குரியவனாக நீ இருப்பது கூடாது! எனவே நீ ஒரு பொய் பேசு! உனக்குப் பாதி ராஜ்ஜியத்தைக் கொடுத்து விடுகிறேன்!
அப்படியா!
ம்!
மன்னியுங்கள் மன்னா! இந்த உலகையே தருவதானாலும் பொய் சொல்ல எனக்குப் பிடிக்காது
உன்னை சோதிக்கவே அப்படிக் கேட்டேன்! நீ இந்த ராஜ்ஜியத்தில் வாழ்வதே எனக்குப் பெருமை. பட்டமரங்களையெல்லாம் தளிர்க்கவை! நாடு செழிக்கும். அது போதும்.
அரசே! பண்டிதரை மன்னித்து விடுங்கள் அரசே!
அப்படியே ஆகட்டும்!
நீயும் என்னை மன்னித்துவிடு கிண்டா! என் அகந்தை அழிந்தது!
மூலம்: புத்தர் ஜாதகக் கதைகள்.
முற்றும்

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில்
வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட
போட்டிக் கதை – 4

என் உழைப்புதான்!



பள்ளியில் காலை முதல் மணி அடித்தவுடன் கடவுள் வாழ்த்தை முடித்துவிட்டு மாணவர்கள் சிறிது சிறிதாகக் கலைந்து வகுப்பறைக்குள் நுழைந்து அவரவர் இருக்கைகளில் அமர்ந்தனர். புவனாவும் சதீஷும் ஒன்பதாம் வகுப்பு 'ஏ' பிரிவில் படிப்பவர்கள். வகுப்பில் முதல் இரண்டு இடங்கள் இருவருக்குள்தான் இருக்கும்.

வகுப்பாசிரியர் வகுப்பறைக்குள் வந்து அமர்ந்தார். எல்லோரையும் கவனமாகக் கேட்கும்படி கூறிவிட்டு மாணவர்களுக்கு ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பள்ளித் தேர்வுகளில் ஒன்பதாம் வகுப்பில் முதலாவதாக வரும் மாணவன் அல்லது மாணவிக்கு பள்ளி ஆண்டு விழாவில் பள்ளி முதல்வர் ஒரு சிறப்புப் பரிசை அளிப்பார் என்று அவர் அறிவித்ததும் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

"எனவே, பரிசையாவது மனதில் நினைத்துக் கொண்டு எல்லா மாணவர்களும் பாடத்தில் கவனம் செலுத்திப் படிக்க வேண்டும். பள்ளி முதல்வரின் சிறப்புப் பரிசைப் பெறப் போகும் மாணவ அல்லது மாணவிக்கு என் அட்வான்ஸ் வாழ்த்துகள்" என்று கூறிவிட்டுப் பாடத்தை நடத்த

கே. தீபா

ஆரம்பித்தார் ஆசிரியர்.

சாதாரணமாகவே போட்டி போட்டுக் கொண்டு படிக்கும் புவனாவும் சதீஷும் இந்த அறிவிப்பு வந்ததும் சும்மாவா இருப்பார்கள்? போட்டி போட்டுக் கொண்டு படிக்க ஆரம்பித்தனர். பள்ளி முழு ஆண்டுத் தேர்வுகள் ஒருவழியாக முடிந்தன. கோடை விடுமுறை முடிந்து பள்ளி துவங்கும் நாள். மாணவர் சிட்டுப் போல மகிழ்ச்சியுடன் புதிய வகுப்புக்கு வந்தனர்.

எல்லோர் மனதிலும், யாருக்கு சிறப்புப் பரிசு கிடைத்திருக்கும் என்பதை ஊகப்படுத்திக் கொள்வதில் ஈடுபாடு! பள்ளி துவங்கி ஒரு வாரமானது. ஆண்டு விழா நெருங்கியது. அன்று ஆண்டு விழா நாள். பள்ளி வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மாணவர்கள் வரிசையாக மேடையின் முன் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் யார் முதலாவதாக வந்திருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பின் தவிப்பு நிறைந்திருந்தது.

பள்ளி முதல்வர் சிறிது நேரம் உரையாற்றினார். பின்னர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஒருவழியாக எல்லோரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி தொடங்கியது. தொடக்கி வைத்தவர் முதல்வர்தான் என்பதைக் கூறத் தேவை இல்லை. "இப்பொழுது ஒன்பதாம் வகுப்பில் கடந்த ஆண்டு முதலாவதாக வந்தவர்களை அறிவிக்கப் போகிறேன்" என்று கூறிவிட்டு, "புவனாவும், சதீஷும் முதலாவதாக வந்துள்ளனர். இருவருமே சம மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் சிறப்புப் பரிசுக்குப் போட்டியிடுபவர்கள் இவர்கள் இருவருமே" என்று அறிவித்தார்.

இதைக் கேட்ட சதீஷ் தன் நண்பர்களிடம், "நான் தான் வருவேன் என்று எனக்குத் தெரியும்" என்று பெருமையாகக் கூறினான். அவனுக்கு



எப்பொழுதுமே தற்பெருமை அதிகம்.

"இரு சதீஷ். பரிசு யாருக்கு என்பதை இன்னும் அறிவிக்கவில்லை. கொஞ்சம் பொறு" என்று சிரித்தான் நண்பன் குமார்.

"இருவரும் போட்டியிடுகிறார்கள் என்றாலும் பரிசை ஒருவருக்குத் தான் வழங்க முடியும். இந்தப் பரிசு யாருக்கு என்பதை இன்னும் சிறிது நேரத்தில் அறிவித்து விடுவேன். புவனாவையும், சதீஷையும் மேடைக்கு வரும்படி அழைக்கிறேன்" என்று கூறினார் முதல்வர். இருவரும் மேடைக்குச் சென்றனர். முதல்வர் இருவரையும் நோக்கி, "நான் உங்கள் இருவரிடமும் ஒரு கேள்வி கேட்க வேண்டும். இருவரும் தனித்தனியாக வந்து பதில் கூறுங்கள்" என்றார்.

முதலில் சதீஷ் முதல்வரின் அருகே போனான். "சதீஷ், மிக அருமையாக பதில்களை எழுதி அதிக மதிப்பெண் எடுத்திருக்கிறாய். உன்னால் எப்படி முதல் மதிப்பெண் பெற இந்த அளவுக்கு முடிந்தது?" என்று கேட்டார்.



"இதென்ன சார் அதிசயம்? நான் கடுமையாக முயன்று படித்தேன். இதற்குக் காரணம் என் முயற்சியேதான்"; என் உழைப்புதான்" என்றான் சதீஷ் அகம்பாவத்துடன்.

முதல்வர் சதீஷை அனுப்பிவிட்டு, புவனாவை வரச் சொன்னார். அவளிடமும் அதே கேள்வி கேட்கப்பட்டது.

"நான், இந்த அளவுக்கு எழுதியிருப்பதற்கு, ஆசிரியர் பாடம் நடத்திய முறையும், சந்தேகங்களுக்கு சலிக்காது அவர் அளித்த பதில்களும்தான் காரணம். புரியும்படி பாடங்களை நடத்தியிருக்காவிட்டால் நான் இப்படி எழுதியிருக்க மாட்டேன். அதோடு, நான் நன்கு படிக்க வேண்டும் என்று என் பெற்றோர் அளித்த ஊக்கமும் காரணம்தான் சார். கடைசியில்தான் எனது முயற்சி" என்றாள் புவனா.

முதல்வரின் முகத்தில் மகிழ்ச்சி நிறைந்தது. எழுந்தார்.

"ஒருவர் அடையும் வெற்றிக்கு அவரது உழைப்பும் விடாமுயற்சியும் காரணம் என்றாலும், அவர்களைத் தெளிவுபடுத்தி, அத்துறையில் ஊக்கிவிடும் செயலும்தான் அடிப்படையான காரணம். அடிப்படையே குழப்பம் என்றால், எதிலுமே சலிப்புத் தட்டிவிடும். மேலும் முயன்று படிக்க ஆர்வமே இராது. இந்த உண்மையை, முதல் ரேங்க் வாங்கும் மாணவர்கள் எல்லோருமே உணர்ந்திருப்பார்கள். ஆனால் தங்களது வெற்றிக்கு அடிப்படைக்காரணமாக இருக்கும் ஆசிரியர்களின் உழைப்பும் காரணம்தான் என்பதை எத்தனை பேர் வெளியே கூறி அந்த ஆசிரியர்களைப் பெருமைப் படுத்துகிறீர்கள்? சம மதிப்பெண் பெற்றுள்ள சதீஷ், தனது வெற்றிக்குத் தன் உழைப்பே முழுக்க காரணம் என்றான். ஆனால் புவனாவோ, அடிப்படையைத் தெளிவாக அமைத்துத் தந்த ஆசிரியரே உண்மையான காரணம். பிறகே தனது உழைப்பு என்று மறவாது கூறினாள்."

பரிசு புவனாவுக்குத்தான் கிடைத்தது என்பதைக் கூற வேண்டுமா?

பாவம் அசடு!

சுகன்யாவும், ரேணுகாவும் எட்டாம் வகுப்பில் படிக்கும் மாணவிகள். சுகன்யா நாகரிகத்தையும் ஆடம்பரத்தையும் விரும்புபவள். ஆனால் ரேணுகாவோ அமைதியையும், எளிமையையும் விரும்புபவள்.

இருவரும் போட்டிபோட்டுக் கொண்டு படித்தனர்.

இருவரும் டியூஷனில் சேர விரும்பினார்கள். ரேணுகா, ஓர் எளிய ஆசிரியை வீட்டில் சேர்ந்தாள்.

"ஐய, அவங்க டியூஷன் சொல்லித்தர அறையில், பாய்ல உட்கார வைக்கிறாங்க. எனக்குப் பிடிக்கலே," என்று முகத்தைச் சுளித்தாள் சுகன்யா. அதனால் நன்கு வசதியான வீடுள்ள ஓர் ஆசிரியரைக் கண்டுபிடித்து டியூஷனுக்குப் போனாள்.



அங்கே அடிக்கடி ஆசிரியர் வரத் தாமதமாகும். அப்போது டி.வி., விடியோ போட்டுக் காட்டியது சுகன்யாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. போனதும் சோபாவில் உட்கார வைத்து மின்விசிறி போட்டு விடுவதும் அவளுக்குப் பிடித்திருந்தது.

"இத்தனை வசதிகளுடன் டியூஷன் சொல்லிக் கொள்வதைவிட்டு இந்த ரேணுகா, குச்சு மாதிரி வீடு இருக்கற இடத்துல ஆடுமாடு மாதிரி அடைஞ்சு டியூஷன் படிக்கிறாளே! பாவம் அசடு!" என்று எண்ணிக் கொண்டாள் சுகன்யா.

மாத இறுதியில் தேர்வு முடிந்து விடைத்தாள்களை ஆசிரியர் வகுப்பில் கொடுத்தார்.

தான் அதிகமாகவும் ரேணுகா குறைவாகவும் பெற்றிருப்போம் என நினைத்திருந்த சுகன்யா ஏமாந்தாள்.

ஏனெனில் ரேணுகா அனைத்துப் பாடங்களிலும் அதிக மதிப்பெண் வாங்கியிருந்தாள்.

சுகன்யாவோ ரேணுகாவை விடக் குறைவான மதிப்பெண்களே பெற்றிருந்தாள். சுகன்யாவுக்கு இது அதிர்ச்சியாக இருந்தது.

மதிய உணவு இடைவேளையின் போது, சோகமாக அமர்ந்திருந்த சுகன்யாவிடம் ரேணுகா வந்தாள்.

"நீதான் பெரிய இடத்தில் ட்யூஷன் படிக்கிறாயே.... புரியாத பாடங்களை அங்கேயே கேட்டுப் படித்திருக்கலாமே?"

"ஒரு மணி நேரம்தான் ட்யூஷன் சொல்லித் தராங்க. சில நாள்ல ட்யூஷன் கிடையாது. புரியாத பாடங்களைக் கேட்டால் பிறகு சொல்லித் தரேன்னு சொல்லிடுவாங்க."

"நான் ட்யூஷன் படிக்கிற இடத்துல அப்படிச் சொல்லவே மாட்டாங்க. எவ்வளவு நேரமானாலும் புரியும்வரை மறுபடி மறுபடி சொல்லித் தருவாங்க. விடுமுறை நாள்லயும் அவசியமானால் ட்யூஷன் உண்டு."

"என் தவறு புரிகிறது. டியூஷன் போற இடத்துல வசதி வாய்ப்புகளைப் பார்க்கக் கூடாது. நல்லா சொல்லித் தர்றாங்களா என்பதை மட்டும்தான் கவனிக்கனும். நாளையிலிருந்து நீ படிக்கற இடத்துக்கே நானும் வருகிறேன்" என்றாள் சுகன்யா உறுதியான குரலில்.

நா. கவிமல்லி

கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல், ரம்சான் தீபாவளி போன்ற பண்டிகை நாட்களிலும், பிறந்த நாளன்றும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வாழ்த்து அட்டைகளை அனுப்பும் வழக்கம் பெருகி வருகிறது. கண்கவரும் வண்ணங்களில் வகை வகையான உருவங்களில் வாழ்த்து அட்டைகளும் வருகின்றன. அவற்றைப் பார்க்கும்போது, கண்டிப்பாக வாங்கி நண்பர்களுக்கு அனுப்பத் தோன்றும். முன்பெல்லாம், பெரியவர்கள் மட்டுமே வாழ்த்து அட்டை வாங்கி அனுப்புவார்கள். காலம் வேகமாக மாறிவருகிறது



செய்யவும் அருமை; அனுப்பவும் பெருமை!



இல்லையா? சிறுவர் சிறுமியரும் இப்பொழுதெல்லாம் தங்கள் நண்பர்களுக்கு வாழ்த்து அட்டை வாங்கி அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் கடைக்குப்போய் வாங்க முயன்றால், அவைகளின் விலையைக் கேட்கும்போது கலக்கமாக இருக்கிறது. இத்தனை விலை கொடுத்து வாங்கி நண்பர்களுக்கு அனுப்புவது அவசியமா என்று பெற்றோர் கேட்கிறார்கள். பத்து வாழ்த்து அட்டைகள் வாங்க எண்ணியிருந்தால் இரண்டு போதும் என்று குறைக்கிறார்கள் பெரியவர்கள். விலை அந்த மாதிரி. யாருக்கு அனுப்புவது? யாரை விடுவது? தம்பி தங்கைகளுக்குக் குழப்பம்தான்.

இதைத் தீர்க்க ஓர் அருமையான வழி இருக்கிறது. நான்கு பேர் ஒன்றாகக் கூட்டு சேருங்கள். மிகவும் மலிவான விலையில் வாழ்த்து அட்டைகளை நீங்களே தயாரிக்கலாம்.

இதற்குத் தேவையானவை:

1. கடைகளில் விற்கும் வண்ண போஸ்டர் பேப்பர்கள்
2. வாட்டர் கலர் பாக்ஸ்
3. பெவிகால்
4. வண்ணந்தீட்டும் மெல்லிய பிரஷ்
5. கத்தரிக்கோல், பிளேடு
6. சலித்து எடுக்கப்பட்ட மணல்,

அல்லது கோலமாவு. எதுவாக இருந்தாலும் 'கொரகொர'ப்பாக இருக்க வேண்டும். நைஸ் கூடாது.

ஒரு போஸ்டர் பேப்பரில் தாராளமாக எட்டு வாழ்த்து அட்டைகள் வரும். காகிதம் டபுள் சைஸாக இருந்தால் 16 செய்யலாம். ஆளுக்கு ஒரு வண்ணம் தேர்ந்தெடுத்து போஸ்டர் பேப்பர் வாங்கி சமமாக (வாழ்த்து அட்டை அளவுக்கு) மடித்து, பிசிர் இன்றி 'கட்'பண்ணி எடுத்துக் கொள்ளுங்கள். இந்த போஸ்டர் பேப்பர், ஒரு பக்கம் கலராகவும், மறுபக்கம் வெள்ளையாகவும் இருக்கும். இனிமேல் செய்ய வேண்டியதுதான் மிகவும் பொறுமையான பகுதி.




• என்ன அட்டை செய்யலாம்?

லைன் டிராயிங் என்று கூறுவார்களே, அதாவது கோடுகளால் மட்டும் ஆன படங்கள், அவைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிருந்தாவனக் கவியரங்கம் பகுதிகளில் வருபவை இக்கட்டுரையின் தலைப்பில் உள்ளவை எல்லாமே லைன் டிராயிங்குகளே. இவைகளில் அழகான பொம்மை, பறவைகள், பூக்கள் எல்லாம் இருக்கும். அவைகளில் சிலவற்றை டிரேஸ் எடுத்து மடிக்கப்பட்ட வாழ்த்து அட்டையின் முன்பக்கத்தில் இலேசாக வரைந்து கொள்ளவும். இதன்மேல் பெவிகாலை வண்ண பிரஷ்ஷால் எடுத்து வண்ணம் தீட்டுவதுபோல் அடியுங்கள். இது காய்வதற்கு முன்பே, கொரகொரப்பான மணல் அல்லது கோலமாவு, தானியங்கள், பயிர் வகைகள், இவைகளை அந்த பெவிகால் பகுதியில் நிரப்புங்கள். நன்கு காய வையுங்கள். பெவிகால் அடிக்கும்போதும் அதற்குமேல் மணலை ஒட்டும்போதும் மேலிருந்து கீழ்நோக்கி செய்து வாருங்கள். இல்லாவிட்டால், கைபட்டு, எல்லா இடங்களிலும் பெவிகாலும் மற்ற துணுக்குகளும் ஒட்டிக் கொண்டு விடும். நன்றாக உலர்ந்த பிறகு விரலால் வாழ்த்து மடலைத் தட்டினால், பெவிகாலில் ஒட்டாதவை விழுந்து விடும்.



• தயாராகிறது. கூர்ந்து கவனிக்கிறார்கள்

நீங்கள் வரைந்த லைன் டிராயிங் பகுதிமட்டும் மணல் ஒட்டி, நிரப்பப்பட்டு அழகாகக் காட்சியளிக்கும். பிறகு, இந்த உலர்ந்த பகுதியில் உள்ள படத்திற்கு, மெல்லிதாக வண்ணம்பூசி, கண், வாய் எல்லாம் வையுங்கள்.



• தயார்



எப்படிச் செய்தாலும் இது மிக அழகாக இருக்கும்.

பெவிகால்மேல் ஒட்டுவதற்கு மணல், ரவை, கோலமாவு, செங்கல்பொடி என்று எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இவைகளை முதலில் சல்லடையால் சலித்துக் கொண்டு, 'நைஸான' பகுதியை ஒதுக்கி விடுங்கள். கொரகொரப்பானதை மட்டும் பயன்படுத்துங்கள். முதலிலேயே மிகப்பெரிய படங்களை வரைந்து கொண்டு திண்டாடாதீர்கள். படம் பெரிதாக இருந்தால், பெவிகால் பூசப்பூச காய்ந்து விடும். மணலை நிரப்பினால் ஒட்டாது. அப்புறம் பிரச்சனைதான்.

அட்டையின்மேல் நீங்களே வாழ்த்தை அழகாக வண்ணத்தில்

(வாட்டர் கலரால்) எழுதலாம். எப்படி எழுதினாலும் தனி அழகாக இருக்கும். வாழ்த்து மடிப்புக்குள் நீங்கள் எழுதவிரும்பும் வரிகளை அல்லது பாடலை எழுதி விடலாம்.

இந்த வாழ்த்து அட்டைக்கு ஏற்றபடி வெள்ளைக் கவர்கள் கடைகளில் கிடைக்கின்றன. மனம் வைத்தால், இதையும் கூட நீங்களே செய்யலாம். அவைகளில் இதைப்போட்டு, மேலே வாழ்த்து என்பதை வாட்டர் கலரால் எழுதுங்கள். பஞ்சிங் மிஷின் ஓட்டைப் பொட்டுகளில் வண்ணமானவற்றை எடுத்து உறையில் ஒட்டுங்கள்.

கடைகளில் விற்கும் வாழ்த்து அட்டைகளை பணம் கொடுத்து யார் வேண்டுமானாலும் வாங்கி, கையெழுத்திட்டு அனுப்பலாம். அவை ஒரே மாதிரி இருக்கும். ஆனால் இப்படி நீங்கள் செய்து அனுப்பும் வாழ்த்து அட்டைகளில் உங்கள் தனிப்பட்ட கலைத்திறன் அடங்கி இருக்கும். அதோடு இது மலிவானதும்கூட.

இம்மாதிரி வாழ்த்து அட்டைகளை சிறுவர்களே தயார் செய்ய சில குறிப்புகள் தேவை என்று பிரபல ஓவியர் திரு நடனம் அவர்களைக் கேட்டோம். “குறிப்பு என்ன? நானே செய்து காட்டுறேன் வாருங்கள்” என்று தனது வீட்டுக்கு அழைத்தார். தன்னுடைய மகள் சிறுமி பார்க்கவியையும், பக்கத்து வீட்டுச் சிறுவன் இஃப்டிக்காரையும் உடனே அழைத்தார். தனது உதவியாளர் தனபாலையும் வைத்துக் கொண்டு சுமார் 2 மணி நேரம் கோகுலம் வாசகர்களுக்காகச் செலவிட்டு, வாழ்த்து அட்டைகள் இரண்டைச் செய்து காட்டினார். அவை இங்கே தரப்பட்டுள்ளன. அவர் தந்த குறிப்புகளை வைத்துக் கொண்டு எழுதப்பட்டதே இந்தக் கட்டுரை.

அடடே... எங்கே இப்படி ஓடுகிறீர்கள்! வாழ்த்து அட்டை தயார் பண்ணவா?

அட்டை வண்ணப் படமும் மற்ற படங்களும் : ராஜ நாராயண்

கடைசி முதல் கண்டுபிடியுங்கள் – போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டிருந்தபோதிலும், சரியான விடையை எழுதியவர்கள் மிகச் சிலரே. பெரும்பாலானவர்கள் தவறான விடைகளையே எழுதியிருந்தார்கள். கொக்கும், குஞ்சரமும் (யானை) தான் இவர்களைக் காலை வாரி விட்டுள்ளன! குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசாக ரூபாய் இருபது பெறுவோர் :

1. மு. தெய்வா, மிட்டூர் அஞ்சல்
2. கே. ரஞ்சனி, மதுரை - 3.
3. இ. எழிலரசி, பாண்டிச்சேரி - 10.
4. ஏ. ஜெ.எஸ். ராஜா, நெடும்பள்ளி விளை, கன்யாகுமரி மாவட்டம்.
5. எஸ். சிந்துஜா, தஞ்சை - 4.
6. பி. ஜானகிராணி, திருச்சி - 21.
7. கோ. அரவிந்தன், மட்டக்களிப்பு, ஸ்ரீலங்கா.

சரியான விடை :

கத்தி, திருவள்ளுவர்
ஜிமிக்கி, கிருஷ்ணன்
வாத்து, துப்பாக்கி
தாத்தா, தாமரை
புசி, சிட்டு
சீப்பு, புலி
கொக்கு, குஞ்சரம் (யானை)
கலப்பை, பையன்
வாசி, சிலந்தி
கொலுசு, கத்தி

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!

அண்ணனும் இனி...



மணிபூரில் ஐந்து சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தந்தை இல்லை. தாய் மட்டுமே இருந்தாள்.

மூத்தவன், மற்ற சகோதரர்களைக் காட்டிலும் நல்ல அறிவாளி. எனவே, ஊர்வழக்குகள் அவனைத் தேடி வந்தன. அவனும் நல்ல தீர்ப்புகளை வழங்கி ஊராரின் பாராட்டுகளைப் பெற்று வந்தான்.

மற்ற நான்கு சகோதரர்களும் வயல்வெளியில் சென்று உழைத்தனர். மூத்தவனுக்கோ ஊர்வழக்குகளை விசாரித்துத் தீர்க்கவே நேரம் சரியாக இருந்தது. அதனால் அவனுக்கு வயலில் சென்று உழைக்க இயலவில்லை.

திடீரென்று ஒருநாள், மற்ற நால்வரும் தங்கள் தாயை அழைத்தனர். "அண்ணனும் இனி எங்களோடு வயலில் இறங்கி வேலை செய்ய வேண்டும். அவர் பங்கு வேலையை இனி நாங்கள் பண்ண மாட்டோம்" என்று கண்டிப்பான குரலில் ஒன்றாகக் கூறினர்.

மூத்தவன், வயலுக்குப் போனான். மற்றவர்களுடன் வயலில் இறங்கி ஏர் பிடித்தான். ஆனால் உழவிடாமல் யாராவது, வழக்குச் சம்பந்தமாகத் தேடி வந்து கொண்டே இருந்தனர். சம்பந்தப்பட்டவர்கள் வழக்கை மூத்தவனிடம் விவாதிக்கும் நேரத்தில், அவர்களோடு வரும் மற்றவர்கள் அண்ணனுக்குப் பதில் தாங்கள் உழுவதாகக் கூறி விரும்பி வயலில் இறங்கி வேலை செய்தனர். தினமும் இது தொடர்ந்தது.


வழக்கு வாதங்கள், வயல்வெளியிலேயே நடந்தன. மூத்தவனும் சளைக்காமல் பிறருக்கு இயன்றவரை நல்ல ஆலோசனைகளைக் கூறி வந்தான். சண்டையிட்டுக் கொண்டு வந்தவர்களும், பகைமையோடு வந்தவர்களும், மூத்தவனின் அறிவுரை கேட்டு மனம் மாறி நட்புடன் திரும்பிப் போனார்கள். வழக்கு என்று சென்றவர்கள், பிரச்சினை தீர்ந்த மகிழ்ச்சியில் திரும்பினார்கள்.

இவை அனைத்தையும் வேலையின் நடுநடுவே மற்ற நான்கு சகோதரர்களும் கவனித்தனர். அவர்களுக்கு அண்ணனின் அறிவுத் திறமை புரிந்தது. அண்ணனுக்குப் பணமும் புகழும் வருவது குடும்பத்துக்கே பெருமை என்பதை உணர்ந்தனர்.

"எங்களை மன்னித்து விடுங்கள். உங்களைக் குறைவாக மதிப்பிட்டு விட்டோம். உடலுழைப்பும் மூளைத்திறனும் ஒன்றாக முடியாது என்பது இப்போது புரிகிறது. நீங்கள் வீட்டிலிருந்தவாறே வழக்குகளைப் பாருங்கள். விவசாயத்தை உங்களுக்கும் சேர்த்து நாங்களே கவனித்துக் கொள்கிறோம். அதுதான் எங்களுக்குப் பெருமை" என்றனர் அண்ணனிடம்.

மற்ற பிள்ளைகளின் மனமாற்றம் கண்டு தாயும் மகிழ்ந்தாள். மூத்தவனும், முன்னிலும் அதிக உற்சாகமாக மக்களின் குறைதீர்க்கும் நற்பணியில் ஈடுபட்டான்.

கு. ஸ்ரீராம்


AM I BETTER, NURSE?

புலியார் நடத்திய புத்தாண்டு விழா!



சிங்கராஜாவுக்கு வயதாகி படு கிழமாகி விட்டார். அவருக்கு அடுத்தபடியாகப் பட்டத்துக்கு வர சரியான வாரிசு இல்லை. இருந்த ஒரே ஓர் சிங்கராஜ குமாரனையும் சர்க்கஸ்காரர்கள் பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

சிங்கராஜாவின் பணிகளை எல்லாம் மந்திரி புலியார்தான் கவனித்து வந்தார். புலியார், நல்ல உடல்வலிமை மிக்கவர். அதோடு காடும், காட்டில் உள்ள விலங்குகளும் நன்றாக அமைதியாக வாழ வேண்டும் என்பதில் தனி அக்கறை கொண்டவர். பசிக்காத போது எந்த ஒரு விலங்கும் மற்றொரு விலங்கைத் தாக்கிக் கொல்லக் கூடாது என்பதைக் கண்டிப்பாகச் செயல்படுத்தி வந்தார்.

புத்தாண்டு நெருங்கி வரவே, சிங்கராஜா, புலியாரை அழைத்தார்.

“எனக்கு வயதாகி விட்டது; முடியவில்லை என்பதற்காக புத்தாண்டு விழாவை நிறுத்த வேண்டாம். எனக்குப் பதில் நீங்களே முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள். போகின்ற போக்கில் அடுத்த புத்தாண்டைக் கொண்டாட நான் இருப்பேனா என்பது சந்தேகமே. அதனால், இவ்வாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுங்கள்'' என்று அனுமதித்தார்.

புலியார், புத்தாண்டைக் கொண்டாட எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். வழக்கப்படியான விருந்து, இசை நடனக் கச்சேரிகளுக்கு சிறந்த கலைஞர்களை வரவழைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதோடு புதுமையான போட்டி ஒன்றையும் அரச சபையில் புலியார் அறிவித்தார்.

''நமக்கும் மனிதர்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு வால்தான். வால் இல்லாத விலங்கோ பறவைகளோ கிடையவே கிடையாது. சின்னதாகவோ பெரிதாகவோ நம் எல்லோருக்கும் ஒரு வால் உண்டு. பெருமைக்குரிய இந்த வாலுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த வால் போட்டியைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்த விரும்புகிறேன். எல்லாப் பறவைகளும் விலங்குகளும் இதில் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பறவை, விலங்கு இனத்திற்கும் தனித்தனியாக ஒரு பரிசு உண்டு. அந்த இனத்தில் மிக நீண்ட வாலை உடையதுக்கு இந்தப் பரிசு தரப்படும். கடைசியாக, ஒட்டுமொத்தமாக எந்த மிருகம் அல்லது பறவைக்கு மிக நீண்ட வால் இருக்கிறதோ

அதற்கு வால் அழகன் அல்லது வால் அழகி பட்டம் தரப்படும். அந்த வாலைப் பாதுகாத்து வளர்க்க அரசாங்க உதவித் தொகையும் வழங்கப்படும்" என்று புலியார் அறிவித்ததும் எல்லாம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

காட்டில் மிகப் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதில் ஏராளமான பறவைகளும், குரங்குகளும் வசித்து வந்தன. நாட்டில் சில காலம் ஒரு குரங்காட்டியிடம் சிக்கித் திண்டாடி விட்டு, தப்பி வந்திருந்த ஒரு குரங்குக் குட்டியும் அதில் இருந்தது. அதன் பெயர் ஜிங்லி. அது எப்பொழுதும் "ஜிங்" "ஜிங்"கென்று குதித்து ஆடும். அதனால் அப் பெயரை மற்ற மிருகங்கள் சூட்டியிருந்தன.

மனிதர்களிடம் சில காலம் பழகியிருந்ததால் ஜிங்லிக்கு குறுக்கு வழிகளெல்லாம் தெரிந்திருந்தன.

விலங்கு பறவைகளில் குரங்குகளுக்குத் தான் நீண்ட வால். அதனால் "வால் அழகன்'' பட்டம் குரங்குகளுக்குத்தான் கிடைக்கப் போகிறது என்பது எல்லாவற்றிற்கும் தெரியும். குரங்குகளுக்குள் எந்தக் குரங்குக்கு மிக நீண்ட வால் இருக்கிறதோ அதற்குத்தானே அந்தப் பட்டம் போய்ச் சேரும்?

ஜிங்லிக்கு அந்தக் காட்டில் இருந்த எல்லாக் குரங்குகளையும் தெரியும். அருவிக்கரை மாமரத்தில், பூட்டன் என்ற ஒரு வயதான குரங்கு இருந்தது. அதற்கு மிகவும் நீண்ட வால். போட்டி என்று வைத்து, அளந்தார்களால், நீண்ட வாலுக்கான பரிசும், வால் அழகன் பட்டமும், உதவித் தொகையும் எல்லாமே பூட்டனுக்குத்தான் கிடைக்கும். என்னமாவது குளறுபடி பண்ணி, குறுக்கு வழியில், தனக்கே எல்லாம் கிடைக்கும்படி பண்ண என்ன வழி என்று ஜிங்லி யோசித்தது.

மிருகம், பறவைகளின் வால்களை அளந்து குறிக்கும் பணி, கரடியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஜிங்லி கரடியாரைத் தனியாகச் சந்தித்தது.

"பரிசும், பட்டமும், உதவித் தொகையும் எனக்கே கிடைக்கும்படி செய்தால், ஒரு குடம் நிறைய தேன் தருகிறேன். போனசாக ஒரு சாக்லேட் பாக்கெட்டும் தருகிறேன்" என்று கரடியாருக்கு ஆசை காட்டியது.

குடம் நிறையத் தேனும், சாக்லேட் ஆசையும் கரடியாரை மயக்கின.

"என்னால் என்ன பண்ண முடியும்? பொய் அளவைக் குறித்தால் புலியார்



காடு கடத்தி விடுவாரே?" என்று பயத்தை வெளியிட்டார் கரடியார்.

"புலியார் என்ன, யாராலுமே கண்டு பிடிக்க முடியாதபடி காரியத்தை முடிக்க லாம்," என்று தன் திட்டத்தை விளக்கியது ஜிங்லி.



எல்லா மிருகங்கள், பறவைகளின் வால் அளவைக் கச்சிதமாக அளந்து இனம், வகை, வாரியாகக் குறித்துக் கொண்டார் கரடியார். வயதான காரணத் தால் மரத்திலிருந்து இறங்க முடியாது இருந்த பூட்டன் குரங்கு ஒன்றுதான் பாக்கி. மரத்தின் மேல் ஏறி அதன் வாலை அளக்க வேண்டும்.

"எனக்கு மரமேற முடியவில்லை. யாராவது மரத்தில் ஏறி பூட்டனின் வால் அளவைக் குறித்துச் சொல்லுங்கள்" என்று ஸ்கேலைக் கொடுத்தது கரடியார்.


பூட்டனின் பேரக் குரங்கு ஸ்கேலை வாங்கிக் கொண்டு மரம் ஏறியது. அந்த ஸ்கேலை ஜிங்லி ஏற்கெனவே உடைத்து பார்த்தால் தெரியாதபடி ஒட்டி வைத் திருந்தது. பேரக் குரங்கு அதைப் பிடித்துக் கொண்டு மரம் ஏறியதும், இரண்டாவது கிளையைத் தாண்டும்போதே அது உடைந்து துண்டாகிக் கீழே விழுந்து விட் டது.

"ஸ்கேலை இப்படி உடைச்சுட்டியே! இப்ப என்ன பண்றது? என்று கடிந்து கொண்ட கரடியார், "சரி, வேற யார் கிட்டயாவது ஸ்கேல் இருக்கா? பூட்ட னின் வாலை அளந்து குறித்துக் கொண்டு திருப்பித் தந்து விடுகிறேன்?" என்று கேட் டார்.

ஜிங்லி இதற்காகத்தானே காத்துக் கிடந் தது. "இதோ என்னுடைய ஸ்கேல்" என்று ஓடிச் சென்று கொடுத்தது. அதில் அளவு கள் தவறாகக் குறிக்கப்பட்டிருந்தன. ஒன் றரை அடி நீளம், அதில் ஒரு அடியாகக் குறிக்கப்பட்டிருந்தது. எல்லாம் ஜிங்லியின் குறுக்கு புத்தி திட்டம்தான்.

"ஆச்சா ஆச்சா? சீக்கிரம்" என்று அவசரப்படுத்தினார் கரடியார், பேரக் குரங்குக்கு சந்தேகம் எழ இடமே தராது. பூட்டனின் மூன்றரை அடி நீளவால், இரண்டரை அடியாக அளக்கப்பட்டு குறிக்கப்பட்டது. உடனே ஸ்கேலை வாங் கிக் கொண்டு பறந்தது ஜிங்லி.

புத்தாண்டு விழா நிகழ்ச்சிகள் தொடங் கின. இரண்டே முக்கால் அடி நீள வாலைக் கொண்ட ஜிங்லிக்கு பரிசும், வால் அழகன் பட்டமும் சிங்கராஜாவால் வழங்கப்பட்டன.



"ஏம்மா! சட்டையை உரிச்சு இப்படிக் கீழே போடுறாயே? ஏழைப் பையன் யாருக்காவது சட்டையை கொடுக்கக் கூடாதா....?"

- நெற்குப்பை. கி. மனோகரன்

அந்த நேரத்தில், புலியாருக்கு துப்பறியும் படையைச் சேர்ந்த தவிட்டுக் குருவியிடம் இருந்து ஒரு சீட்டு வந்தது. பூட்டனின் வாலை அளந்த ஸ்கேல் தவறான அளவுடையது. எல்லாம் ஜிங்கியின் மோசடித்தனம். தேனுக்கும் சாக்லேட்டும் ஆசைப்பட்டு கரடியார், ஜிங்லியின் ஆசை வலையில் விழுந்து விட்டார் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

முடிவை அறிவித்து பட்டத்தையும் வழங்கி விட்ட பிறகு இப்பொழுது என்ன பண்ணுவது? புலியாரின் முகத்தில் கவலை படர்ந்தது. அதற்கு ஒரு யோசனை தோன்றியது.

விழாவின் முடிவில் புலியார் பேச எழுந்தார்.

"பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. இந்த மகிழ்ச்சியான நேரத்தில் நான் ஒரு துயரமான செய்தியைக் கூறப் போகிறேன். சர்க்கஸ்காரர்கள் நம் காட்டை முற்றுகை இட்டு மிருகங்களைப் பிடிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். எல்லா மிருகங்களையும் கன்னா பின்னாவென்று பிடித்துக் கொண்டு போய் விட்டால், என்ன பண்ணுவது என்று நானே சர்க்கஸ் மேனேஜருடன் பேசினேன். ஒவ்வொரு விலங்கு பறவை இனத்தில் இருந்தும் சிறப்புமிக்க ஒன்றை மட்டும் நாமே அவர்களிடம் ஒப்படைத்து விட்டால் போய் விடுவதாகக் கூறினார் மேனேஜர். மற்ற மிருகங்கள், பறவைகளையாவது காப்பாற்றலாமே என்ற ஆசையில் சிங்கராஜாவின் அனுமதி பெற்று நானும் இந்த திட்டத்துக்கு ஒப்புக் கொண்டேன். அதன்படி குரங்கு இனத்தில் சிறப்புமிக்கதான வால் அழகன் பட்டம் பெற்ற ஜிங்லியாரை முதலில் அனுப்ப முடிவு பண்ணியிருக்கிறோம். ஜிங்லியாருக்குக் கைதட்டி, எல்லோரும் பிரியாவிடை தருவோம்."

ஜிங்லி, மனம் பதைபதைக்க எழுந்தது. "குரங்கு இனத்தில் சிறப்பானவன் நான் அல்ல. பூட்டன் குரங்குதான். அதன் வால் மூன்றரை அடி நீளம். நான்தான் தவறான ஸ்கேலைக் கொடுத்து அளவைக் குறைத்துப் போடச் செய்தேன். வால் அழகன் பட்டத்திற்கு உரியவர் பூட்டன்தான்" என்று அலறியது. வாங்கிய பரிசுகளையும் பட்டத்தையும் சிங்கராஜாவின் முன்னால் கொண்டு வந்து வைத்து விட்டு ஓடியே போய்விட்டது!

தந்திரம் பலித்த மகிழ்ச்சியில் பூட்டனை வரவழைத்து பரிசுகளையும் பட்டத்தையும் வழங்கினார் புலியார். அதோடு அரசாங்கத்தை ஏமாற்ற முயன்ற குற்றத்திற்காக, முத்துப் பல்லக்கு ஒன்றைக் காடு முழுதும் சுமக்கும் தண்டனையை சிங்கராஜா ஜிங்லிக்கு வழங்கினார். பல்லக்கில் இருந்தது யார் தெரியுமா? வயதான வால் அழகன் பூட்டன்தான்!



"எங்க வீட்டுப் பிள்ளையார் பால் குடிப்பார்டா."

"எங்க வீட்டு பிள்ளையார் காப்பிதான் குடிப்பார்."

- பா. ஜெயக்குமார்



நமக்கு வேண்டாம்!

வேணு சீனிவாசன்

காலை நேரம். தூத்துக்குடியின் கடற்பகுதியில் முத்துக்குளிக்கும் தொழில் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

உடம்பு முழுவதும் எண்ணெய் பூசிக் கொண்ட ஆட்கள், நெஞ்சு நிறைய காற்றை இழுத்து அடக்கிக் கொண்டு, தண்ணீருக்குள் மூழ்கினர்.

கடலின் உட்பகுதிக்குச் சென்று, நீர்ப்படுகையில் பாறை மேல் படிந்திருக்கும் முத்துச் சிப்பிகளை வாரி எடுத்துக் கொண்டு இரண்டு நிமிடத்துக்குள் நீர் மட்டத்திற்கு மேலே வந்து, மூச்சு இரைத்தனர்.

முத்துக்குளிப்பதை வேடிக்கை பார்க்கவும், நல்ல முத்துக்களை விலை பேசி வாங்கவும் பக்கத்து கிராமங்களில் இருந்து மக்கள் திரண்டிருந்தனர்.

"அம்மா, நம்ப அப்பா மாதிரி எத்தனை பேரு முத்துகுளிக்கக் போயிருக்காங்க?" என்று அம்மாவிடம் கேட்டான் ஏழுமலை.

ஏழுமலை மீனவர் குடும்பத்தைச் சேர்ந்தவன். அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். அவன் அப்பாவும், மாமாவும் முத்துக்குளிக்க கடலுக்குள் போயிருந்தார்கள்.

"எட்டு நூறு பேரு முத்துக்குளிக்கிறாங்களாம்!" என்றாள் அம்மா.

"எவ்வளவு முத்துச்சிப்பி கெடைக்கும்?"

"ரெண்டு லட்சத்துக்கு மேலேயே இருக்கும்டா" என்றாள் அம்மா.

"எல்லாச் சிப்பியிலயும் முத்து இருக்குமா?" - ஆவலுடன் கேட்டான் ஏழுமலை.

"சொல்ல முடியாது. அதிருஷ்டம் இருந் தால் முத்து கிடைக்கும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் அம்மா!

பலமுறை முத்துக்குளிக்கும் கூலிக்கு ஈடாக ஏழுமலையின் அப்பா முத்துச் சிப்பிகளை வாங்கி வந்திருக்கிறார். ஆனால் ஒருமுறை கூட அதில் விலையுயர்ந்த முத்துகள் கிடைத்ததில்லை. முத்து மட்டும் கிடைத்திருந்தால் அவர்கள் வறுமை ஓரளவு தீர்ந்திருக்கும். இதை எல்லாம் நினைத்தே அம்மாவிடம் இருந்து பெருமூச்சு புறப்பட்டது.

"இன்னிக்கு அப்பா கொண்டு வந்திருக்கும் சிப்பியில முத்து கிடைச்சா, எனக்கு பள்ளிக்கூட சம்பளம், புதுத்துணி, பாடப் புத்தகம் எல்லாம் வாங்கி தந்துடணும். சரி தானே அம்மா?" என்று ஆவலோடு கேட்ட மகனின் தலையை அன்போடு கோதி விட்டாள் அம்மா சரி என்பதற்கு அடையாளமாக.

சிறிது நேரத்தில் முத்துக் குளிப்பு முடிந்து விட்டதற்கு அடையாளமாகக் கட்டு மரங்களும், சிறிய படகுகளும் கடற்கரையை நோக்கி வர ஆரம்பித்தன.

ஏழுமலையின் அப்பா வழக்கம் போலவே, தனது முதலாளியிடமிருந்து கூலிக்குப் பதிலாக முத்துச்சிப்பிகளைப் பெற்றுக் கொண்டு வந்தார்.

கரைக்கு வந்ததும் ஒவ்வொரு சிப்பியாகத் திறந்து பார்த்தனர். முத்து கிடைக்கவில்லை. ஆவலோடு சிப்பியைத் திறப்பதும், முத்து இல்லாததால் ஆத்திரத்தோடு வீசி எறிவதுமாக இருந்தார் அப்பா.

'இவ்வளவு வாங்கிட்டு வந்திருக்கே ஒண்ணுல கூட முந்து இல்லியே! போ அப்பா உனக்கு முத்துச்சிப்பி வாங்கவே தெரியலியே" என்று விவரம் புரியாமல் பேசும் ஏழுமலையை "சும்மா இருடா" என்று அடக்கினாள் அம்மா.

"நாளைக்கு சம்பளம் கட்டலேன்னா நான் பள்ளிக்கூடம் போக முடியாது!" என்று சொல்லிக் கோபப்பட்டான் ஏழு மலை.

எல்லோரையும் போல கூலி வாங்கி இருந்தால் இரண்டு நாள் நிம்மதியாக இருந்திருக்கலாம். முத்து கிடைக்கும்கற ஆசையில் சிப்பி வாங்கியதில் கூலியும் போயிற்று, முத்தும் கிடைக்கவில்லை. குடும்பச் செலவு, வாங்கிய கடன்கள், ஏழு மலையின் பள்ளிச் சம்பளம் இவற்றை எல்லாம் எப்படிச் சமாளிப்பது? தவித்தாள் அம்மா.


அன்று குடிசைக்குத் திரும்பியதும் "இதோ பார்" என்று தன் மடியில் மறைத்து வைத்திருந்த பெரிய சிப்பி ஒன்றை அம்மாவிடம் காட்டினார் ஏழு மலையின் அப்பா.

"என்னங்க! இவ்வளவு பெரிய சிப்பி? கண்டிப்பா இதுல முத்து இருக்கும்" என்றாள் அம்மா ஆவல் நிறைந்த மகிழ்ச்சியோடு.

"இதுல முத்து இருக்கும்னு தெரிஞ்சிதான் நம்ம முதலாளி தனியா எடுத்து வைச்சிருந்தாரு? அவருக்குத் தெரியாம எடுத்து வந்திட்டேன்" என்ற அப்பாவை அதிர்ச்சியோடு பார்த்தாள் அம்மா.


"என்ன அப்படிப் பாக்கறே மொதலாளிக்குச் சொந்தமானதைத் திருடிட்டேன்னா?" என்று சொல்லிக் கொண்டே சிப்பியைத் திறந்தார் அப்பா. கழுவப்படாத வெண்முத்து கண்ணைச் சிமிட்டியது.

"கடனை எல்லாம் கொடுத்திடலாம். பையனுக்கு பள்ளிக்கூடச் சம்பளக் கட்டி, நல்ல துணிமணி வாங்கிடலாம். ஒரு வாரத்துக்கு நல்லா சாப்பிடலாம்" - அடுக்கிக் கொண்டே போனார் அப்பா!



'அப்பா, இந்தத் திருட்டு முத்து நமக்கு வேண்டாம் அப்பா' என்ற குரலைக் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினார். அப்பா. ஏழுமலை நின்று கொண்டிருந்தான்.

"அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படுவதும், தீயவழியில் அடைவதும் தீமையே தரும் என்று நான் படித்திருக்கிறேன். அம்மாவின் பசியைப் போக்கு




வதற்குக் கூட, திருடக் கூடாது' என்று வள்ளுவர் சொல்லி இருக்கிறார். நம்ம வறுமையும் கஷ்டமும் இருக்கவே இருக்கு. அதை யெல்லாம் தீர்க்க இது வழி இல்லே. இது மனசாட்சி உள்ளவங்க பண்ணற காரியம் இல்லே" என்றான் ஏழுமலை.

"ஆமாங்க, சின்னப் பையனா இருந்தாலும் அவன் சொல்றதுதான் சரின்னு எனக்கும் தோணுது. வறுமைக்குப் பயந்து, வாழும் முறையை மாற்றிக் கொள்ளக் கூடாது. இந்த முத்தை எடுத்துக்கிட்டுப் போய் முதலாளியிடமே கொடுத்திடுங்க" என்றாள் அம்மா.

"அபராதத்தோட பையனின் சம்பளத்தை அடுத்த வாரம் கட்டிட ஏதாவது வழி பிறக்காமலா போகும்?" என்றான் ஏழுமலை.

பள்ளிச் சிறுவனான மகனுக்கு இருக்கும் நல்ல குணம் கூடத் தனக்கு இல்லையே என்று வருத்தப்பட்ட அப்பா முத்தை எடுத்துக் கொண்டு முதலாளியைப் பார்க்கப் புறப்பட்டார்.

கேளுங்கள் சொல்லப்படும்



• விரல் ரேகை மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது என்று கூறுகிறார்களே! இதே மாதிரி மனிதனுக்கு மனிதன் மாறுபடுவதாக வேறு ஏதாவது மனிதனிடம் இருக்கிறதா?


- கா. முரளிதரன், குடந்தை.


தலைமுடி இந்த மாதிரி மாறுபடுகிறது என்கிறார்கள். ஆனால் அறிவியலார் ஏற்கவில்லை. இதே போலத்தான் நகங்களும், பல் அமைப்பும். இவை 60% மாறுபடுகின்றனவாம். அதனால் இதுவும் உறுதியான முடிவு காண முடியாத சோதனையாகவே இருக்கிறது. ஆனால், கண்களின் உள்ளமைப்பு தனித்தன்மை வாய்ந்தது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைக் கண்டுபிடித்துள்ளவர் டாக்டர் ராபர்ட் ஹீல் என்ற அமெரிக்க அறிவியலார். கைரேகையைவிட இது இன்னும் துல்லிய மானதாம். ஹீலின் கண்டுபிடிப்பு, கம்ப்யூட்டர்களின் துணையால் உலகெங்கும் பரவும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

• செயற்கைக் கோள்களில் பலவகை உண்டு என்கிறார்களே, உண்மைதானா?

- வி. ஞானப்பிரகாசம், வத்தலகுண்டு.

உண்மைதான். ஒவ்வொரு செயற்கைக் கோளும் ஒவ்வொரு தனிக் காரணத்திற்காகச் செலுத்தப்பட்டுள்ளது. Radio Navigation Satellites என்பது வானொலித் துறை மேம்பாடுகளுக்காக. Communication Satellites என்பது செய்தித்துறை தகவல் பரிமாற்றம் தொடர்பான மேம்பாட்டுப் பணிகளுக்காக. Earth Resource Satellites என்பது பூமியின் இயற்கைவள மேம்பாட்டுத் தகவல்களுக்காக, Meteorological Satellites என்பது வானியல் தகவல்களுக்காக. Space Satellites என்பது விண்வெளி ஆய்வுத் தகவல்களுக்காக T. V. Satellites என்பது தொலைக் காட்சி ஒளிபரப்புப் பணிகளுக்காக.





• பேஸ் மேக்கர் என்பது என்ன?

- ஷ. செல்லக்கனி, விருதுநகர்.

பேஸ் மேக்கர் (Pace Maker) என்பது இதயத் துடிப்பைச் சீராக்கும் ஒரு கருவி. இதயம் சீராக இயங்காதவர்களுக்கு இதைக் கொண்டு இதயத்தைச் சீராக இயக்கி உயிர் வாழ வைக்க முடியும்.

• விண்வெளி இயலுக்கு என்று தனியாகப் பாடம் இருக்கிறதா?

- கு. அடைக்கலமேரி, தல்லாகுளம்.

பாடம் மட்டுமல்ல, ஒரு பல்கலைக் கழகமே விண்வெளி இயலுக்கு என்று இருக்



அண்டார்க்டிகாவில் எரிமலை உண்டா?

கிறது. இதன் பெயரே "விண்வெளிக் கல்வி பல்கலை" என்பது (Space Education University). இது அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரில் இருக்கிறது. இந்தியாவிலும் இக்கல்வியைப் பரவச் செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு ஏராளமான நிதி தேவை.

• கிரிக்கெட் டெஸ்டில் ஏற்கெனவே ஸ்ரீலங்கா இந்தியாவை வென்றிருக்கிறதாமே! உண்மையா?


- தூ. பெல்லியப்பா, ஹோசூர்.

உண்மையே! 1985 இல் கொழும்புவில் நடைபெற்ற டெஸ்ட்டில் 149 ரன்களில் இந்தியாவை வெற்றி கொண்டது ஸ்ரீலங்கா!

• அண்டார்க்டிகாவில் கூட எரிமலை இருக்கிறது என்கிறான் நண்பன். பனிப் பிரதேசத்தில் எரிமலை இருக்காது என்கிறேன் நான். பந்தயம் வைத்திருக்கிறோம். யார் சரி?

- மா. பொன்னுத்தாய், தாராபுரம்.

நண்பருக்கே வெற்றி. எரிமலைக்கும் பனிமலைப் பிரதேசத்திற்கும் தொடர்பே இல்லை. கடலுக்கு அடியில் கூட எரிமலைகள் உள்ளன. அண்டார்க்டிகாவில் எரிமலைகள் உள்ளன. குறிப்பிடத்தக் கது Mount Erebus.



• முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் பறக்கும் பறவை உண்மை

சேரநம்பி



யாகவே இருக்கிறதா?

- மு. பிச்சை, சாத்தான்குளம்.

இருக்கிறது. இதன் பெயர் Humming Bird.

• Bear-baiting என்பது என்ன விளையாட்டு?

- கா. ஆரோக்கியம் ஜார்ஜ், பாளையங்கோட்டை.

இது மிகவும் கொடுமையான விளையாட்டு. கரடியைக் கட்டிப் போட்டு நாய்களை ஏவிக் கடிக்க வைப்பார்கள். பார்க்கக் கட்டணம் உண்டு. எத்தனை கொடுமையான விளையாட்டு! கேட்கவே மனம் பதறுகிறது இல்லையா? இது இங்கிலாந்தில் இருந்தது. ஆனால் 1835 இல் இதற்குத் தடைபோட்டு விட்டார்கள்.

• Saxaphone என்ற இசைக் கருவியை யார் கண்டுபிடித்தார்கள்?

- ஏ. செல்லப்பா, திருமெய்யம்.


இந்த சாக்ஸபோன் இசைக் கருவியை முதலில் கண்டுபிடித்து உரிமைப் பதிவும் செய்து கொண்டவர் ஒரு பிரெஞ்சுக்காரர். பெயர் Adolphe Sax. கண்டுபிடித்த ஆண்டு பாரீசில் 1846. இவர் பெயரே இதற்கு வைக்கப்பட்டது.


• மின்சார Iron Box ஐ யார் கண்டு பிடித்தார்கள்?

- சு. மஞ்சு, கோவை - 4.

இதற்கான முயற்சிகள் பலராலும் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் இதைக் கண்டுபிடித்து, பதிவு செய்து (Patent Registration) கொண்டவர் ஹென்றி சிலி (Henry Seley) என்பவர். இவர் நியூ ஜிலாந்தைச் சேர்ந்தவர். ஆண்டு 1882 ஜூலை.

• விதைகள் எத்தனை காலம் இருக்கும்?






- இரு. பன்னீர்செல்வன், மூணாறு.

கேள்வி சரியில்லையே! விதைகளை எத்தனை காலத்திற்குப் பாதுகாத்து வைக்கலாம் என்பதுதானே கேள்வி? இது எந்த விதை, எப்படிப் பாதுகாத்து வைக்கப் படுகிறது என்பதைப் பொறுத்தது. வட அமெரிக்காவில் 'Arctic Lupin' என்ற தாவரத்தின் விதை 10,000 ஆண்டுகளுக்கும் மேலாக, பனியில் புதையுண்டு கிடந்தது. இதை வெளியே எடுத்து விதைத்தனர். முளைத்திருக்கிறது!

• வாடகைக் கார்களுக்கு மஞ்சள் கறுப்பு வண்ணம் அடிக்கிறார்களே? இது எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? இதற்கு முன்னால் என்ன வண்ணம் இருந்தது?

- வி. சாம்பி சைக்கோல், பரமக்குடி.

இஷ்டத்திற்குத்தான் வாடகைக் கார்களுக்கு வண்ணம் அடித்து வந்தார்கள்.



இதனால் நடைமுறைக் குழப்பங்கள் பல ஏற்பட்டன. லண்டனில் இருக்கும் டாக்சி (CAB) டிரைவர்கள்தான் இப்படிக் கறுப்பு மஞ்சளை அடித்தார்கள். ஆண்டு 1897 ஆகஸ்ட். அது முதல் இது அமுலுக்கு வந்து விட்டது.

• குழந்தைகளுக்காக எழுதிய லூயி கெரால்(Lewis Carroll)வின் உண்மைப் பெயரே அதுதானா?

- மீ. மருதப்பன், கோவை - 2.

இல்லை. லூயி கெராலின் உண்மைப் பெயர் சார்லஸ் டாட்க்ஸன் (Charles Dodgson).


• ஷேக்ஸ்பியரின் நாடகங்களுக்கு எந்த ஒரு நாடோ தடை விதித்திருக்கிறது என்று எங்கள் ஆசிரியர் கூறுகிறார். சரிதானா?

- மா. கௌரிசங்கர், திருவையாறு.

ஷேக்ஸ்பியருக்கு மட்டுமல்ல, சார்லஸ் டிக்கன்ஸ், அரிஸ்டாட்டில் போன்றவர்களின் படைப்புகளுக்கும் சீனா தடை விதித்திருக்கிறது. ஆனால் அந்தத் தடையை 11.2.68லேயே விலக்கியாகிவிட்டதே!


• நைலான் என்ற பெயரை செயற்கை இழைக்கு ஏன் தந்தார்கள்? எப்படி இந்தப் பெயர் ஏற்பட்டது?

இது கண்டுபிடிக்கப்பட்ட நியூயார்க் நகரையும் லண்டனையும் குறிக்கும் வகையில் நைலான் (Nylon) என்ற பெயர் சூட்டப்பட்டது.



• மருத்துவத் துறைக்கு ஒரு கோலைச் சுற்றிய பாம்பைச் சின்னமாகப் போடுகிறார்களே, இது ஏன்?

- கு. முராரி, பாபநாசம்.



கிரேக்கர்களின் மருத்துவக் கடவுள் ஆக்ளிபியஸ் (Aaklipios). இந்தத் தேவதையின் கையில் ஒரு பாம்பு சுருண்டிருக்கும். கையில் ஒரு கம்பு இருக்கும். இன்றைய மருத்துவத்தின் தாயகம் கிரேக்கமே. எனவே கிரேக்க மருத்துவ தெய்வத்திற்கு நன்றி கூறும் வகையில் இந்தச் சின்னம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

• சர்வாதிகாரி ஹிட்லர் ஏதாவது புத்தகம் எழுதியிருக்கிறாரா?

- மு. சபரிகிரீசன், கம்பம்.

எழுதியிருக்கிறாரே. இதற்குப் பெயர் மை பைட் (My Fight) ஜெர்மனியில் இதன் பெயர் Mein Kampf.

சின்னதாப் போச்சே!

அருண் ஓடி வந்தான்.

"புது ஸ்கூல் எப்படி இருந்துச்சு அருண்?" என்று வரவேற்றார் அம்மா.

"போம்மா! எனக்கு புது ஸ்கூலைக் கொஞ்சம் கூடப் பிடிக்கலே" – வருத்தம் தோய்ந்த முகத்துடன் கூறினான் அருண்.

"ஏன் புது டீச்சர் திட்டினாங்களா?" என்று ஆறுதலாகக் கேட்டாள் அம்மா.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா... புது டீச்சர் ரொம்ப அன்பாத்தான் இருந்தாங்க."

"பின்னே ஏன் வருத்தமா இருக்கே?"

"என்னதான் இருந்தாலும் எங்க சுஜா டீச்சருக்கு ஈடா எந்த ஒரு டீச்சராலும் இனிமே வர முடியாதும்மா...." – ஆதங்கத்துடன் தீர்மானமாகச் சொன்னான் அருண்.

கி. சிவா

"இல்லே கண்ணா, புது டீச்சர் நல்லவங்கதாம்ப்பா. கொஞ்ச நாளானா எல்லாம் சரியாய்ப் போயிடும்."

அப்போதைக்கு அவனைச் சமாதானப் படுத்தினாள் அம்மா.

இப்போது குடியிருக்கும் இந்த வீட்டிற்கு அருண் குடும்பத்தினர் வந்து ஒரு வாரம்தான் ஆகிறது. பக்கத்திலேயே இருக்கும் ஒரு பள்ளியில் அருண் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்திருக்கிறான். பழைய பள்ளியை விட புதுப் பள்ளி எவ்வளவோ சிறப்பாக இருந்தாலும் அருணால் பழைய பள்ளியையும், பழைய நண்பர்களையும் மறக்க முடியவில்லை.

அம்மா அருணை மாற்ற எவ்வளவோ முயற்சித்தாள். என்ன காரணமோ தெரியவில்லை, அருணுக்குத் தன்னுடைய பழைய பள்ளியின் ஆசிரியை, நண்பர்கள் மட்டுமே மிகவும் உயர்ந்தவர்கள். அவங்களுக்கு ஈடாகப் புதிய பள்ளி ஆசிரியர்கள் யாருமே ஈடாக மாட்டார்கள் என்ற தவறான நினைப்பு உறுதியாக இருந்தது. அதானல் அம்மா எடுத்த முடிவுகள் ஏதும் பலனளிக்கவில்லை.

மறுநாளும் பள்ளியிலிருந்து சோர்வாகவே வந்தான் அருண்.

"என்ன அருண், நேத்து முதல் நாள். அதனால பாடம் நடத்தியிருக்க மாட்டாங்க. ஆனா, இரண்டாவது நாளான இன்னிக்கு ஏதாவது பாடம் நடத்தியிருப்பாங்களே...?" அருணை உற்சாகப்படுத்தும் எண்ணத்தில் கேட்டாள் அம்மா.

"நடத்தினாங்க அம்மா. ஆனா எனக்கு ஒண்ணுமே புரியலேம்மா. சுஜா டீச்சர் மாதிரி யாராலே பாடம் நடத்த முடியும்?" என்று வருந்தினான் அருண்.

அம்மாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. என்ன இவன், எப்போது பார்த்தாலும் சுஜா டீச்சரைப் பற்றியே பேசுகிறானே? ஆத்திரத்தில் அருணை அடித்து விடலாமா என்று கூட எண்ணினாள் அம்மா. ஆனாலும், அருணை அவன் வழியிலேயே விட்டுப் பிடித்துத் திருத்துவது தான் நல்லது என்று கோபத்தை அடக்கிக் கொண்டு பேசாமல் இருந்து விட்டாள்.

சிறிது நாட்கள் சென்றன. அருண் மாறவே இல்லை.

ஒருநாள் – "அம்மா, பசிக்குது! இன்னைக்கு சாயங்காலம் டிபன் என்ன?" என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடப் போயிருந்த அருண்.

"உப்புமா!" என்றவாறே தட்டில் உப்புமாவை வைத்துக் கொடுத்தாள் அம்மா.

"அம்மா, என்னோட பள்ளிக்கூடத்துச் சட்டை ரெண்டுமே அழுக்காயிடுச்சும்மா. நாளைக்கு போட்டுக்கிட்டுப் போக சட்டை இல்லேம்மா..." என்றான் அருண்

சாப்பிடும்பொழுதே.

"அதனாலென்ன? உன் பழைய ஸ்கூல் சட்டையும், வெள்ளைதானே? அதை மூட்டையிலேந்து எடுத்துத் தரேன்" என்ற அம்மா ஸ்டூலைப் போட்டு பரண் மீதிருந்த துணி மூட்டையை எடுத்தாள். அதைப் பிரித்து அருணின் பழைய சட்டையை எடுத்துக் கொடுத்தாள்.


சட்டையை வாங்கிப் போட்டுப் பார்த்த அருண், துணுக்குற்றான். சட்டை அவன் உடலுக்குப் பொருந்தாமல் மிகவும் சிறிதாக இருந்தது.

"என்னம்மா இது! சட்டை ரொம்பவும் சின்னதாயிட்டுதே? இந்தச் சட்டையை எப்படி ஸ்கூலுக்குப் போட்டுட்டுப் போறது?'' – கேள்வி மேல் கேள்விகளை அடுக்கினான் அருண்.

"ஒரு சட்டைக்கே, இப்படிச் சின்னதாயிட்டுதுன்னு தூக்கி எறியச் சொல்றியே! இதுவும், நீ பழைய ஸ்கூலில் படிச்ச போது போட்டிருந்த சட்டைதானே? இந்த சட்டை சின்னதாயிடுச்சின்னு புதிய சட்டையை ஒத்துக்கிட்டயே, அந்த மாதிரி புதிய டீச்சரை ஒத்துக்க மட்டும் பிடிவாதமா மறுக்கறியே!'' என்று எதிர்க்கேள்வி கேட்டாள் அம்மா.

அருண் மனத்தில் அம்மாவின் வாதம் புதிய கோணத்தில் பார்க்க வைத்தது. தன் தவறு புரிந்தது அவனுக்கு.

பழைய பள்ளியையும், சுஜா டீச்சரையும் நினைத்துக் கொண்டு, ஒழுங்காகப் படிக்காமல் புதிய டீச்சரையும் வெறுத்தது எத்தனை தவறு என்பது இப்போதுதானே புரிகிறது!' என்று எண்ணியபடி சட்டையுடன் அம்மாவைப் பார்த்தான் அருண். அந்தப் பார்வையில் தெளிவு தெரிந்தது. பழைய சட்டைக்கு நன்றி சொன்னாள் அம்மா.





கேட்கட்டுமா டாக்டர்?

பாக்கு சாப்பிடக்கூடாதா?

● பா. தாமரைச்செல்வி, விருத்தாசலம்.

? பற்களுக்கு இடையே இடைவெளி உள்ளது. இதைச் சரி செய்ய இயலுமா? இயலும் என்றால் எப்படி?

! பற்களுக்கு இடையில் சிறிதளவு இடைவெளி இருந்தால் 'கம்பிக்கட்டு' மூலம் பற்களை நெருக்கி இடைவெளியைக் குறைத்து விடலாம்; இடைவெளி அதிகமாக இருந்தால் செயற்கைப் பல் ஒன்றை அந்த இடைவெளியில் பொருத்திக் கொள்ளலாம்.

● தே. சஞ்சய்காந்தி, பொய்யாப்பாக்கம்.

? என் குரல் இனிமையாக இருப்பதற்கு எந்தெந்த காய்கறிகள், பழங்கள் சாப்பிடலாம்? வேறு யோசனைகள் இருந்தாலும் கூறுங்கள், டாக்டர்!

! வைட்டமின் பி12 நிறைந்த பால், முட்டை, இறைச்சி, ஈரல், பாலாடை போன்றவற்றையும், வைட்டமின் சி மிகுந்த ஆரஞ்சுப்பழச்சாறு, எலுமிச்சைப் பழச்சாறு, கொய்யா, ஆப்பிள், தக்காளி, முட்டைக்கோஸ், காலிபிளவர், நெல்லிக்காய் போன்றவற்றையும் அடிக்கடி சாப்பிட்டு தினமும் குரல் பயிற்சி எடுக்க வேண்டும். தொண்டையில் அடிக்கடி சளி பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும். இருமல் வருவதைத் தடுக்க வேண்டும். புகைபிடிக்கக் கூடாது. மது அருந்தக் கூடாது. வெற்றிலை போடக் கூடாது. மூக்கு அடைப்பு ஏற்படக் கூடாது.

● எஸ். அகிலன், கள்ளக்குறிச்சி.



? நான் படிக்கும் போது என் கண்களில் இருந்து நீர் வருகிறது . இது ஏன்? எப்படித் தடுப்பது?

! கண்களிலிருந்து நீர் வருவது பார்வைக் கோளாறுக்கு அறிகுறி. அதிலும் படிக்கும் போது மட்டும் கண்களில் நீர் வருகிறதென்றால் பார்வைக் கோளாறு உறுதி செய்யப்பட்ட மாதிரித்



தான். ஆகையால், உடனடியாக ஒரு கண் மருத்துவரை நீ நேரில் பார்க்க வேண்டும். தகுந்த கண்ணாடி அணிந்து கொண்டால் கண்களில் நீர் வருவது நின்று விடும். பார்வைக் கோளாறும் சரியாகி விடும்.

● நா. வனிதா, பத்தமடை.

? பேஸ்ட் உபயோகிப்பதனால் ஈறுகளுக்கு ஏதேனும் பாதிப்பு உண்டா?

! இல்லை. தரமான பற்பசையைப் பயன்படுத்தினால் ஈறுகளுக்கு நிச்சயம் பாதிப்பு ஏற்படுவதில்லை.

● எம். பத்மநாபன், காட்டுமன்னார் கோயில்.

? சிறுவர்கள் பாக்கு சாப்பிடக் கூடாது என்று என் அம்மா கூறுகிறார்கள். என்ன காரணம் டாக்டர்?

! உன் அம்மா கூறுவது முற்றிலும் சரிதான், தம்பி. பாக்கு



டாக்டர் கு. கணேசன்

ஆரோக்கியத்திற்கு ஆபத்தைத் தரக் கூடியது. எப்படி என்கிறாயா? பாக்கில் உள்ள நச்சுப் பொருள் ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அழித்துவிடும். இதனால் பாக்கு சாப்பிடுகிறவர்களுக்கு 'ரத்த சோகை' என்ற நோய் ஏற்படும். நெடுங்காலம் பாக்கு சாப்பிடும் பழக்கம் இருந்தால் வாயில் புற்று நோய் வருவதற்கும் கூட வாய்ப்பு உண்டே!

● **கே. பாலசுந்தர், வாலாஜா பேட்டை.**

? ***'ஹைட்ரோஃபோபியா'***



என்பது என்ன நோய், டாக்டர்?

! வெறிநாய்க்கடி நோயின் (Rabies) முக்கிய அறிகுறி 'ஹைட்ரோஃபிபோபியா' (Hydrophobia) - அதாவது 'நீர்ப் பயம்'. வெறி நாய் கடித்தவர்களுக்கு வெறி நோய் வந்துவிட்டால் தண்ணீரைப் பார்த்தாலோ, குடிக்க முயன்றாலோ அல்லது தண்ணீரை அருந்தினாலோ அவர்களுடைய தொண்டையத் தசைகள் இறுகிக் கொள்ளும். இதன் விளைவாக அவர்களால் தண்ணீரைக் குடிக்க முடிவதில்லை. ஆகவே, அவர்களுக்குத் தண்ணீரைப் பார்த்தாலே பயம் ஏற்படும். இந்த அறிகுறியை வைத்து வெறி நோய் ஒருவருக்கு உள்ளதா இல்லையா என்பதை மருத்துவர்கள் உறுதி செய்வார்கள்.

● **எம். முத்து, வெள்ளூர்.**

? ***டாக்டர், நான் நன்றாகப் படிப்பதற்காக இரவில் வெகு நேரம் கண் விழிக்க விரும்புகிறேன். இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்.***



! வேண்டாம், தம்பி, வேண்டாம். உனக்குக் குறைந்தது தினமும் ஆறிலிருந்து எட்டு மணி நேரம் வரை ஓய்வு தேவை. அப்போதுதான் மூளை அணுக்கள் இரவில் நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டு பகலில் உற்சாகமாக இருக்கும். தினமும் இரவில் இப்படி ஓய்வு எடுத்துப் படித்தால்தான் படிக்கின்ற பாடங்கள் மனதில் தங்கும். மாறாக, இரவில் அதிக நேரம் கண் விழித்தால் மூளை அயர்ந்துவிடும். மறுநாள் நீ படிக்கும் பாடங்கள் மனதில் தங்காது; மறந்துவிடும். ஆகவே, இரவில் வெகு நேரம் கண் விழிக்க முயற்சிக்க வேண்டாம்.

● **ஜெ. குணசேகர், சேலம்.**


? ***என்னுடைய உடம்பில் பல பாகங்களில் கருத்த முடியின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. இதை நிரந்தரமாகத் தடுக்க ஹார்மோன் ஊசி போடலாமா?***

! உன்னுடைய பிரச்னைக்கு ஹார்மோன் ஊசி பயன் தராது. தோல் மருத்துவர் ஒருவரை நேரில் பார்த்து ஆலோசனை பெற்றால் நல்லது. அல்லது அழகு நிலையங்களுக்குச் சென்று 'எலெக்ட்ரோலைசிஸ்' (Electrolysis) முறைப்படி வேண்டாத முடிகளை அகற்றி தற்காலிகமாகத் தீர்வு காணலாம்.

(அதுசரி, குணசேகர்... ஏதாவது கின்னஸ் சாதனை நிகழ்த்த எண்ணமா? ஒரே கேள்வியை 26 உள் நாட்டுக் கடிதங்களில் கேட்டிருக்கிறாயே! இது அவசியமா?).



எப்படியாவது...



அந்தப் பள்ளி அந்த வருடம்தான் தொடங்கப்பட்டது. அங்கே ஒன்பதாவது படிக்கும் முகேஷ் தலைமையாசிரியரின் பையன். மிகவும் குறும்புக்காரன். மற்ற மாணவர்களின் பேனா, பென்சில் போன்ற வற்றைத் திருடுவதும், அவர்களை அடிப் பதும் முகேஷிற்கு அன்றாடப் பொழுது போக்கு. இதுமட்டுமல்லாமல் ஆசிரியர் களேயே கிண்டல் செய்வதும், கேலி பண்ணுவதாகவே இருந்தான்.

தலைமையாசிரியரின் மகன் என்று ஆசிரியர்கள் அவனை ஏதும் பண்ணுவதில்லை. அப்படி மீறி அவனை அடித்துத் தண்டனை கொடுத்தால் தங்கள் வேலை பறிபோய்விடும் என்று அவர்களுக் குப் பயம்.

புதிதாகப் பள்ளிக்கு ஆசிரியர் பொறுப் பேற்று வந்த கடமைதவறாத கணேசன், முகேஷின் தற்போதைய பிரச்சினை.

கணேசன் வேலைக்கு வந்த ஒரு வாரத் திற்குள், ஒரு மாணவனை அடித்த குற்றத் திற்காக முகேஷ் அவரிடம் அடி வாங்கி யிருந்தான். இது அவனுள் ஒரு வெறியை ஏற்படுத்தியது. எப்படியாவது இன்று அவருக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

பள்ளி முடிந்து இருட்டியவுடன் தலை மையாசிரியர் அறைக்குச் செல்லும் வழி யில் இருந்த பெரிய வேப்ப மரத்தில் கையில் கல்லோடு ஏறி அமர்ந்து கொண் டான்!


ஆசிரியர் தன் அலுவல்களை முடித்துக் கொண்டு தலைமையாசிரியர் அறைக்கு வருவது வழக்கம். அவன் எதிர்பார்த்திருந்த படியே இருட்டில் கணேசன் வருவது நிழ லுருவமாகத் தெரிந்தது. மரத்தின் அடியில் உருவும் வந்ததும் தலையை நோக்கிக் கல்லை வீசினான். "ஆ! அம்மா!" என்ற அலறலோடு விழுந்தது அவ்வுருவம்.

"ஐயோ! அப்பாவின் குரல் அல்லவா?" என்று அதிர்ந்தான் முகேஷ். பாவம். தலைமையாசிரியர்தான் வந்து கொண் டிருந்தார்.


கூக்குரல் கேட்டு, சிலர் ஓடி வந்து அடிபட்டவரை எடுத்துச் சென்று மருத் துவமனையில் சேர்த்தனர்.

தான் செய்துவிட்ட பெரிய தவறை எண்ணி வருந்திய முகேஷ் அப்பாவிடம் நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்டு, தான் திருந்தி விட்டதாகக் கூறினான். இதைக் கேட்டு அருகில் இருந்த ஆசிரியர்கள் மகிழ்ந்தனர்.

— இராம. சசிகுமார்



சாட் பீட் கீத்!



மலையமான் நாணயம்

சின்னபாபு

பள்ளி இடைவேளை. மைதானத்தில் இருந்த மரங்களின் கீழே மாணவ மாண வியர் டிபன் பொட்டலங்களையும், டிபன் பாத்திரங்களையும் பிரித்தனர். அரச மரத்தடி மேடையில் சாட் பீட் கீத் அமர்ந்திருந்தனர்.

தண்ணீர் பாட்டிலில் நீர் பிடித்துக் கொண்டு வந்த கீதா, பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டே, "என்ன கொண்டு வந்திருக்கே சாதிக்?" என்று கேட்டாள்.

"பூரியும் சட்னியும்தான். நீ?"

"எலுமிச்சம் சாதம்."

"நான் பொங்கல்" என்றான் பீட்டர்.

மூவரும் பகிர்ந்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தனர்.

"வசதி குறைந்த பிள்ளைங்களுக்குச் சீருடை வாங்க ஒரு கண்காட்சிக்கு ஏற் பாடு செய்யப் போறாங்களாம். அறிவிப்பு நாளைக்கு வரும்னு தலைமையாசிரியர் என்னிடம் சொன்னார்" என்றான் பீட்டர்.

"எங்ககிட்ட எதுவுமே சொல்லலையே? ஏன்?" என்று கேட்டாள் கீதா.

"கடந்த ஆண்டு, இந்தியாவின் நாண யங்கள் என்ற தலைப்பில் நான் நம்ப இந்திய அரசு வெளியிட்ட பழைய நாண யங்களை எல்லாம், ஆண்டுவாரியா வரி சைப்படுத்தி, விளக்கத்தோட வைச்சேன் இல்லையா? அதை ரொம்பவும் எல்லா ரும் பாராட்டினாங்களே. அதனால், அந்த மாதிரி இந்த ஆண்டும் ஏதாவது காட்சிப் பொருளை வைக்கணும்னு சொன்னார். எனக்கு அட்வான்ஸ் தகவல் தந்ததற்குக் காரணம், நான் முன்னாடியே ஏற்பாடு களைச் செய்து கொள்ள வேண்டும் என் பதற்காகத்தான்."


"ஆமாம், சும்மா சும்மா இந்திய நாண யங்களையே வைத்தால், பார்த்துப் பார்த் துப் போரடிச்சுப் போச்சு" - கீதா.

"பீட்டர் ஒரு யோசனை, நம்ம தீபக் இருக்கானே...? அவனிடம் ஒரு பழங்கால நாணயம் இருக்கு. என்னிடம் காட்டிப் பெருமைப்பட்டுக்கிட்டான். அவன் அதை சும்மாத்தானே வைச்சிருக்கான்? அவனிடம் அதை இரவல் வாங்கி, உன் நாணயங்களுடன் சேர்த்து வை. எல்லோ ரும் ஆவலாப் பார்ப்பாங்க..." என்றான் கீதா.

"எந்த தீபக்? நம்ம வகுப்பிலேயே சி பிரிவில் படிக்கிறானே... அந்த தீபக்கா?"

"அவனேதான். பாரதி சாலையில் அவங்க அப்பாகூட அடகுக்கடை வைத் திருக்கிறாரே, அதே தீபக்தான்."

மாலையில் மூவரும் தீபக் வீட்டுக் குப் போனார்கள். அவர்களை வரவேற்று, தன்னுடைய தனி அறைக்குக் கூட்டிக்



கொண்டு போனான் தீபக். கதவை மூடித் தாளிட்டுவிட்டு, பீரோவில் இருந்து மிகவும் கவனமாக தீப்பெட்டி அளவுக்கு ஒரு பிளாஸ்டிக் பெட்டியை எடுத்துக் காட்டினான். அதற்குள் உருவம் சரிவரத் தெரியாத ஓர் அழுக்கான செப்புக் காசு! பிளாஸ்டிக் பெட்டியில் இருபுறமும் நன்கு தெரிந்தன. பூதக் கண்ணாடியைக் கொடுத்து உற்றுப் பார்க்கச் சொன்னான் தீபக்.

"முன்பக்கம் ஒரு குதிரை வலப் பக்கம் பார்த்து நிற்குது. அதன் கழுத்துக்குக் கீழே கிரிக்கெட் ஸ்டெம்ப் மாதிரி உச்சி திரும்பியபடி இரண்டு தெரிகிறதா? பின்பக்கம் பார். மூக்கோண முகடுகள் மூன்று. ஆறு கீழே பாய்ந்து வருவது போல் இருக்கா? ஈட்டி வடிவில் ஒரு வேலாயுதம் கூடத் தெரியுது பார்" என்று தீபக் விளக்கிய பிறகு தான் மூவரும் கவனித்துப் பார்த்தனர்.

"கிரிக்கெட் ஸ்டெம்ப் கொம்பு மாதிரி இருக்கே! அது என்னடா?"

"பிராமி எழுத்தில் அதற்குக் காரி என்று பெயர்! மலையமான் திருமுடிக் காரின்னு படிச்சிருப்பாயே...?"

"ஆமாம். சங்க கால மன்னன்" என்று வியந்தாள் கீதா.

"ஆமாம். அவனோட நாணயம்தான் இது. இந்த நாணயம் திருக்கோவிலூரில் எங்கள் நிலத்தில் கிணறு வெட்டினப்போ கிடைச்சது. அப்பா தூக்கி எறிஞ்சிட்டார். நான் தான் சென்னைக்குக் கொண்டு வந்து, நாணய இயல் நிபுணர்களுக்கு எழுதிக் கேட்டேன். அவங்க வந்து பார்த்து இதைச் சுத்தம் பண்ணி இது கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததுன்னு சொன்னாங்க. திருக்கோவிலூர் மலையமான் திருமுடிக்காரி வெளியிட்ட நாணயம் என்பதை

உறுதி பண்ணினார்கள்."

சங்க காலத்து நாணயமான அதை இப்பொழுது மூவரும் அளவில்லாத பணிவுடனும், அதிசயத்துடனும் பார்த்தார்கள்.

"வலதுபக்க மூலைமேல் கொஞ்சம் கரைஞ்சு போயிருக்கு. இதன் எடை 4.100 கிராம். 2.2 x 1.8 செ.மீ அளவு. நாணய இயல் சங்கத்தாரே இதை விலைக்குக் கேட்டாங்க. நான்தான், கொஞ்சநாள் வைச்சிருந்துவிட்டுத் தர்றதாச் சொல்லியிருக்கேன்."

"தீபக். பள்ளிக் கண்காட்சியில், நான் என்னுடைய நாணய சேகரிப்பை வைக்கப் போறேன். அதுல இந்த அதிசயமான மலையமான் நாணயத்தையும் சேர்த்து வையேன்? அமைப்பு, பீட்டர் - தீபக்னு போட்டு வைக்கலாம்?"

"கண்டிப்பா தர்றேன் பீட்டர். நம்ம பள்ளியில், ஒரு நல்ல காரியத்துக்கு இது பயன்படுவது பெரிய மகிழ்ச்சி. எங்கிட்ட பாதுகாப்பா இருக்கிறது, இரண்டு நாள் கண்காட்சியில்தான் இருக்கட்டுமே. கண்காட்சிக்கு முன்னாடி வந்து வாங்கிட்டுப் போயேன்" என்றான் தீபக்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சேர மன்னனின் அரிய நாணயத்தைக் காண வேண்டுமா? அரிய வாய்ப்பு. பள்ளி கண்காட்சிக்குக் கூட்டமாக வந்து காணுங்கள். அரிய வாய்ப்பை இழக்காதீர்கள்" என்று நியூஸ் பேப்பரில் பச்சை மசியில் பட்டையாக எழுதி பள்ளிக் கூடம், கடைத்தெரு, பால் டிப்போ என்று ஓர் இடம் விடாமல் சாட் பீட் சீத் ஒட்டினார்கள்.

கண்காட்சி தொடங்க இன்னும் ஒரு வாரம் இருந்தது. மாணவர்கள் தங்கள் தனித் திறமையை வெளிப்படுத்தி, தங்களால் இயன்ற அளவுக்குக் காட்சிப் பொருள்களைச் செய்து கொண்டிருந்தார்கள். மாவட்ட ஆட்சியரே காட்சியைத் திறந்து வைக்க இருந்தார்.

அன்று காலை, பீட்டர் எழுந்து பல் துலக்கிக் கொண்டிருந்தான். சாநிக்கும் கீதாவும் சைக்கிளில் வந்தார்கள்.

"பீட்டர், ஓர் அதிர்ச்சியான செய்தி. தீபக்கின் அப்பா வைத்திருந்த அடகுக் கடையை இரவில் உடைத்து இருபது பவுன் நகைகளையும், ரொக்கத்தையும் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். இரவில், உறவினர் வீட்டுத் திருமணத்திற்குப் போயிருக்கிறார்கள். இல்லாத சமயத்தைக் குறிவைத்துக் கொள்ளையடித்திருக்கிறார்கள்" என்றாள் கீதா.


பீட்டர் சைக்கிளில் அவர்களோடு கிளம்பினான்.

"பீட்டர், நகைகளுடன் அந்த சேரன் நாணயத்தையும் எடுத்துக் கொண்டு போயிட்டாங்களே!" என்று அழுதான் தீபக்.

"இவங்கதான் பெரிய துப்பறியும் புலிகள் ஆச்சே? கண்டுபிடிக்க வேண்டியது தானே?" என்று எல்லோரும் கிண்டலடித்தார்கள்.

போலீஸ் நாய் வந்தது. விரல் ரேகை





நிபுணர் வந்து படமெடுத்தார். எந்தப் பயனும் இல்லை.

கண்காட்சிக்கு நாள் நெருங்கியது.

"மூர்மார்க்கெட் பின்னாடி பழைய காசுகள் விற்கும் கடை இருக்கு. அங்கே போய் ஏதாவது பழைய காலத்துக் காசு விலைக்குக் கிடைக்குமா என்று பார்க்கலாம். பெரிசா விளம்பரம் வேற வைச்சுட்டோமே?" என்றான் பீட்டர்.

சாதிக்குக்கு அவன் அம்மாவை டாக்டர் வீட்டுக்கு அழைத்துப் போக வேண்டியிருந்தது. கீதா, உறவினர் ஒருவரை ரயிலேற்றப் போக வேண்டியிருந்தது. அதனால் பீட்டருடன் இருவராலும் போக முடியவில்லை.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் கீதாவின் வீட்டு டெலிபோன் அலறியது. பீட்டர் தான் பேசினான். உடனே சாதிக்கை அழைத்துக் கொண்டு மூர்மார்க்கெட்டுக்கு வரும்படி கூறினான். குரலில் ஏதோ பதற்றம் இருப்பது தெரிந்தது.

சுரங்கப் பாதைக்கு அருகே காத்திருந்த பீட்டர், இருவரையும் அழைத்துக் கொண்டு அருகே இருந்த ஓட்டலுக்குப் போனான்.


"தீபக் வீட்டில் திருட்டுப் போன அதே மலையமான் நாணயம், இங்கே ஒரு கடையில் விற்பனைக்கு வந்திருக்கிறது. இருநூறு ரூபாய் கூறுகிறான். நான் பேரம் பேசுவது போல் இழுக்கிறேன். நீங்கள் போய், தீபக்கையும், போலீஸ் இன்ஸ்பெக்டரையும் அழைத்து வாருங்கள். தீபக்கை மட்டும் முதலில் அனுப்பிவையுங்கள். அதே நாணயம்தானா என்பதை அவனும் உறுதி செய்யவேண்டும்" என்றான் பீட்டர்.

கீதாவும் சாதிக்கும் விரைந்தனர்.

உடனுக்குடன் எல்லாம் நடந்தன. "என்னுடைய நாணயமேதான்! வலது பக்க ஓரத்தில் கரைந்திருக்கிறது பார். நான் பெட்டியில் போட்ட மருக்கொழுந்தின் மணம்கூட இன்னும் இலேசாக அடிக்கிறது" என்று உறுதி செய்தான் தீபக்.

நாணயம் விற்றவனைப் போலீசார் அதட்டி மிரட்டியபோது, அதை விலைக்கு வாங்கிய இடத்தைக் காட்டினான் அவன். அங்கே சோதனையிட்டபோது நகைகளும் கிடைத்தன. அதோடு தீபக்கின் வீட்டில் பணியாற்றி விலகிக் கொண்ட பக்கிரியும் சிக்கினான். கொள்ளையிட்டது அவன்தான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சேரர் நாணயம் என்பதோடு, இருபது பவுன் கொள்ளை போன நகைகளை மீட்கக் காரணமாகவும் இருந்த அற்புத நாணயம் என்று கண்காட்சியில் விளம்பரப்படுத்தினர் சாட் பீட் கீத்!



அரையும் அரையும்!

மரகத நாட்டு அரண்மனைத் தோட்டத்தில் ஒரு அதிசய மாமரம் இருந்தது. அதில் பெரிய பெரிய மாங்கனிகள் பழுத்துத் தொங்கின.

இரவு-பகல் காவலுக்கென்று எப்போதும் இரண்டு ஆட்களை அரசர் அமர்த்தி இருந்தார். இருந்தும் மாங்கனிகள் அடிக்கடி குறைய ஆரம்பித்தன.

காவல் ஆட்களை அழைத்து விசாரணை செய்தார். அவர்களில் ஒருவன் பார்வைத் தெளிவு இல்லாதவன்; மாலைக் கண் நோயாளன். மற்றொருவனோ கால் ஊனமுற்றவன். ஊன்றுகோல் உதவியால் நடப்பவன்.

"பழங்கள் குறையக் காரணம் என்ன?" என்று அவர்களிடம் கேட்டார் அரசர்.

"அரசே! நான் பார்வை குறைந்தவன். அரை மனிதனுக்குச் சமம். எப்படி, பழங்களைப் பார்த்துப் பறிக்க முடியும்?" என்றான் முதல் காவலாளி.

"மகாராசா! நானும் கால் ஊனம் உள்ளவன். வேகமாக நடக்கவும் ஓடவும் முடியாதவன். நானும் அரைமனிதனே! உயரத்தில் தொங்கும் பழங்களை நான் எப்படித் திருட முடியும்?"

"அமைச்சரே! இவர்களைத் தவிர காவலுக்கு வேறு ஏற்பாடு உண்டா?"

"இல்லை அரசே!" என்றார் மந்திரி.


அவர்களை அனுப்பிவிட்டு அரசர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவருக்குத் தெளிவு பிறந்தது.

"காவல் செய்யும் இந்த இரண்டுபேருமே தங்களை அரைமனிதர் என்றே சொல்கின்றனர். இரண்டு அரை சேர்ந்தால்... முழுமை ஆகுமே!" அரசருக்கு மாம்பழம் திருட்டுப் போகும் மர்மம் புரிந்தது.


"மாம்பழத் திருடர்கள் இவர்களே. பார்வையில்லாதவன் தோள் மீது நடக்க முடியாதவன் உட்கார்ந்து கொண்டு ஊன்று கோலால் பழங்களைத் தட்டிப் பறிக்கிறார்கள் என்று ஊகிக்கிறேன். இன்று மறைந்திருந்து சோதிக்கச் சொல்லுங்கள்."

அரசர் கூறியபடியே மந்திரி தானே மறைந்திருந்து பார்த்தார். அரசர் ஊகத்தின்படியே நடந்தது.

அரையும் அரையும் ஒன்றாகி-திருடுவதைக் கண்டு அதிசயித்தார். பிறகு என்ன? தண்டனைதான்!



- எஸ். குழந்தைசாமி



ஈ ஹெங்க் சுவான்


இளைஞனை விழுங்கிய மலைப்பாம்பு!

மலைப்பாம்பு தனது இரையை விழுங்கி, பிறகே ஜீரணிக்கும் என்பதைக் கேள்விப் பட்டிருக்கிறோம். உயிர்க்காட்சி சாலைகளில் மலைப்பாம்புகள் எலிகளையும் முயல்களையும் பிடித்து, இறுக்கி, செயலற்றதாக்கி, சிறுகச் சிறுக விழுங்குவதைப் பார்க்கும் வாய்ப்பு ஒரு சிலருக்குக் கிடைத்திருக்கும்.

மலைப்பாம்பு மான்களையும் விழுங்கும். வாய்ப்புக் கிடைத்தால் ஒரு மனிதனையே கூட விழுங்கும். இதையெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே தவிர நேரில் பார்த்ததில்லை. மலைப் பாம்பால் மனிதனை எப்படி விழுங்க இயலும் என்ற சந்தேகம்கூட நமக்குத் தோன்றுகிறது.

இந்தச் சந்தேகங்களை எல்லாம் சமீபத்தில் மலேஷியாவில் நடந்திருக்கும் ஒரு நிகழ்ச்சி தீர்த்து வைத்துவிட்டது. அங்கே உள்ள கிராமத்தில் ஈ ஹெங்க் சுவான் என்ற 29 வயது இளைஞன், எதிர்பாராதவிதமாக மலைப்பாம்பு ஒன்றிடம் சிக்கிக் கொண்டான். அந்தப் பொல்லாத பாம்பு கிட்டத்தட்ட ஏழு மீட்டர் நீளம் இருந்தது. 200 அடி கிடுகிடு பள்ளத்தில் குடிநீர் கொண்டுவர இறங்கியபோது அந்த இளைஞன் பாம்பிடம் சிக்கிக் கொண்டான். அவன் உடலைச் சுற்றிக் கொண்டு அவனைச் செயலற்றவனாக ஆக்கி, அந்த மலைப்பாம்பு அவனை வாய்வழியாக விழுங்கத் தொடங்கியது.

தண்ணீர் எடுத்து வரப்போன தம்பியைக்



காணாததால், கவலைக்கு ஆளான அண்ணன் அவனைத் தேடிக் கொண்டு இறங்கினான். அவன் பாம்பைப் பார்த்த போது, தம்பியின் உடலில் பாதிக்குமேல் விழுங்கப்பட்டிருப்பதைக் கண்டான். அவன் மனம் பதறியது. என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. மலைப் பாம்பு மிக மெதுவாகவே பிடித்த உடலை விழுங்கும் என்பதைக் கேள்விப்பட்டிருந்த அண்ணன், உடனே அருகில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான். தம்பியைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. தம்பி பாம்புக்குப் பலியாகிவிட்டது நன்கு தெரிந்தது அவனுக்கு. இருப்பினும் தன் தம்பியை விழுங்கிய மலைப்பாம்பைப் பழிதீர்த்துக் கொள்ளவே உதவி தேடி ஓடினான்.



அவன் கூறியதை முதலில் யாரும் நம்பவில்லை. உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. நாற்பது நிமிடங்கள் ஆகிவிட்டன. அண்ணன் ஆட்களுடன் திரும்பியதும், பாம்பைக் கொன்று, தம்பியின் இறந்த உடலை மீட்டான். இதுவும் கூட எளிதான செயலாக இல்லை. பெரும் முயற்சி தேவைப்பட்டது. இதற்கு முன்பு இந்தோனேஷியாவில் பிடிக்கப்பட்ட ராஜ மலைப்பாம்பு பத்து மீட்டர் நீளம் இருந்தது. இந்தோனேஷியா, மலேஷியா தீவுகளில் உலகின் மிகப் பெரிய மலைப்பாம்புகள் இன்னமும் வாழ்கின்றன.

- பு. கயல்விழி &
பு. கலைச்செல்வி, சிங்கப்பூர்.

பிருந்தாவனக் கவியரங்கம்!



பந்தாடு

பந்தாடு! தம்பி! பந்தாடு!
பாய்ந்து குதித்துப் பந்தாடு!

தட்டித் தட்டிப் பந்தாடு!
தாவித் தாவிப் பந்தாடு!

உறுதி கொள்ளப் பந்தாடு!
உருட்டி உருட்டிப் பந்தாடு!

சோம்பல் நீங்கப் பந்தாடு!
சுற்றிச் சுற்றிப் பந்தாடு!

ஏற்றம் கொள்ளப் பந்தாடு!
எட்டி உதைத்துப் பந்தாடு!

நாளை உலகை நீயாளும்
நாளை எண்ணிப் பந்தாடு!

- ஏ. ஹரிகிருஷ்ணன், வெள்ளையூர்.



அம்மா

அம்மா என்று அழைத்தாலே
ஆனந்தம் பொங்குது தன்னாலே
இறைவன் உண்டோ என்போர்க்கு
ஈன்றவள் இறைவன் வடிவாகும்

உயர்ந்த பண்புகள் கொண்டவளின்
ஊரறிந்த உண்மை இது
எவர்க்கும் அன்பு காட்டுபவள்
ஏற்பீர் உணர்வீர் உயர்வீரே!

ஒருநாள் கூடச் சலிப்பின்றி
ஓய்வே இன்றி உழைக்கின்றாள்
ஔவை கூறிய பெண்ணிவளே
அஃதை மறப்போர் உண்டோ சொல்

- பொன் குமார், சேலம்.



அப்பா எழுதிய கவிதை!


இனியன் எழுதிய கவிதை
இரண்டே அடியாம் கவிதை
என்றும் இனிக்கும் கவிதை
இசைக்கு இசைந்த கவிதை

இந்து எழுதிய கவிதை
இனிமை பொங்கும் கவிதை
நான்கு அடியாம் கவிதை
நாட்டைப் பற்றிய கவிதை

மாமா எழுதிய கவிதை
மனிதன் பற்றிய கவிதை
தேனாய் சுவைக்கும் கவிதை
திகட்டா பாடம் கவிதை

அப்பா எழுதிய கவிதை
அதுவே புதுமைக் கவிதை
எட்டே வரியாம் கவிதை
என்னைப் பற்றிய கவிதை!

- ச. அம்பேத்கார், சிங்கப்பூர்.
(தொடர்பு முகவரி இல்லை)



தொலைக்காட்சி


தொலைக் காட்சியாம்
தொலைக்காட்சி
திகட்டா இன்பத் தொலைக்காட்சி
மாலை எப்போ வருமென்றே
மயக்க வைக்கும் தொலைக்காட்சி

தம்பிக்கு அறிவியல் தகவல்கள்
திரைப்படம் நாடகம் பேட்டிகளை
நம்பிக்கை அளிக்கும் முயற்சிகளை
நமக்கு வழங்கும் தொலைக்காட்சி

உழைக்கும் நேரம் குறையாமல்
உயர்த்தும் படிப்பும் தவிர்க்காமல்
பழிக்கும் நிலைக்குப் போகாமல்
பார்த்து உயர்வோம் தொலைக்காட்சி!

- ஆர். கே. கோவிந்தராஜ்,
கச்சிராபாளையம்.





கடிகாரம்

நேரம் காட்டும் கடிகாரம்
நல்ல நண்பன் கடிகாரம்
பெரிய முள்தான் மணிகாட்டும்
பிரியாச் சிறியது நிமிடத்தை

அறுபது வினாடி ஒருநிமிடம்
அறுபது நிமிடம் ஒரு மணியாம்
ஒருநாள் என்பது இக்கணக்கில்
இருபத்து நான்கு மணிநேரம்

காலம் பார்த்துக் கடமைகளை
கருத்தாய் செய்ய உதவிடுமாம்
காலை மாலை எந்நேரம்
களைப்பே இன்றி உழைத்திடுமாம்!

- வடகரை சேக் உசேன்,
தென்கச்சி.

அழகு நிலா


அழகு நிலா வானத்திலே
ஆட்சி செய்தது
அமுத ஒளி உலகத்தினை
அடிமை கொண்டது!

கரிய மேகக் கூட்டமெல்லாம்
கலைந்து போனது
விரைந்து வந்த விண்மீன்கள்
வீசி மினுக்குது!

பாடி ஓய்ந்த பறவைக் கூட்டம்
பறந்து ஒளிந்தது
பாடுபட்ட மனிதர் கூட்டம்
படுக்க விரைந்தது!

- ஜெ. ஷீலாபானு, கோத்தகிரி.





கொடுத்திடு!

சிட்டு அக்கா கிட்டேவா
சேமம் தானா கூறவா
பட்டுப் போன்ற மேனியை
பறந்து எனக்குக் காட்டவா

உயர உயரப் பறந்ததும்
உச்சிக் கொம்பில் அமர்வதேன்?
தயக்கம் இன்றிக் காரணம்
தம்பி எனக்குக் கூறுவாய்

அருமை மாமா தோட்டத்தில்
அழகு ரோஜா குலுங்குது
விரைந்து சென்று பறித்திடு
வந்து எனக்குக் கொடுத்திடு!

- தேனி முருகேசன்.

கை கொடுக்கும்

அருமைத் தங்கை இங்கேவா
அன்புத் தம்பி நீயும்வா
ஆர்வத் துடனே கேட்பீரே
அண்ணன் சொல்லப் போவதனை.

அம்மா அப்பா தருகின்ற
ஐந்து பத்துக் காசுகளை
சும்மா செலவு செய்யாமல்
சேர்த்து வைக்கப் பழகிடுவீர்

சிறுகச் சேரும் காசெல்லாம்
சேர்ந்து பெரிய தொகையாகும்
உரிய நேரத்தில் உதவி செய்து
உற்ற நண்பனாய் கைகொடுக்கும்.

- பி. சுந்தரி, விருதுநகர்.



தாயன்பு!

பெட்டைக் கோழி ஒருமுறை
பத்து முட்டை இட்டது
இட்ட முட்டை அணைத்துமே
இனிதாய் குஞ்சு பொரித்தது

வெள்ளை சிவப்பு கறுப்பிலே
வண்ணச் சிறிய குஞ்சுகள்
மெல்ல ஓடித் திரிந்தன
மிரட்டி தாயும் அணைத்தது

குஞ்சுக் கூட்டம் தன்னையே
கொத்தக் கழுகு வந்தது
அஞ்சி டாமல் தாயுமே
அணைத்துக் குஞ்சைக் காத்தது.

குஞ்சு வண்ணம் பலபல
குணங்கள் குறைகள் பலபல
கொஞ்சம் கூட வேற்றுமை
காணா அன்பு தாயன்பு!

- லாலாபுரம் சுந்தரராஜன்.



பிரமிக்க வைக்கும் அங்கோர்வாட்!

இந்த முறை மூகோட் வீசிய வலையில் எந்தப் பூச்சியும் சிக்கவில்லை. அதற்காக அவர் ஏமாற்றமோ களைப்போ அடையவும் இல்லை.

"மூகோட், போகிற போக்கைப் பார்த்தால் பிரான்சுக்கு நாம் திரும்பும் போது, உங்களுடைய பட்டுப் பூச்சி சேகரிப்பே மிகப் பெரிய சுமையாக இருக்கும் போல் இருக்கிறதே!" என்று, கூட இருந்த சார்லஸ் பொலிவோ கிண்டலடித்தார்.



"நீங்கள் கிண்டலுக்காகக் கூறினாலும், உண்மை நிலை அதுதான் பொலிவோ. இத்தனை பெரிய பட்டுப் பூச்சிகளை ஒரே இடத்தில் நான் கண்டதே இல்லை. இவைகளைப் பிரான்சுக்குக் கொண்டு போய் ஆராய்ச்சி செய்வதை விட இங்கேயே அருகே ஓர் ஆராய்ச்சி நிலையம் அமைத்துக் கொண்டு பணிகளைத் தொடங்கி விடலாமா என்று கூடப் பார்க்கிறேன்" என்றார் முகோட்.

பொலிவோ சிரித்தார்.

"ஆமாம் பொலிவோ, நான்தான் பட்டுப் பூச்சி ஆராய்ச்சிக்காக இப்படி அலைந்து திரிகிறேன். நீங்கள் வந்திருக்கும் நோக்கம் சமயப் பிரசாரம்தானே? அதைச் செய்ய வேண்டியதுதானே உங்கள் பணி? எதற்காக என்னுடன் இப்படிக் காடு காடாக அலைகிறீர்கள்?"

பதில் கூறுவதற்கு அங்கே பொலிவோ இல்லை. அருகே இருந்த மிக உயரமான மரத்தின் உச்சிக் கிளை ஒன்றில் அவர் ஏறிக் கொண்டிருந்தார்.

"முகோட். சீக்கிரம் மரத்தில் ஏறி நான் இருக்கும் இடத்துக்கு வாருங்கள்" என்று பரபரப்புடன் கத்தினார் பொலிவோ. முகோட் உடனே செயல்பட்டார்.


"அதோ அங்கே பாருங்கள்!"

பொலிவோ கைகாட்டிய இடத்தில் அடர்ந்த காட்டு மரங்களுக்கு இடையே கட்டட இடிபாடுகள் தெரிந்தன. கோபுர உச்சிகள் தலைநீட்டின.

"என்னது! காட்டுமிராண்டிகள் வாழும் அடர்ந்த காட்டுப் பகுதி என்று கூறினார்கள். கலைச் சிறப்புமிக்க கட்டடங்களின் இடிபாடுகள் தெரிகின்றனவே!" என்று வியந்தார் முகோட். இது நடந்த ஆண்டு 1860.

இருவரும் திரும்ப வந்து கூறிய தகவலை முதலில் யாரும் நம்பவே இல்லை.

"மக்கள் நடமாட்டமே இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதி அது. அங்கே கட்டட இடிபாடுகளாவது!" என்று அவர்களைக் கேலி செய்தனர். ஆனால் ஆர்வம் மிக்க ஆராய்ச்சியாளர்கள் ஒன்றுகூடி முயன்ற போது உலகமே வியக்கும் நிலையில் இடிபாடுகள் நிறைந்த ஓர் அற்



புதுமான கலை உலகம் வெளிப்பட்டது. அவைதான் ஆங்கோர்வாட் ஆலயங்கள்.

இந்த ஆங்கோர்வாட், கம்போடியா நாட்டில் உள்ளது. உலகின் மிகப் பெரிய இந்துக் கோவில் இங்குதான் அமைந்திருக்கிறது. இப்பொழுது இங்கு வழிபாடு ஏதும் நடைபெறவில்லை. கலையழகு நிறைந்த பல கோவில்களை உள்ளடக்கியது இது.

கம்போடியா, சம்ஸ்கிருத இலக்கியங்களில் காம்போஜம் என்று குறிப்பிடப்படுகிறது. எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு இந்து மதம் பரவி இருந்தது. இரண்டாவது சூரியவர்மன் என்ற மன்னன், இந்த அழகு குலுங்கும் மாபெரும் ஆலயத்தை கி. பி. 1113-ஆம் ஆண்டில் திருமாலுக்காகக் கட்டினான். இதைக் கட்டி முடிக்க ஏழு ஆண்டுகள் ஆயின. பல நூற்றாண்டுகள் பெரும்புகழுடன் திகழ்ந்த இந்த விஷ்ணு ஆலயம், இந்து மதம் குன்றத் தொடங்கியதும் தன் பெருமைகளை இழக்கத் தொடங்கி, நாளடைவில் பாழடைந்து, அழிவுகளுக்கு உள்ளாகி அடர்ந்த காட்டுப் பகுதிகளில் மறைந்து கொண்டது. சார்லஸ் பொவிவோவும், ஹென்றி முகோட்டும் இதைக் கண்டுபிடித்து உலகுக்கு இதன் கலைப் பெருமைகளை அறிமுகப்படுத்தினர். இதற்குப் பிறகு உலகெங்கும் இருந்து புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆண்டுக் கணக்கில் மேற்கொண்ட முயற்சிகளாலும், கம்போடியா அரசின் உதவியாலும் கலைச் சுரங்கமான இந்த புராதன இந்து ஆலயம் முழுவதுமாக வெளிக்கொண்டு வரப்பட்டது. இயற்கையின் சீற்றம், கலைச் செல்வத் திருடர்களின் கைவரிசை, காற்றின் அரிப்புத் தன்மை எல்லாமாகச் சேர்ந்து இதை மூளி செய்து விட்ட பிறகும், இதன் கம்பீரத்தையும் அழகையும் யாராலும் கொள்ளையிட முடியவில்லை! மதுரை மீனாட்சி ஆலயத்தின் பரப்பளவைப் பார்தது வியக்கிறோம். உண்மையில் அங்கோவார்வாட் விஷ்ணு ஆலயத்தின் பரப்பு மீனாக்ஷி ஆலயத்தைப் போல் 13 மடங்கு பெரியது என்றால் அதன் அளவு எப்படி இருக்கும் என்பதை நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

இதன் நடுவில் உள்ள ஆலயம் உயரமான பீடத்தில் சுமார் 200 அடி உயர கோபுரத்துடன் அமைந்துள்ளது. சுற்றுச் சுவர்களில் மகாவிஷ்ணுவின் தசாவதாரக் கதைகள் கலை மிளிரக் காட்சியளிக்கின்றன. விமானத்தில் இருந்து பார்த்தால் இக் கோவிலின் வடிவம், மலர்ந்த தாமரை வடிவில் தோற்றம் அளிக்கிறது. இது ஒரு பல்கலைக் கழகமாகவோ இல்லை வான ஆராய்ச்சி மையமாகவோ இயங்கியிருக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட கற்பலகைகள் கோயில் நெடுக உள்ளன.

ஒரு டன் எடைக்குள் இருக்கும் கலையழகு மிக்க சிலைகள் பலவற்றை கலைத் திருடர்கள் திருடிக் கொண்டு போய், நல்ல விலைக்கு விற்று வருகிறார்கள். கம்போடிய அரசு இந்த புராதனக் கலைக் கருவூலத்தைக் காக்க உதவி கோரி, யுனெஸ்கோவுக்கு வேண்டுகோள் விடுத்தது. அதை ஏற்றுக் கொண்ட யுனெஸ்கோ, அங்கோர்வாட் கோயில்களைப் பாதுகாக்க தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

நன்றி புகைப்படம் :
யுனெஸ்கோ கூரியர்

பிள்ளையார் சிரித்தார்!

பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் வந்து அமர்ந்தான் சிங்காரம். சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. பைக்குள் கையை விட்டான். அந்தப் பேனாவை எடுத்தான். அது அழகான ஹீரோ பேனா. விலை மிக்க பேனா. தாளெடுத்தான், எழுதிப் பார்த்தான். மிக அருமையாக எழுத்துக்கள் தாளில் விழுந்தன.

"இந்த அருமையான, அழகான பேனாவால் நிறையக் கதைகள் எழுதுவேன்; பத்திரிகைகளுக்கு அனுப்புவேன். புகழ் பெறுவேன்" என்று கம்பீரமாகச் சொல்லிக் கொண்டான். பேனாவை பத்திரமாகப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

யாரோ வருவது போல் இருந்தது. பார்த்தான். நண்பன் சுந்தர்தான். சுந்தரின் முகம் வாடி இருந்தது. கண்கள் கலங்கி இருந்தன.

"ஏன் சுந்தர் ஒரு மாதிரி கவலையா இருக்கே? முகமெல்லாம் கூட அழுத மாதிரி இருக்கு?" என்று கேட்டான் சிங்காரம்.

"என் மாமா நேற்று அழகான பேனா கொடுத்தார், சிங்காரம்! அது மிக அழகா எழுதும். விலை உயர்ந்த பேனா. வகுப்பில் அதில்தான் எழுதினேன். இப்பொழுது அதைக் காணவில்லை."

வகுப்பறையில் பெஞ்சுக்குக் கீழே ஹீரோ பேனாவைக் கண்டெடுத்ததை சிங்காரம் எண்ணிப் பார்த்தான்.

'அப்படியானால் அந்த அழகான ஹீரோ பேனா, சுந்தருடையதுதானா?'

திருச்சி பாரதன்

"நம்முடையது இல்லை என்பது உறுதியான உடனே அதைக் கொடுத்து விடுவதுதான் உத்தமனுக்கு அடையாளம். தெரிந்த பிறகும் வைத்துக் கொள்வது எத்தனை கயமைத்தனம்! கொடுத்து விடு!" என்று மனசாட்சி உசுப்பியது.

"அழகான பேனா. அருமையா எழுதுது. கதைகள் எழுத இது கையில் இருந்தாலே கற்பனை வரும். இதைப் போய் இழப்பதா? வேண்டாம்" என்றது ஆசை.

சிங்காரம் எச்சலைக்கூட்டி விழுங்கினான். "பாவண்டா சுந்தர்! நல்லா தேடிப் பார்" என்று அனுதாபப்படுவது போல் கூறினான்.


"எனக்கு நம்பிக்கை இல்லேடா. நல்லவன் கையில் சிக்கியிருந்தா திருப்பித் தருவாங்க. இந்தக் காலத்தில் நம்மைப் போல நல்லவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்றான் சுந்தர்.

சிங்காரம் கோவிலில் இருந்த பிள்ளையார் சிலையைப் பார்த்தான். அவர் "உம்" என்று வெறுப்பாக சிங்காரத்தைப் பார்ப்பது போல் தோன்றியது.. சிங்காரம் வீட்டுக்கு நடந்தான்.

வீட்டில் ஒரே குமுறலாக இருந்தது. அப்பா படுத்துக் கிடந்தார். முகம் தளர்ந்து இருந்தது! அம்மா முகத்தில் ஒரே சோகம்.

"அம்மா....! என்னம்மா நடந்தது?" - சிங்காரம் தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கலவரத்துடன் கேட்டான்.

"அப்பாவுக்கு இன்று சம்பள நாள் இல்லையா? ஐந்தாயிரம் ரூபாய் சம்பளத்துடன் வந்தார். வழியில் பஸ் ஏறும்போது மணிபர்சை யாரோ 'ஜேப்படி' செய்து விட்டார்களாம். வீட்டிற்கு வந்ததும் மணிபர்ஸ் திருட்டுப் போனதை அறிந்ததும்



மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டார்." - அம்மா திக்கித் திணறி, தட்டுத் தடு மாறிக் கூறினாள்.

'பிள்ளையாரே! எங்கப்பாவைக் காப்பாற்று' - சிங்காரம் மனதிற்குள் அலறினான்.

அப்பொழுது சுந்தர் பரபரப்பாக ஓடி வந்தான். அவன் கையில் ஒரு மணிபர்ஸ்!

"சிங்காரம்! இது உங்க அப்பாவின் மணி பர்ஸ்தானே? பஸ் நிறுத்தத்தில் உங்க அப்பா பஸ்ஸில் ஏறும் போது பெரிய குழி நிறைய மழைத் தண்ணி தேங்கிக் கிடக்கு இல்லையா? அதுல விழுந்து விட்டது போல இருக்கு. பர்ஸ் என் கண்ணில் பட்டது. எடுத்துப் பார்த்தேன். உங்க அப்பாவின் புகைப் படம் அதில் இருந்தது. அதனால் எடுத்துக் கொண்டு ஓடி வந்தேன்...."

சிங்காரம் பர்சில் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். ஐயாயிரம் ரூபாயும் அப்படியே இருந்தது.

சுந்தரை அழைத்துக் கொண்டு பூஜை அறைக்குள் ஓடினான்.

"சுந்தர், என்னை மன்னித்து விடு! உன் அழகான பேனாவை வகுப் பறையில் பெஞ்சுக்குக் கீழே நான்தான் கண்டெடுத்தேன். அருமையாக எழுதியது. நானே வைத்துக் கொள்ள நினைத்தேன். உன் பெரும்புத்தி என்னைத் திருத்தி விட்டது. என்னை மன்னித்து விடு சுந்தர்."

பேனாவை நீட்டியபடியே சிங்காரம் தேம்பித் தேம்பி அழுதான்.

பூஜை அறையில் இருந்த பிள்ளையார் அவனை நோக்கி இப்பொழுது சிரித்தார்.



வாசகர்கள் தூங்கவில்லை!

★ கூந்தலழகி படக்கதை நாமும் அவசியம் நேரும் போது மற்றவர் நலனுக்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்ற மன எழுச்சியைக் கொடுத்தது. படங்கள் அருமை! - கல்யாண் வி. சேதுராமன், விலியனூர் தா. மணிமாலா, கருமத்தம்பட்டி ஆர். அனிதா இராஜப்பன், திருக்கண்ணங்குடி சரவணகுமரன், வெள்ளிக்கிடங்கு, ஆர். நந்தகுமார், நன்செய் இடையார் த. குணசங்கரன், வரிக்கல் ஏ. குமார், விருத்தாசலம் வி. பிரபாகர்.

★ 'புயல் புராணம்', பிரேம் போட்டு வைக்க வேண்டிய பயனுள்ள கட்டுரை. மிக விளக்கமாக இருந்தது. - சாத்தூர் மா. சின்னப்பா ராவுத்தர், திருத்தணி வா. சோபனா, வேங்கைபுலியூர் ஏ. அடைக்கலசாமி, காட்டுமன்னார் கோயில் தின. அன்புதேவன், செம்பனார்கோவில் ஜெ. ஜெம்மு, திருவள்ளூர் அ.க. சிவமுருகன், நன்செய் இடையார் த. குணசேகரன், மேலப்பாதி என். ராஜி, விருத்தாசலம் வி. பிரபாகர், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

★ ஏன் சார், கேளுங்கள் சொல்லப்படும் பகுதி வரவில்லை? அதற்காகத்தானே கோகுலம் வாங்குகிறோம்? - சாத்தூர் மா. ஏழுமலை, திருச்சானூர் வா. ஜானகி, தேப்பெருமாபுரி வா. நல்லப்பன், துறையூர் மா. முத்துரத்தினம், மற்றும் பலர்.

★ ஓவியக் கலையில் உலக அளவில் உயரப் போகும் குட்டிப் பையன் உமரின் சாதனைக் கட்டுரை கோகுலத்தின் தனிச் சிறப்பு. - மறைமலைநகர் தா. முஸ்தபா, திருமங்கைநல்லூர் வெ. சுக்கூர், பட்டாமணியூர் அ. சையத் பாட்சா, மேலப்பாதி நாகராஜன், சென்னை - 116 கி. சிவா, ஏழுகிணறு என் பாலாஜி.

★ 'காட்டில் கிறிஸ்மஸ்' எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டிய அருமையான கதை! - தேனூர் மா. பாக்கிய லக்ஷ்மி, சாத்தூர் வா. ஜெயலக்ஷ்மி, மாயூரம் வா. சூர்யமூர்த்தி, நன்செய் இடையார் த. குணசேகரன்.

★ கிறிஸ்துமஸ் துளிகள், இதுவரை நாங்கள் அறியாத பல செய்திகளைத் தந்தது! - சமயபுரம் மா. கண்ணப்பன், தேரெமுந்தூர் வி. கிருஷ்ணமூர்த்தி, பாளையங்கோட்டை தா. மியான்மீர், திருநாகேஸ்வரம் தா. மணிவேல், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், நன்செய் இடையார் த. குணசேகரன், விருத்தாசலம் வி. பிரபாகர், கச்சிராபாளையம் ஆர்.கே. கோவிந்தராஜ்.

★ 'புவனா தேடிய புதையல்' விறு விறுப்புக்கு ஒரு முன் மாதிரி. இப்பவே முழுக் கதையையும் படித்துவிட வேண்டும் போல் இருக்கு! படங்கள் மிக அருமை. - தில்லையாணம் வா. சங்கரி, மின்னூர் மா. பெரியநாயகி, தேனூர் வா. நவநீத கோபால், வெள்ளிக்கிடங்கு ஆர்.எம். ஆனந்தி, ஆர். கே.புரம் ஆர். கௌசல்யா, பவித்ர மாணிக்கம் டி. முருகேஷ், சைதை பி. கார்த்திகேயன், வேலூர் சுகன்யா நண்பர்கள், திருச்செங்கோடு இராக, தென்றல் நிலவன், விருத்தாசலம் வி. பிரபாகர்.

★ மூஞ்சுறைப் பற்றி எத்தனை தகவல்கள்! இனிமேல் மூஞ்சுறைக் கல்லால் அடித்துக் கொல்ல மாட்டோம். நன்றி கோகுலம்! - காரைக்கால் மா. தோணியப்பன், சீர்காழி வா. தெய்வநாயகி, உப்பிலியாபுரம் வி. சின்னப்பா, மேட்டுப்பாளையம் கி. மதுராம்பாள், நெய்வேலி எம். தங்கமுத்து, தேவனாங்குறிச்சி பா. வடிவேல், பவித்ர மாணிக்கம் டி. முருகேஷ், நன்செய் இடையார் த. குணசேகரன், விருத்தாசலம் வி. பிரபாகர், திருச்சி உஷாமுத்துராமன், விசலூர் ஜி. கிருஷ்ணன், மற்றும் பலர்.

★ புதிர் போட்டி கோகுலத்தின் தனிச் சிறப்பு. எத்தனை வகை போட்டிகள்! பாராட்டு! - சிதம்பரம் மா. சிட்டிபாபு, திருமங்கலம் வா. சிவராம கிருஷ்ணன், புதுடில்லி மா. கலைவாணி, திருச்செங்கோடு இரா.க. தென்றல் நிலவன், விருத்தாசலம் வி. பிரபாகர்.

★ ஏன் சார், சாப் பீட் சீத் கதையில் முதலில் பியட்டாக இருந்த கார் கடைசியில் அம்பாசிடரானது எப்படி? வாசகர்கள் தூங்குகிறார்கள் என்ற நினைப்பா? - போத்தனூர் வி. தேவராஜன், கலம்புராஜாபட்டி ஏகராஜ், ஒசூர் தீபலக்ஷ்மி.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



0136 C/95 M TM